# ஸ்ரீ சிவானந்த சங்கீர்த்தன
# பஜனை மாலையும்
# சொற்பொழிவுகளும்

தொகுத்தவர்
ஸ்ரீ கவிரத்ன மீனாட்சி அம்மாள்
சென்னை.

42

பதிப்பாளர்
யோக வேதாந்த ஆரண்ய விஸ்வ
வித்யாலயம்
சிவானந்தநகர், ஆனந்தகுடீரம் போஸ்ட்
ரிஷிகேசம் ஹிமாலயம்
1956
ரூபாய் இரண்டு

T03949
R001J01

சிவானந்த பதிப்புக் கழகத்திற்காக
சுவாமி சிதானந்தரால் வெளியிடப்பட்டது.

1954. ஜனவரி முதற்பதிப்பு. 1000, காப்பிகள்
1956. நவம்பர். இரண்டாம்பதிப்பு 1000, ,,

உரிமை பதிவு செய்யப்பட்டது

OM

THIS THIRD EDITION
OF THIS INSPIRING BOOK OF SONGS

is printed and published
in sacred memory of
SRi V. KALYANASUNDARAM
brother of the author Sri Meenakshi,
and a great devotee of Guru Bhagawan.
He attained the Lotus-Feet of the Lord
on 2-5-1956, at the age of 50.
*May his soul rest in Param Dham*

Printed at the Yoga-vedanta Forest Universty Press Sivananda Nagar P.o. Ananda kutir Rishikesh Himalayas. 1956.

ஓம்

## பதிப்பாளர் முன்னுரை

உலகம் இயங்குவது திருவருளால்தான். திருவருட் சக்தியே உலகத்தை உய்விக்கிறது. அவ்வருளில்லையானல் உலகில் எப்பொருளும் அசையாது. அணுவுள்ள பொருளையும் அண்டசராசரங்களாக ஆக்கும் சக்தி அவ்வருளுக்குத்தான் உண்டு. அவ்வருளை அள்ளி வழங்குவதற்கு ஓர் குருவேண்டும். அக்குருவே கடவுளும் திருவருளும் ஆவர்.

ஆகவே குருவருளும் உயிர்க்கு ஒப்பற்ற உறுதுணையாகிறது. அக்குருவின் திருவருளே உயிரைச் சிவானந்தக்கடலில் திளைக்கச் செய்கிறது. எனவே அக்குருவின் திருவடிக்கமலங்களைத் துதிப்பதே நம்மனோர் கடமை. அப்படி ஏத்துவதால் நம்முடைய பாசங்களெல்லாம் நீங்கும்; உலகப் பற்றுக்களெல்லாம் அறவே அகலும்; குருவின் பாலுள்ள அழியாப் பக்தி வளரும்.

நம்முடைய பற்றுக்களெல்லாம் நம்மைவிட்டு அகல வேண்டுமானல் பற்றற்றவனுகிய அப்பரம குருவின் திருவடிகளையே பற்றுகப் பற்றவேண்டும்; அவர்பணி செய்யவேண்டும்; அவரை எக்காலத்தும் இடைவிடாது துதித்தல் வேண்டும்.

இம்முறையை, தானும் உலகமக்களும் கையா ... ணட்சி அம்மையார் அவர்

T003949

கள் தம்குருநாதர்மீது பக்திப் பாமாலைகளைச் சூட்டியுள்ளார்கள். அவ்வம்மையார் குருதேவர் அவர்களிடம் பேரன்பு கொண்டவர்கள். குருமகராஜ் அவர்களின் ஆணையின்படியே தம் வாழ்க்கையை நடத்துபவர்கள்.

அம்மையார் அவர்கள் பாடியுள்ள தெய்வமணம் கமழும் தோத்திரப் பாக்களை நாமும் தினமும்பாடி குருமகராஜ் அவர்களின் திருவருளுக்குப் பாத்திரராவோமாக. அதனல் எய்தும் பயனை நாம் அனைவரும் பெற்று இன்புறுவோமாகவும்.

"சிவானந்தர் சீரடி வெல்க"

ஓம் தத் ஸத்

ஆனந்த குடீரம்<br>ரிஷிகேசம்<br>21-11-56

பதிப்பாளர்<br>சுவாமி சிதானந்தா

Q232SV
J6

## PREFACE TO SECOND EDITION

It is highly encouraging that a Second Edition of this popular work has been published so soon after the first. The book has had wide circulation in its first edition; and many devotees have eagerly studied it. There is a peculiar charm in the method of conveying spiritual ideas through the medium of music. The heart opens for the music and receives into it lofty philosophic ideas, too.

The devotional zeal with which these songs have been composed and sung by Sri Meenakshi Ammal has infused into them a living inspiration, which anyone who sings them will oneself feel.

It has been the earnest desire of Sri V. Kalyanasundaram and Sri Meenakshi to place the second edition of this book as their New Year Offering at the lotus-feet of Sri Gurudev H.H. Swami Sivanandaji Maharaj, and as the first Ahuti in the Jnana Yagna to fulfil the Divine Life Society's endeavour to present one book every month during 1955.

While conveying to Sri Meenakshi the gratitude and indebtedness of aspirants for this priceless gift of theirs, we pray to the Almighty Lord our Gurudev to bless her with health, long life, peace, prosperity and Kaivalya Moksha!

Publishers.

ஓம்

## மூன்ரும்பதிப்பின் முகவுரை

பரந்த இப்பாரத பூமியின்கண் பலகோடி மக்களை பவசாகரத்திலிருந்து கரைஏற்றி காப்பாற்றி ரக்ஷிக்கவென்று பகவான் நாம ரூபம் ஏற்று சத்குருநாதர் என்னும்வடிவில் அவதாரம் செய்து பக்தி ஞானம் யோகம் என்னும் மார்க்கங்களை உபதேசித்து வருவது நம் தேசத்தின் பெரும் பாக்யமே யாகும்.

இப்பரம்பரையில் ஹிமாலய முனிவர் என்னும் ஸ்ரீ சிவானந்த ஸரஸ்வதி ஸ்வாமிகள் நமக்குத் துணைசெய்து வழிகாட்டவென்றே அவதரித்த புண்ய புருஷராவார். அவருடைய திவ்ய சக்தியும் திருத்தொண்டும் நம்நாட்டாரை மட்டுமின்றி அயல் நாட்டு மக்களையும் வியக்கச் செய்விக்கின்றது. ஸ்ரீ ஸ்வாமிஜீ அவர்களின் அனுக்ரஹ சக்திதான் ஒன்றுமறியாத அடியேன் மூலம் இந்த பஜனை மாலையை தொடுக்கச் செய்தது. இதின் இரண்டாவது பதிப்பானது இவ்வளவு சீக்கிரத்தில் வெளிவரக் காரணம் தமிழ்மக்கள் மனதில்தோன்றிய ஆர்வமும் குருநாதர் கருணையுமே யாகும்.

இப்படிக்கு
சிவானந்த மீனக்ஷி

# THE SIVA THAT I SAW

*( V. K. Sundaram, Madras )*

It was on the 8th February 1938, that the writer of this article had the unique oppurtunity of having the Darshan of H. H. Swami Sivananda, the founder and President of D. L. S. Rishikesh, Himalayas.

The idea behind the presentation of this article is to bring to mind the experiences in life of the writer after Darshan of His Holiness.

While on a pilgrimage tour on Northern India of the various places and returning from Lakshamana Jhula, the famous steel rope bridge across the Ganges at the foot of the Himalayas on the above date, it was suggested by the driver of the *tonga* that we could see the Madrasi Swamiji, if we wished, since there was a little time that was available to us to catch the train at Rishikesh for Haridwar, where we had taken a temporary lodging during our visit to that place. The party consisted of the writer, employed in the Southern Railway at Guntakal, his mother and younger sister both widowed. The very purpose for undertaking the pilgrimage was to show them round the various pilgrimage centres so that they can get some relief from the day-to-day life and surroundings.

It was about 10 a.m. when the *tongawalla* stopped his cart on the road west of the Ashram which

consisted of one room which is now used as the out-patients dispensary by the Society. The suggestion from the *tonga* man who volunteered to show us the Swamiji was immediately availed with great joy and surprise.

The then Ashram (namely) where the Swamiji was staying was at a higher level than the pathway leading to it from the road and at a distance provided and we had to stop there to get access. It was told that the time was over for visitors to see the Swamiji and he could only be seen in the afternoon. This came to us as a bolt from the blue shattering our hopes of having his Darshan.

Ingeniously enough the writer, as though by intuition shouted boldly "Swamiji" twice to attract if possible the attention surprisingly enough one tall gentleman clad in yellow robe came out of the room and beckoned to us to come up through the flight of steps. Before we could reach the top of the stairs, Swamiji, walked a few steps from the door-step of the Ashram and stood then in all his glory and enquired about us.

Words failed to come out from our mouth at that time as we were filled with feelings of great joy at his very sight and kind enquiries. Instead, tears gushed from the eyes expressing our feelings at his first sight. A little after we managed somehow to express ourselves to his enquiry. The meeting lasted nearly ten minutes and these ten minutes, ever remain green in our memories as this turns to be our

day of salvation and deliverance. He offered to answer questions and elicit the same from us. Of course this was done only when he delivered very inspiring instructions as to our daily conduct in life with reference to each individual, a family, a village and the world at large. His question was perhaps intended to find out if we had correctly understood his instructions or not. There was a doubt which was answered immediately whether any person, male or female, could reach heaven or attain Moksha in the absence of a son. He dismissed this false notion that is very prevalent and catigorically a Hirmid that every one should seek his own salvation and should not expect his son to help him in this matter. He finished his chat with a presentation of a bundle of small booklets and pamphlets published by him for our benefit. In the meantime the *tonga* man hurried up our return, to the carriage on the road threatening that the connecting train to Haridwar will be moving off. We therefore returned immediately after paying homage and thanksgiving. After our return to Guntakal (the place of employment) it was given to us to enrole as member of the D. L. S. and subscribing to the D. L. Magazine.

It was not until Oct., 1950, i.e., a period of twelve years that it was given to take the Darshan of Swamiji again although we were in touch through correspondence. At Madras, on account of the various engagements at different centres during his stay it was not practicable to see him at close quarters which we were longing for. Despite this a small Padapooja

function was got up and performed at Ramanuja-kutam, Triplicane. Thanks to the help rendered by Swami Paramanandaji, the senior disciple of His Holiness. To add to this Swamiji's health had been greatly effected by the train journey, procession not to speak of the thronging of thousands of devotees and admirers at Madras.

His inspiring and soul-elevating lectures at various centres combined with Nama Sankirtan re-newed and revived our great admiration of His Holiness and since then it was resolved to visit him on the birthday every year on each September. For the first two years 1951 and 1952 only the ladies viz, mother and sister had the fortune to be present for the birthday celebrations and also spent sometime of theirs in the company of His Holiness following the day-to-day celebration in the Ashram.

It wan given to us to be present during 1953 birthday celebrations with family and children and to receive the blessings in person. At the command that came forth from H H. the writer undertook to present himself every birthday since then.

During these sixteen years of the life of D.L. Society it has grown stronger and stronger like the banyan tree which sprouts from a tiny seed into a huge tree, giving shade and protection to those who seek shelter under it. To add to this it has given birth to many more around it like the famous banyan tree at Adayar, Madras.

It is not within the competence of this small individual to narrate the wonderful work, the society is doing as it will be like trying to measure the quantity of water in the high seas or count the number of stars in the sky.

It is most gratifying to note that one more social and spiritual worker has been added to the band of workers in the Ashram. Various centres in India and abroad in the person of Sivananda Pratidhwani, Srimati Vijayalakshmi of Madura who is verily an incarnation in the words of Swamiji for the emancipation of spiritual uplift of humanity.

The recent news of the ill-health of His Holiness was received with great concern by all his admirers and disciples in India and abroad. What a relief it gave to everyone who visited His Holiness to see him back in his normal health and ever jovial mood during the two days of His Birthday celebrations. May the D L S. with its founder-President, the band of workers who deserted their likes for the upliftment of the ignorant living masses of humanity, live long and prosper.

Lord Vishwanath, the presiding Deity of the Ashram will surely shower His choicest blessings on all.

Om Shanti ! Om Shanti !! Om Shanti !!!

## ஸ்ரீ குருத்தியானம்

சென்றாயோ கைலைகிரி தரிசிக்கலாம் பிரபுவே
கண்டாலோ கர்மமல கட்டறுமாம் கேள் மனமே
ஒன்றாகிப் பலவாகி உணர்வாகி விளங்குகின்ற
பெருங் கருணைப் பேரின்பம் பெறலாம் வா அவர்
அருளாலே

### பாட்டு

சந்தனக் காட்டுக்குள்ளே கந்தனைக் கண்டு
கொண்டேன்—என்ற மெட்டு

1 பாஹி சத்குரோ பாஹி ஜெகத்குரோ (மாம்)
பாஹி சிவானந்த
யோகி ஹிமாலய நாயக சத்குரோ பாஹி
பாஹி சம்போ சரணம் சத்குரோ (பாஹி)

2 ஆனந்த குடீரத்தில் மோனமுதற் பொருளை
தியானித்து உள்ளம் குளிர்ந்தேன்
ஞான பரம்பொருளான சிவானந்த நற்குரு
நாதரடி நம்பிப் பணிந்து நின்றேன்.

3 எங்கும் நிறைந்தது எவரும் காணாதது மங்கள
மூர்த்தியது (சிவானந்தம்)
பங்கயத்தயன்மாலும் பார்க்கக் கிடைக்காதது
பரிபூர்ணமாய் நிறைந்தது சத்குருவது

4 அன்னை தந்தை குரு தெய்வமுமாகியது அவ
தாரம் செய்தது சிவானந்தம்
முன்னை வினையகற்றி முக்தியளிப்பேனென்று

கண்ணைத் திறந்தளித்தது கருணையுள்ளது.

5 காட்டைத் திருத்தி (மனக்காட்டைத்) புண்
ணிய நாட்டை அமைத்ததிலே
வீட்டைக் கொடுத்த தேவனை (ஞான மெய்வீட்
டைக் கொடுத்த தேவனை)
கூட்டை விட்டென்னை வெளி யோட்டிய
பாதனை ஏட்டுக் கடங்கா இன்ப
எங்கள் குரு நாதனை (ஆனந்த குடீரத்தில்).

THE TANJORE MAHARAJAH SERFOGI'S SARASWATHI MAHAL LIBRARY

## ஸ்ரீ சுவாமி சிவானந்த ஸரஸ்வதி அவர்களின்

# 70வது பிறந்த தின விழா

## ஸ்ரீ சுவாமி சிவானந்த சரஸ்வதியின் வரலாறும் வாழ்வும்

பாரத நாட்டில் தமிழகத்தில் திருநெல்வேலி மாவட்டத்தில் பத்தமடை கிராமத்தில் 8-9-1887ல் பிறந்தார். இந்த மாவட்டத்தில்தான் வீரன் கட்டபொம்மனும் கவிஞன் பாரதியும், தியாகி சிதம்பரமும் ஜனித்தார்களென்பது இங்கே குறிப்பிட வேண்டியிருக்கிறது. தகப்பன் வெங்குவய்யர், தாயார் பார்வதி அம்மாள். குப்புஸாமி என்பதே சிவானந்தரின் முன்னுள் பெயர். இவரே இப்பொழுது ஹிமாலயத்தில் ரிஷிகேசத்திலிருந்து கொண்டு உலகிற்கு சிவானந்தத் தேனை ஊட்டி வருகிறூர்.

பிள்ளைப் பிராயத்திலேயே பக்திப் பாடல்களை பெற்றோர் வாயிலாகக் கேட்டுச் சிந்தித்து வந்தார்.

திருநெல்வேலி ஜில்லா எட்டையாபுரம் அரசர் உயர்நிலைப் பள்ளியில் கல்விபயின்றூர். 1903ம் ஆண்டு மெட்ரிகுலேஷன் வகுப்பில் முதன்மையாய்த் தேரினர். பிறகு திருச்சி எஸ் பி.ஜி கல்லூ

ரியில் சேர்ந்து படித்தார். தஞ்சை வைத்தியக் கல்லூரியில் அதன்பின் படித்தார்; வைத்திய பட்டம் பெற்றார். இச்சமயம் இவர்தந்தை இறந்தார். பின் குப்புசாமி மலாயா வந்தார். ஜோகூரிலும், சிரம்பானிலும் 10 ஆண்டுகள் டாக்டராக பணியாற்றினார். அப்போது ஒருமாத சஞ்சிகைக்கு ஆசிரியராக இருந்து நடத்தினார். ஓயாது பஜனை செய்வார். அருட்பெரியார்களின் சாஸ்திர நூல்களை துருவி ஆராய்ந்தார்.

1923ம் ஆண்டு டாக்டர் பதவியை உதறித்தள்ளினார். இந்தியாவுக்குத் திரும்பினார். காசியாத்திரை சென்றார். வழியில் பூனா, நாசிக், பந்தர்பூர் போன்ற தலங்கள் அனைத்தையும் சுற்றினார். கங்கை நதி தீரத்தில் தலாஜ் என்ற ஊர் போஸ்ட் மாஸ்டர் வேண்டுகோளால் ரிஷிகேசம் வந்துசேர்ந்தார். சிருங்கேரி சந்நியாச மடத்தைச் சேர்ந்த துறவி விஸ்வாநந்தரின் நட்பு கிடைத்தது. அம் மகானே குப்புசாமிக்கு "சுவாமி சிவானந்த சரஸ்வதி" என்ற திருநாமத்தைச் சூட்டினார்.

பின்னர் சிவானந்தர் லக்ஷ்மண ஜூலாவில் ஒரு குடிசையில் கடுந்தவம் புரிந்தார். அதன்பின்னர் ஸ்வர்க்காஸ்ரமத்தில் தங்கி தபம், ஜபம், தத்துவ ஆராய்ச்சி முதலியவற்றில் ஆழ்ந்தார். இப்படிப் பத்தாண்டு கழித்திருந்தார். சிவானந்தர் தம்மை பரமனுக்கே ஆளாக்கிக்கொண்டார். தன்னையே எல்லா ஜீவான்மாக்களிலும் கண்டார். அப்

போதே "சத்திய சேவாஸ்ரம' வைத்தியசாலை நிறுவினர்.

1930ல் கைலையங்கிரிக்கும் மானசரோவர் அருவிக்கும் சுமார் 500 மைல் கால் நடையாகச் சென்று தரிசித்து வந்தார். கீதை உபநிஷத் உண்மைகளை ஆங்காங்கே மக்களுக்கு உபதேசித்தார். சுவாமிகள் பாரத நாடு முழுவதும் மும்முறை சுற்றி ஞானோபதேசம் புரிந்தார்.

முதல் தடவை யாத்திரையிலிருந்து திரும்பியதும் சிவ கிராமத்தில் ஆனந்த குடில் எழுப்பினர். 1936ம் ஆண்டு தெய்வீக வாழ்க்கைச் சங்கத்தை (DIVINE LIFE SOCIETY) நிறுவினர். இது இன்று உலகெங்கும் பல கிளைகளாய் விரிந்துள்ளது. "தெய்வீக வாழ்க்கை" என்னும் ஒரு ஆங்கில மாத சஞ்சிகையும் நடத்துகிறார். சுமார் 300 நூல்களுக்கு மேல் சுவாமிகள் இதுவரை இயற்றி வெளியிட்டுள்ளார்.

தெய்வீக வாழ்க்கைச் சங்கம்
(பினங்கு கிளை)
11, கோட் லீப் ரோட், பினங்கு.



Sri Swami Sivanandaji Maharaj

# MAY HIS SOUL REST IN PEACE



On 2nd May, 1957, falls the first anniversary of the day on which Sri V. Kalyana Sundaram attained the Lotus-feet of the Lord. He was employed as a Loco Foreman in the Integral Coach Factory, Madras, and was one of the greatest devotees of Sri Gurudev Swami Sivanandaji Maharaj. Inestimable were the services rendered by him to the cause of Divine Life. May His Soul rest in the Param Dham.

ஸ்ரீ சிவானந்த சிஷ்யன் ஸ்ரீ V.கல்யாண சுந்திரம்
Elec. Foreman I. C.F. செக்ரெடரி
ரயில்வே காலனி சத்சங்கம், பெரம்பூர், மதரூஸ்

(1) அவர் பிறவியிலேயே நல்ல கர்மயோகி. உத்தம பக்தர். ஆகவே உத்தியோகத்தைக் கவனித்து உழைப்பதில் நல்லபேர் எடுத்தார். பக்தி யோகத்தை துடர்ந்து சாதித்தார் எந்த வேலையை எடுத்தாலும் விடாமுயற்சியுடன் தன்னுடல் நலம் பாராமல் வேலையை செய்துமுடிக்கும் குணம் உள்ளவர் ஆபீஸர்களிடம் நன்மதிப்பு, சகபாடிகளிடம் அன்பு, ஏழைக் கூலிகளிடம் ஆதரவு அபிமானம் கொண்டு தனக்குள்ள வேலை எதுவாயினும் அதி சுருசுருப்புடன் சீக்கிரம் செய்துமுடிக்கும் சக்தியுள்ளவர்

(2) M.S.M.ரயில்வேயில் ஹுப்ளியில் இருந்தபோது South Indian Association ஸ்தாபித்து பகவன்நாம கீர்த்தனை பஜனை உற்சவம் நடத்தி ஜனங்களுக்கு பக்தியையும் கர்மயோகத்துடன் அனுசரிக்கச்செய்து தான் ராப்பகல் பாராது ஜனகரைப்போன்று உத்தியோகத்தையும் பக்தி யோகத்தையும் ஒருங்கே நடத்திக்காட்டினார், ஸ்ரீ ராமனை போன்று உத்தமராய் திகழ்ந்தார்.

1938ல் ஸ்வாமிஜீயை தரிசித்து அவர் உபதேசப்படி நடப்பதுடன் பலரை ஒன்றுசேர்த்து பெரம்பூர் S.I. ரயில்வேகாலனியில் சத்சங்கம் ஒன்று

நிறுவினர் 1945 மானிடர் யாவரும் புண்யச்ரவணம் செய்ய வேண்டி பலபடித்த பெரியாரைக்கொண்டு ஸ்ரீமத் ராமாயணம்- கீதாப்ரவசனம்- பாகவதம்- மஹாபாரதம் முதலிய புண்ணியச்ரவணம் வாரம் 2 முறை நடத்த ஏற்பாடு செய்து நடத்தியுள்ளார், நடந்துவருகின்றது. ஸ்வாமிஜீ அருள்பெற்று வீட்டை வைகுண்டமாக்க நினைத்து ப்ரதி சனிக் கிழமை ஏகாதசி தினங்களில் திவ்யநாம சங்கீர்த் தனை செய்ய ஏற்பாடு செய்து பொறுப்பான ஒரு உத்தியோகத்தை வகித்த போதிலும் அதற்கிடை யில் இந்த நற்காரியத்தையும் அலுயாசமாக நடத் தினர். எல்லாம் ஆண்டவன் செயல் என பெரிய சம்சாரியான போதிலும் பற்றுதல் இல்லாது எல் லோரும் இன்புற்றிருக்க வேணுமென்று நினைத் தார். கல்பக விநாயகரை ரயில்வே காலனியில் ப்ரதிஷ்டிக்க வேண்டிய ஏற்பாடு செய்தார்.

அனுபவசாலியான ஆள்தேவை என்று I.C.F. அழைத்ததினல் 19-7-52 கோச் பாக்டரிக்கு உழைக்க வந்தார். சார்ஜ்மேன் A.E.D.E ஒருவரு மில்லாமல் 4 ஆள் வேலையை ஒருவராக முதல் முத லில் அவரே செய்து வந்தார். பாடுபட்டு உழைப்ப துடன் பகவான் பக்தியை விடாமல் இங்கு I.C.F. காலனியில் M.கணபதி அய்யர் தலைமையில் ஸ்ரீ ராமநவமி உற்சவத்தை வெகுவிமரிசையாக நடத்தி னது மறக்கற்பாலது எந்த நேரத்திலும் யாவருட

னும் சமத்வமாக பழகும் ஞான சீலர். பற்றுதல் அற்றவர் பரம பக்தர்.

தினசரி பாராயணம் பூஜை செய்யாமல் தவறிட மாட்டார் பல மெம்பர்களைச்சேர்த்து D.L S. பிராஞ்சை ஒன்று 25. ஸ்ரீ விலாஸ் மைலப்பகிராமணி தெருவில் ஏற்படுத்தினர். இப்படிப்பட்ட தீரர் தன் காரியாலய அலுவல்களைச் செய்யும் புனித வேளையிலேயே ஒருவிபத்துக்குள்ளாகி சுமார் இரண்டு வருஷகாலம் ஆஸ்பத்திரியில் இருக்க நேர்ந்தது, தம் கடமைகளைச் செய்ய என்றும் தவராத இப்புண்ணியவானின் பெண்ணுக்குக் கலயாணம் செய்விக்கவும் பிள்ளைக்கு உபநயநம் செய்விக்கவும் கடவுள் இவருக்கு எல்லோரும் ஆச்சரியப்படும் வண்ணம் புற்றுயிரளித்தார். அந்த இரண்டு கடமைகளும் முடிந்ததும் ஸ்ரீ கல்யாண சுந்தரம் 2-5-56ல் பகவானுடைய திருவடியை அடைந்தார். அவர் ஆத்மா சாந்தியடையுமாக!

THE TANJORE MAHARAJAH SERFOGI'S SARASWATHI MAHAL LIBRARY

சச்சிதானந்தக் கடலில் வெண்ணிலாவே தங்கும்
சிவானந்தம் (வெ)
எங்கள்குல தெய்வமது (வெ) எங்கேனும நீ
கண்டதுண்டோ (வெ)
இன்ப வெள்ளவாருதியில் (வெ) எழுந்த சிவ
ஜோதியது (வெ)
தவழ்ந்து வளர்ந்தது (வெ) அது தாம்ரவர்ணி
தீரத்தில் (வெ)
துன்பம் துலைப்பேன் என்று (வெ) துவஜம் கட்டி
நின்றது (வெ)
சோகம் சிவோஹம் என்று (வெ) சொல்லி விளை
யாடும் அது (வெ)
கண்டதுண்டோ எங்கேனும் நீ (வெ) இந்த ஸ்ரீ
கைலையங்கிரி மீதில் (வெ)
சொல்லவொண்ணு சுகம் தரும் (வெ) அதை
ஜோதி சிவானந்தம் என்பார் (வெ)
அள்ளிக்கொடுக்கும் அன்பை (வெ) ஸ்ரீ ஆனந்த
குடீரில் தங்கும் (வெ)
ஆணவமும் மலத்தை (வெ) அருத்துக் கரை
சேர்த்து (வெ)
சொன்னசொல் பிசகாது (வெ) துரிய வெளிச்சம்
அது (வெ)
தேசங்கள் எங்கும் புகழ் (வெ) சிவானந்த
சந்த்ரன் என்பார் (வெ)

THE TANJORE MAHARAJAH SERFOJI'S SARASWATHI MAHAL LIBRARY + TANJORE +

3949

## விநாயகர் ஸ்துதி

தண்டனிட்டேன் என்று சொல்லடி என்ற மெட்டு

ராகம்: பிலஹரி தாளம்: ரூபகம்

பல்லவி.

குட்டிக்கொண்டு தெண்டனிடுவோம் கைகூப்பி நின்று
இஷ்டகுல தெய்வமான எங்கள் கணேசருக்கு நித்தியம்

அநுபல்லவி

கரி முகாம் புஜ பிரசன்ன அருள்வர ப்ரசாதருக்கு
கரமைந்துள்ள ஏகதந்த கெஜகர்ண விநோதருக்கு (குட்டி)

சரணம்.

1 அஷ்டதிக்கும் புகழ்பெற்ற அனாத பிரமச்சாரியர்க்கும்
அன்னை சிவகாமி மகிழ் அருமை புதல்வருக்கும்
சிஷ்டர் தொழுதேற்றிடும் ஜகத்ரய முதல்வருக்கும்

தேஜோ ரூபமாய் விளங்கும் தேசிகேந்திர செல்வ
ருக்கும் (குட்டி)

2 மோதக ஹஸ்த ஸ்வரூப மூஷிக வாகனருக்கு
மஹா மேருமீதில் ஒருகொம்பொடித்து கிரந்தம்
கிறினேருக்கு-ஆதிபரனோடு அன்னையை
அரை நொடியில் சுற்றினேருக்கு ஆறுமுகன்
வரும் முன்னே அக்கனி தன்னை வாங்கினே
ருக்கு (குட்டி)

—0—

## ஸ்ரீ சரஸ்வதி ஸ்துதி

ஏமாடலாடிஞ நீமாடலேகானி என்ற மெட்டு

ராகம்: காம்போஜி தாளம்: ஆதி

பல்லவி

அம்பாள் சரஸ்வதியே அடிபணிந்தேன் உன்னையே
அனுக்ரகம் செய்தருள்வாயே (அம்)

அனுபல்லவி

விந்தையுடனே வேதன் நாவில் அமர்ந்த தாயே
சுந்திரரூபியே துணைசெய்திடுவாய் நீயே (அம்)

சரணம்.

1 போதம் சற்றும் இல்லாத பேதைச்சிறுமி
என்னை
ஆதரித்தருள் புரிவாயே
ஜோதிஸ்வரூபிணியே துலங்கும் அயன்பாரியே

வெள்ளைக்கலையுடுத்தும் வீணா கானப்ரியே
தாயே (அம்)

2 ஆணி முத்துக்கள் பூண்ட வாணி கல்யாணியே
அம்ஸ வாகனப்ரியே நீயே
ஸகல ஸாஸ்திரங்களும் தானாய் விளங்கும் தாயே
ஸாதுக்கள் ஹ்ருதயத்தில் ஸந்ததம் வசிப்பாயே
(அம்)

—0—

தசரத ராஜ குமாரா என்ற மெட்டு

பல்லவி.

குஞ்சரி வள்ளியுடன் வாரும்—முனிவோரும்
மலர் தூவும், மாமயில் ஏறிடும் நீரும் (குஞ்சரி)

அனுபல்லவி

காமனை தஹித்தவன் களித் தளித்தவனே
மாமனை போன்ற கம்பீரனும் குஹனே
ஆனை முகவனுக்கு உடன் பிறந்தவனே
வேதனைச் சிறையில் இட்டவனே, ஆறுமுகனே
நிஜவரனே பஜிப்பவர்களுக் கெளியவனே
(குஞ்சரி)

1 திவ்ய செந்தாமரை திருவடி தரணும்
ஐயனுன் பாதத்தை நீ அளித்திட வரணும்
ஆடும் மயிலில் ஏறி-அசைந்தாடி வரணும் நீ
கண்கள் பன்னிரெண்டுகொண்டோனே
முருகோனே
பெருமானே ப்ரீதியுடன் விரைவில்தானே
(குஞ்சரி)

2 (உன்னைக்) கண்டு கை கூப்பி நான் கலங்கி
நின்றேனே
என்றைக்கும் இருப்பவன் இன்பா நீதானே
தொண்டர்கள் கண் குளிர்ந்திடும் தண்டாயுத
தரனே
தெண்டனிட்டேன் உன்னைத்தானே சிறு
வோனே
குணவானே தேவ சேனுபதி யானவனே நீ
(குஞ்சரி)

—0—

காவடி எடுக்கும்போது பாடும் காவடிச் சிந்து
மெட்டு

1 ஆடும் மயிலில் ஏறி வாரும்—என்னைக் காரும்
உந்தன் அரவிந்த பொற் பாதம் தாரும்
ஹரன் பாலா வடிவேலா குஹா
நீல மயில் வாகா உன்னை நித்தம் துதிப்பவன்
பாரும்
இந்த மித்யை உலக மாய்கை தீரும் (தீரும் தீரும்)
2 நித்ய சுகானந்தம் தாரும் குரு நீரும்
பரிசுத்த ப்ரணவ பொருள் கூறும்
அசுத்தன் என்னை இத்தினங்கள் மெத்தப்
பரிசோதித்ததேன் உத்தமனே இனி போதும்
உயர் தத்துவ மெய் போதம் தாரும்
3 குக்குடக்கொடி யுடையோனே குமரோனே
குரு மூர்த்தி என பேர் கொண்டோனே

ஸ்ரீ கோவிந்தன் மருகோனே உனைத்தானே
சரணம் என்றேனே குன்று தோறும் அமர்ந்
தோனே
உன்னைக் கூப்பிட்டு கை கூப்பினேனே
4 பக்த பரி பாலனன் தானே பழனி பால
தண்டாயுதத்தோனே
அவித்தை துலைக்கும் பெருமானே அசுரர்
வேரறுத்த சிறுவோனே-முனிபூசுரர்கள் தொழ
முறையோடிரு புறமும் ஒளிர்மட மாதர்கள்
முக மலர்க்கு கதிரோனே என்னை மோசம்
செய்யாதே
முதல் வோனே

—0—

## அம்பாள் ஸ்துதி

ஆரூரு தியாகேச யாக சாலைக்கு வந்த அதிசயம்
என்ன சொல்வேன் என்ற மெட்டு

ராகம்: சங்கராபரணம் தாளம்: ஆதி

பல்லவி

நான் எங்கு சென்றாலும் நீ இங்கு நின்றாலும்
நற்றவத் தாய் நீ அன்றோ அம்பா சிவே சிவே
(நான்)

அநுபல்லவி.

கற்ற பெரியோர் போற்றும் காத்யாயனி
கௌமாரீ

பெற்ற குழந்தை சொல்லில் பிரிய மென்றுரைப்
பார் அம்மா (நான்)

சரணம்.

1 விண்ணோர் முனிவர் பணிந்தேற்றும்ப்ரணவ
தாரி
அன்னாள் அமரர் துயர் தீர்த்தாய் அகிலாதாரி
பாமாலை பூமாலை பரிவாய் அணிவாய் தேவி
என் குரு வாய் தாய் தந்தை ஆன குணகரி சிவ
சங்கரி (நான்)

2 சொன்னேன் பிறவி பல அன்னாய் எடுத்தலுத்
தேன்
மண்ணிற்படும் துயரம் எண்ணில்லா தனபட்
டேன்
கண்ணே கருணை முகில் அன்னாய் உன்னையடுத்
தேன்
இன்னும் சோதிக்காமல் வந்தென்னை அழைத்து
செல்வாய் (நான்)

—0—

## கண்ணன் பாட்டு

ஆஹா ஆகட்டும் ஆகட்டும் கள்ள கிருஷ்ணா என்ற
மெட்டு

1 ஓஹோ? உள்ளம் கவர்ந்தவன் கள்வனன்றோ?
ஓஹோ? உள்ளம் கவர்ந்தவன்
கண்ணனன்றோ?

ஓடிவந்து என் முன் நின்று ஒய்யாரமாய் குழல்
ஊதும் கோபாலனே (ஓஹோ)

2 சாய கொண்டையும் சாய்ந்த ஒய்யார நடை
மாயா மலர்ந்த கண் பார்வையும் மதி வதனமும்
ஜோதிவிட ஏது இங்கு நீ வந்தது ஓது
உண்மை பொருள் எது

3 நீங்கா தெங்கும் நிறைந்தொன்றாய் நீ ஸச்சி
தானந்த
மாயிருந்தும் பாங்காய்ப் பக்தர் மனோபீஷ்டம்
அத்தனையும் தரும் புத்ர சிகாமணி (ஓஹோ)

4 குழ ஆதி கோடி சூரியன்போல் வேடிக்கையாய்
பசு
கூட்டம் ஓட்டி ஆடி அர்த்த நிசியில் போய்
அன்னிய
ஸ்திரீகளை தன்னுள் வசம் செய்தாய் (ஓஹோ)

5 நாம ரூப மிரண்டற்றால், நாம் ஏகம் என்று அவர்
தான் உரைக்க சியாம சுந்தரா நீ என்னை தான்
வயக்கி வீணாய் வாதுக்கிழுப்பதேன் (ஓஹோ)

—0—

ஸ்வாமி விவேகானந்த என்ற மெட்டு

பல்லவி

ஸ்வாமி சிவானந்தஜீ ஸ்ரீலஸ்ரீ ஸ்ரீலஸ்ரீ (ஸ்வாமி)

அனுபல்லவி

ஸமரஸ ஞானோப தேச
ஸகுண நிர்க்குணோபதேச

சரணம்.

1 ஸத்சித் ஆனந்த போத
ஸத் குருவாய் அதீத
நித்தியானந்த தாத
நிர்மல நிர்குண ஸகுண
2 அத்வைத அகண்ட ஐக்யமார்க்க உபதேச
துர்குண காமாதி-நாச
ஸ்வரூப ஞான மருள்ப்ரகாச (ஸ்வாமி)
3 மாயமன இருள் அழிய
மகா வாக்ய பொருள் அறிய
மாந்தர்க் கொரு துணை புரிய (வழிபுரிய)
மனதில் உண்மை நிலை தெரிய
4 எல்லோரும் இன்புற்றிட
இடரும் பகைவேர் அகற்றிட
தொடரும் வினை இனி விட்டிட
துரிய ஞான ஒளி ஸ்வரூப
(ஸ்வாமி சிவானந்த ஜீ)

—0—

ராமபஜன கொரியா என்ற மெட்டு

பல்லவி.

ஸத்குருவே சரணம்—சரணம், சரணம் ஸ்ரீ

அனுபல்லவி

பக்குவமில்லா பதிதன் ஆகிலும் என்னை
அத்வைதன் ஆக்கியவா ஆனந் தரூபஸ்வாமி(ஸத்)

சரணம்.

1 நீயதுவானாய் என்னும் நிஜத்தை போதித்தவா
கஜத்தை ரக்ஷித்ததுபோல் கனிவுடன்
காத்தவா (ஸத்)
2 ஆனந்த ரகஸ்யமே, அறிந்த பஹிரங்கமே
தெரிந்த சிவானந்தமே, சின்மய போதமே(ஸத்)
3 கருணையினால் மக்கள் கஷ்டவினையறுக்க
கலியுகமதில் வந்தவா......கயிலைதேவா (ஸத்)
4 தக்ஷிணா மூர்த்திபோல், சொச்சப் பொருளைக்
காட்டி
துர்ச்சனரையும் காத்தவா, துரியா தீதா (ஸத்)
5 அகண்ட ஸச்சிதானந்த அற்புத சின்மயா
ஆத்ம சிவானந்தமே, அபயம் காற்பாய் (ஸத்)

—0—

ராகம்: கரகரப்ரியா தாளம்: ஆதி

வீடமு சாயவே என்ற மெட்டு

பல்லவி

சிவானந்த ஸரஸ்வதியே....ஜெகம்புகழ்
திவ்ய ஜீவிய பதியே....ஹே (சிவா)

அனுபல்லவி

கருணை உருவமாகியே.......கயிலைகிரி உலாவியே
பரம கிருபாநிதியே பஜனம்ருத வாரியே (சிவா)

சரணம்.

1 பாரினில் மானிடர் பாப ஸம்ஹாரியாய்

பக்தர்க் கொருதுணையாய் பாசபவம் விலக்கி
நானிலம் புகழ்குருவாய் நளினசொற் பொழி
வருள்வாய்
நவவித பக்தியுடன் ஞானமழை பொழிவாய்
(சிவா)

2 பவத்தைக் கடந்து பரசிவத்தை யடைவதற்கு
பல சமயங்கள் புகல் சுகத்தைத் தெரிவதற்கு
அவஸ்தை யுருமெய் அன்பருக்கு (அதுவன்றி)
அகங்கரித்துழல் (துஷ்டர்க்கும்) அகங்கரித்
துழல் பொய்யர்க்கும்
ஆன திருவிளக்காய் மோன பொற்கோவிலுக்
காய் (சிவா)

—0—

ராகம்: கதனகுதூகலம் தாளம்: ஆதி

ரகுவம்ச ஸுதாபூதி சந்தரஸ்ரீ என்ற மெட்டு

பல்லவி

ஸ்வாமி சிவானந்த ஸரஸ்வதியே
தானுகி வந்த தக்ஷிணு மூர்த்தியே (ஸ்ரீஸ்வாமி)

அனுபல்லவி

விண்ணவர்புகழ் வேதியருக்கருள்
மைந்தராகி வந்தார் பந்தமோசனியே (ஸ்வாமி)

சரணம்.

1 (திரு) நெல்லையம்பதியில் பிள்ளையாய் உதித்து
கள்ளமனப் பேய்க்கு காரணங்கள் பார்த்து
இல்லையே துன்பம் எதுக்கோ சிற்றின்பம்

வாதுக்கேகிடாமல் ஓதும் ஹரி மந்திரம் (ஸ்வாமி)
2 பாமரர்க்கும் உண்மை பக்தர்க்கும் பிரம்ம
ஞானியார்க்கும் கர்ம யோகியார்க்கும் தன்னை
தானறிந்திடும் தன்மை யோதிடும்
ஸாது சிகாமணி தாஸர்க்கபிமானி (ஸ்வாமி)
3 கலியுகம் தன்னில் கைலைகிரி தன்னில்
நிலையாக நின்று நீதிச் செங்கோல் கொண்டு
பாதி பெண்மயன் பங்கஜாசனன்
ஸ்ரீதரன் கீர்த்தனர் திவ்யஜீவ்யம் பண்ணும்
(ஸ்வாமி)

—0—

ராகம்: தந்யாசி தாளம்: ஆதி

ராதா கிருஷ்ணனை பஜனை செய் கிளியே என்ற

பல்லவி.

கருணை வுருவெடுத்து கயிலைகிரியில் வசிக்கும்
காருண்ய குருமூர்த்தி

அநுபல்லவி.

போதுமையா இந்த பூவுல கின்பம் (போதும்
போதுமையா யிந்த)
ஓதுமையா உண்மையான பேரின்பம் (கருணை)

சரணம்.

1 அனைவரும் வாழ்க அக இருள் தாழ்க
ஆணவப் பேய்சாக....மானிலமெல்லாம்
மண மொற்று வாழ்க, மாந்தர்களெல்லாம்
சுதந்திரமாக (கருணை)

2 ஸாந்த மெய்ஞான ஸமரஸ மோன
தத்வம் பொழிமுகிலே....அண்டின பேர்க்கு
அடைக்கலமாகியே ஆனந்த நாட்டிர்க்கு
ஆன திரு ஒளியே சிவானந்த நாட்டிர்க்கு ஆன
திரு ஒளியே (கருணை)

3 பற்பல மதங்களும் ஒப்பவே ஓதும் சற்குருவே
பேதை
செப்பிய தெல்லாம் க்ஷமை கொண்டு பாரும்
சீக்கிரமாக என் சிந்தனை தீரும் (கருணை)

4 பயங்கரமான பாதையில் இன்னாள் உழன்றது
தான் போதும் (அதிபயங்கரமான) பாதையில்
இன்னாள்
பாக்கிய வசத்தால் பார்த்துமை அடுத்தேன்
பரமானந்த சுக கதவைத் திறவுமையா (கருணை)

—0—

ராகம்: கமாஸ் தாளம்: ஆதி

மாத்தாட பாரதேனே என்ற மெட்டு

பல்லவி.

ஸ்வாமி ஸ்ரீ சிவானந்தா தன்மயம் தந்த (ஸ்வாமி)

அனுபல்லவி

ஆயிந்த உலகினில் அவதார மாகிவந்தார் (ஸ்வாமி)

சரணம்.

1 செந்நெல் செழித்த திருநெல் வேலிக்கருகினில்
தெய்வமறைக் குலத்தில் தீக்ஷிதர் வழிவந்த
(ஸ்வாமி)

2 பாரதஜோதி என்ன பல நாடும் க்யாதி பண்ண
பத்திரிகையால் எண்ணபடாத பொன்மொழி
சொன்னார் (ஸ்வாமி)
3 மக்கள் மனைவியாசை மாற்றி இளம்வயதில்
மாந்தர்க் கொரு துணையாய் மலையம் தன்னிலே
மின்னும் (ஸ்வாமி)
4 தென்னிந்தியாவின் ஜோதி (நம்) வட நாட்டில்
நின்றுலாவி
விடமாட்டேன் கைஎன விளம்பும் மூன்வினை
ஹாரி (ஸ்வாமி)
5 அறுபத்தைந் தாம் இந்த ஆண்டு நிறை
விழாவில்
(நாங்கள்) அனைவரும் கைகூப்பி அருள்செய்ய
வேண்டுகின்றோம். (ஸ்வாமி)
6 ஆனந்த நிறைவே (நீ) (சிவா) அழியாதிருந்
தென்னாளும்
(எங்கள்) அக இருள் தன்னை நீக்கி
அருள் செய்ய வேண்டுகின்றோம் (நீ அருள்
செய்ய) (ஸ்வாமி)

—0—

## காவடிச் சிந்து

மூசுவண்டு வாசமண்டு தேனையுண்டு என்ற மெட்டு

1 அந்தமான இந்தியாவின் மைந்தராகி வந்த—
சிவானந்த
குரு என்னும் அருள் ஜோதியே
அது பந்த இருள் நீக்குதாம், ப்ரக்யாதியே

இதை வந்தடைந்த மஹான்கள் பாக்யம்
இந்திரன் புகழ் ஞான சிலாக்யம்
ஸந்ததம் கயிலையில் புகல்வாக்யம் கனவேகமாகி
எங்கும் பரவும் வைராக்யம்
2 கற்றறிந்த உத்தமரும் கருணையற்ற பிறவியாரும்
கண்டுகொள்ள உண்மைவழி ஓதுவார்
இனிகவலையில்லை அபயமுண் டென்றே
சொல்லுவார்
அவர் சமய சம்மதமான மெய்ப்பொருள்
தானிருக்குதுள்ளே வசிக்குது (ஜொலிக்குது)
தளர வேண்டாம் வாருங்கள் ஐயா வாருங்கள்
தன்னை தான் அறிய ஆவல் கொண்டு பாருங்கள்
3 முற்றும் துறந்த ஞானியர்க்கும் மூடரில் முழு
மூடருக்கும் முக்தியுண்டு—பக்திகொண்டால்
நிச்சயம் வந்து முகுந்தனை பஜிப்பதாலே
நித்தியம் என.
சுத்தமான மனத்தினுல் பல
புஸ்தகங்களும், இத் தினங்களில்
எத்திசைக்கும் செல்வதல்லோ ச்லாக்யம்
ஞானபக்தி மழை பெய்வதல்லோ யோக்கியம்
எங்கும் பக்திமழை பெய்வதல்லோ யோக்கியம்
4 ஸத்தியம் அஹிம்சை பிரம்மச்சரிய மென்னும்
அவுஷதங்கள் தந்துதவும் டாக்டரானர்
பாக்கியம்—ஸாத்த தத்துவம் விவேக சாந்த
வாக்யம்
பெண்ணை பெற்ற தாயென சுத்த பாவனை

அகத்தியம் அதின் பத்தியம் என
பக்தியோக வேதாந்தஞான பாஸ்கரன்
பாரில் பத்தமடை வந்துதித்த யோகியன்
5 பக்தராய் புனிதராய் மெய் உத்தமராய்
நித்தியராய், ஸத்தியராய் வந்தகுரு—வாழ்கவே
அவர் சஷ்டி அப்த பூர்த்திநாளும் வாழ்கவே
சிஷ்ய கோஷ்டியும் குதூகலமுடன்
கொண்டாடி குரு பாதத்தை குவலயம்
எல்லாம் புகழ்ந்து வாழ்கவே-கூறும்
அறநெறி செழித்து மேலும் வாழ்கவே.

—0—

## ஸ்வாமி சிவானந்தஜீ அவர்களின் சரித்திர சுருக்கம்

விருத்தம்.

(திரு) நெல்லையம்பதியை நோக்கி நிரந்தரம் நமஸ்கரித்து
வள்ளலைப் பெற்ற தாயை-வாழ்த்தியே நமஸ்கரித்து
எல்லை இல்லாத புண்யம் ஹிமாலயம் செய்த பாக்யம்
என்றும் நீடூழி வாழ்க இறைவனை வேண்டுகின்றோம்

பச்சமலை பவழமலை எங்கள் மலை நாடு என்ற மெட்டு

1 குறை தீர்க்க வந்த குரு நாதனருள் வாழ்க

குரு நாதனருள் வாழ்க

2 குவலயமெல்லாம் புகழும் குரு நாதனருள் வாழ்க
எங்கள் குரு நாதன் வாழ்க
3 தன்மயமாய் நின்றருள் செய் ஸ்வாமி
சிவானந்தா (குப்புசாமி சிவானந்தா)
நம் தாபமெல்லாம் தீர்க்க வென தானுலகில்
வந்தார்
4 அப்பய்ய தீஷித் என்னும் ஆனந்தவாரி
பரமானந்தவாரி
அவர் வழியில் வந்துதித்தார் அகில பவஹாரி
5 பாரத மாதா புகழ பத்தமடை தந்தாள்
பாலனென அவர் வளர்ந்து பக்தர் குழாம்
வந்தார்
6 பக்குவமாய் மருத்துவனய் பரீக்ஷைகளும்
தந்தார் (அவர்) பலவருஷம் பணிகள் செய்து
பிரக்யாதி கொண்டார்
7 மக்களுக்கு உடல் பிணிகள் மாற்றி புகழ்
கொண்டார் (நம்) மனப் பிணியும் சினப்
பகையும் மாற்ற உளம் கொண்டார்
8 அஞ்ஞான இருள் நீக்க ஆவல் மனம் கொண்டார்
அவர் அக்ஞான நோய் தீர்க்க ஆவல் மனம்
கொண்டார்
அக்ஷணமே மனைவி மக்கள் ஆசைகளை
கொன்றார்
9 பச்சிளம் புதல்வனுடன் பத்தினியுங் கூட
தர்ம பத்தினியுங்கூட

துச்சமெனவே உதறி துறவரம் துணிந்தார்
10 பங்கும் மனைபாலனென்னும் பலதடைகள் வென்றார்
(பற்பல தடைகள் வென்றார்) பக்ஷமுள்ள பந்து
சுற்றம் பாசமுற்றும் கொன்றார்
11 கரை கடந்த அன்புடனே கைலேகிரி வந்தார்
கங்கை சுதன் என்ன புகழ் கலைகளிலும் கொண்டார்
12 மலைகளில் சிறந்த அந்த ஹிமயமலை என்பார்
மலைகளில் சிறந்த அந்த ஹிமயரிஷி என்றார்
அங்கு மக்கள் பலகூடி வந்து மன அமைதி கொண்டார்
13 காஷாய தாடிகளில் கள்வர் பலர் உண்டு
(வெரும் கள்வர் பலர் உண்டு)
இந்த வள்ளலைப் போல் யாருமில்லை
வாங்களங்கு என்றார் (நீங்க வாங்களங்கு என்றார்)
14 போதுமிந்த பொய்க் கதைகள பொதிச்சுமந்த தென்றார்
புகழ் பரவும் ஹிமயகிரி போங்களய்யா என்றார்
15 கஷ்டமுடன் களைத்து வந்த கனத்த பெரும் கூட்டம்
அது அத்தனைக்கும் அருள் சுரக்கும்.
அதுவல்லவோ சிரேஷ்டம்
16 துக்க இருள் நீக்க வழி சொல்லிடுவேன் என்றார்
(அவர் சொல்லிடுவேன் என்றார்)

நாம்தூய மனதாக்கியபின் துயரழியும் என்பார்
17 பக்தி என்றும் ஞானமென்றும் பலவழிகள் உண்டு
(பற்பல வழிகள் உண்டு)
பலவும் கூடி ஒன்ருகும் பயப்படாதீர் என்ருர்
18 துணையிருப்பேன் அஞ்சவேண்டாம்
துன்பமில்லை என்ருர்-(இனி துன்பம்)
தூரிய வெளி ஏகிய பின் துவைதமில்லை என்ருர்
19 எம்மதமும் சம்மதமே எழுந்திருங்கள் என்ருர்
(விழித்து எழுந்திருங்கள் என்ருர்)
எங்கும் ஏராளமாக பல எழுத்துரைகள் தந்தார்
20 பேராசை நீக்கும் பெண்ணை தாய்போல் எண்ணும்
என்ருர் — பிரம்மசரியம் அஹிம்சை
சத்தியம் புனித விரதம் என்பார் (யார்க்கும்)
21 தன்னல மற்ற பணிசெய் சாதனை செய் என்பார்
தன் மனதை நிலை நிறுத்தி தியானித்திரு என்பார்
22 நாற்றிசையும் புகழ் பரவ ஞான மழை
கண்டார் பிரம்ம ஞானமழை கண்டார்
பேர்பெறவே அறநெறிக் கழகம் தன்னை விண்டார்
23 சீரான திவ்ய ஜீவிய தலைமை பூண்டார்
சித்த இருள் நீக்கும் ஜெகஜோதி என நின்ருர்

(அவர் நம் சித்த இருள் நீக்கும் ஜெகத்ஜோதி
என நின்றார்

24 அன்புடைய தலைவர் அவருக்கான இந்த
ஆண்டு
அறுபத்தைந்து என்று சொல்லி
ஆராதிப்பார் அண்டி (எங்கும் ஆராதிப்பார்
அண்டி)

25 கொண்டார் குரு பாதத்தை கொள்வர்
அன்பர் வேண்டி குறைவற்று அவர்
வாழ்க கூடித் தொழுவோமடி
(நாம் கூடி தொழுவோமடி)

26 ஸத்குருவை கார்க்க தெய்வம் சகலத்தையும்
வேண்டி சச்சிதானந்தப் பொருளை
நாமடையலாண்டி — சகி — ஓம்
சச்சிதானந்த பொருளை நாமடையலாண்டி

27 பந்த வலை நீக்கி முக்தி தந்த குருமூர்த்தி
பார் புகழும் ஸ்வாமி சிவானந்தர் என்னும்
கீர்த்தி

28 கரை சேர்க்க வந்த குருஸ்வாமி குப்புஸாமி
மறையாத கீர்த்தியென மாந்தர் என்றும் புகழ

29 மங்களத்வனியும் மஹாமந்திரமும் பணியும்
திருப்பணியும் கண்டு
மலைமகிழ மக்கள் மகிழ மாதவன் பேர் வாழ்க

30 சொல்லுமிதை அன்பரெல்லாம்
சுகம் பெருகி வாழ்க—தோன்றிய
(Divine Life Society) யும் வாழ்க
தெய்வநெறி கழகங்கள் வாழ்க

## விருத்தம்

அந்தணர் குலத் துதித்து ஆனந்தவடி
வெடுத்து வித்தையாய் ஆத்மபோதம்
வெளிப்படையாய் உரைத்து
கந்தனைப் போல வெற்றி கடவுளாய்
இருள் அழித்து
பந்த மதகற்றும் ஞானப் பழந் தன்னை
எமக்களித்து சுதந்திர இமயம்
தங்கும் ஜோதியே போற்றி போற்றி
சிவஜோதியே போற்றி போற்றி

— 0 —

உண்டென்று உறுதி கொள்வாய்—என்ற மெட்டு

பல்லவி

நன்றென்றுன் மொழி கொண்டேன் குருவே
(சத்குருவே நான்) (நான் என்றென்றும்)

அநுபல்லவி.

கண்டு கொண்டேன் (நான்) கண்டு கொண்டேன்
உண்மை கண் திறந்தேன் பண்டு மோசம்
பண்ணும் எதிரி கொன்றேன் (நான்)

சரணம்.

1 பார்ப்பதெல்லாம் நானே யாகும் பலவும்கூடி
ஒன்றேயாகும்
கேட்பவனும் கிளத்துவோனும் பார்ப்பவனும்
பரமேயாகும்

உண்மை கண்டேன் (உயர்) உள்ளம்
வென்றேன்
உன் அருளால் இன்பம் கொண்டேன் (நான்)
2 விருப்புமில்லை, வெறுப்புமில்லை, வரும்பிறவி
பிணியுமில்லை
திருப்புகழ் படிப்பதில்லை, தெய்வம் என்னை
யன்றி இல்லை
ஐயோ, மோசம் போனேன் இன்னாள்
ஐயா, மெய்யா, துய்யா உன் சொல்
(நன்றென்று நான்)

—0—

ராகம்: கமாஸ் தாளம்: ரூபகம்

ஸுஜன ஜீவன ராம—என்ற மெட்டு

பல்லவி.

ஸ்ரீ சிவானந்த ஸ்வாமி
ஜெகத் குருவாகி வந்தார்—(ஸ்வாமி)

அனுபல்லவி

பவ பயங்கர பெருங்கடல் கடந்திட
பக்ஷமாய் வந்து ரக்ஷித்தார் செய்த
பாபங்கள் நீங்க (ஸ்வாமி ஸ்ரீ)

சரணம்.

பத்தமடை தன்னில் உதித்த பாக்ய சூரியன்
பாரதத் தாய் மனம் களிக்க ப்ரகாசித்தார்
ஹிமாலயம்

எம்ம தங்களும் சம்மதம் நமக் ஏகமே பொருள்
யோகமே வழி
எழுந்திரும் என்றார் விழித்து எழுந்திரும் என்றார்
(ஸ்வாமி ஸ்ரீ)

—0—

நமஸ்தே நா ப்ராணநாதா என்ற மெட்டு

பல்லவி.

ஜெய ஸ்வாமி சிவானந்த ஸத் குரும்
பஜே ஸதாஹம் (ஸ்ரீ ஸ்வாமி சிவானந்தா)

அனுபல்லவி

பூமி புகழ் புண்ய—மூர்த்தி
அகண்ட கீர்த்தி (ஸ்வாமி)

சரணம்.

1 பத்தமடை தந்த பாக்யம்-பாரதத்தாய் மகிழும்
யோக்யன்
பாச பவ ரோக மென்னும் பவபிணிக்கோர்
அருள்வயித்யன்
மூல முதற் பொருள் அறிவை-
மூவி தமாய் போதனை செய்யும் (ஸ்வாமி)
2 அன்பு தொண்டு த்யாக மென்னும்
அருவகை ஸம்பத்தை ஓதி (நமக்கென)
ஆணவமும் மலத்துடனும்
அகற்றி-அருள் அன்பே சிவா
ஆனந்த ப்ரபோ-ஹிமயமதில்
தங்கி எங்கும் பொங்கும் க்ருபா (ஸ்வாமி சிவா)

3 மூடர்கள் நாங்கள் கூடி தேடி முக்தி பெற
யுன்னை வேண்டி
ச்ரத்தை பக்தி செய்தறியோம் சிரவணம்
மனனம் ஒன்றறியோம்
அவலப் பிறவி அகற்றி இன்பமருள் குருவே
சுருதி முடிவே (இந்த) (ஸ்வாமி)

—0—

வீரஸுதந்திரம் வேண்டி நின்றார் என்ற மெட்டு

1 பரஸுக மெய்யும்படிக்குனக்கு அருள் செய்யும்
பரமார்த்தத்தை பெய்யும், பாவன மூர்த்தி
பரவிய கீர்த்தி
பரம குரு மூர்த்தி
2 ஆகம வேத புராணங்களால் கண்டு
அறியா நிலை எய்த, பரிவாய், மாநில
குருவாய் தோன்றினர் பரிபூரண மூர்த்தி
3 சமதமமும் உயர் சாந்தமும் தந்திடும்
தன்மய மெய்நிலை, நீயே, நீயே,
தானென ஓதிய சமரசனுகிய ஸ்வாமி
சிவானந்தா
4 மாற்றிக்கொண்டார் மனை, மக்கள் மேல்
ஆசையை
மா தவம் தான் செய்ய
இந்த பூதலம் செய்த நற் பாக்கியத்தாலே
பிரம்மானந்தமாரி பெய்ய
5 தஞ்சமென்றால் துன்பம் கொஞ்சமும் அணுகா
சஞ்சலம் சற்றுமில்லை

அந்த கஞ்சநயனன் பக்தி கையிலேயில் சோபிக்க
காணும்ருதம் செழிக்க

6 காமமும், கொலேயும், களவும் மறந்து (நாம்)
மெய் கைவல்யம் எய்த
கோபமும், பாபமும், கொடிய சுபாவமும்
கூடாதருள் செய்ய

7 தோன்றிய ஜோதி ஸுக நிலே ஒதி
துணைபுரியும் ஆதி, வேதியஞகிய
வரும் பவஹாரி, வாஸுதேவ ஸ்வரூபீ

—0—

மானஸ சஞ்சரரே என்ற மெட்டு

பல்லவி

நமஸ்தே சத்குரு நாதம், சந்ததம் (நமஸ்தே)

அனுபல்லவி

பூரண மெய்போதம், பொங்கும் அதீதம்
மங்கள கீதம், மாதவ வேடம் (நமஸ்தே)

சரணம்.

1 சந்திர னிபானன மந்திர போதம்
பந்த விச்சேதன பரமாத்ம ஸ்வரூபம் (நமஸ்தே)

2 அத்வை தானந்த அகண்டாகாரம்
அகண்ட சிவானந்த அத்புதாகாரம் (நமஸ்தே)

3 நிர்குண, நிர்மல, நித்யானந்தம்
ஸுக்யானப்ரத ஜ்யோதி ஸ்வரூபம் (நமஸ்தே)

4 ஹம்ஸ ஸோஹம், ஸோஹம் ஹம்ஸா
ஆத்மானந்த சிதானந்தோஹம் (நமஸ்தே)

—0—

விருத்தம்

மானிடப் பிறவி பெற்றும், மனம் போன
போக்கில் ஓடி,
ஞானியாய், மௌனியாகி, நடுநிலை அறியாராகி,
காமமும், கொலையும், சூதும், கர்வமும், கொண்டு
மாந்தர்
கருத் தழிந்துழலும் வேளை கரை சேர்க்கவந்தாய்
போற்றி போற்றி

—0—

வாழிய செந்தமிழ் என்ற மெட்டு

1 வாழிய ஞானமெய் ஞானியர் வாழ்க
வாழ்க அவனடியார், வாழ்க மெய்த் தவத்தோர்
சூழ்க உலகமுற்றும் சொரூப மெய்போதம்
சுகம் பெரும் அருள் வழி காட்டிய ஜோதி
(வாழிய)

2 பதிபசு பாச விமோசனன் வாழ்க
பத்தமடை உதித்த பாக்கியன் வாழ்க
உத்தம பக்தரும் முக்தரும் வாழ்க
உலகெங்கும் ஸமரசம் ஓங்கி நாம் வாழ்க
ஓங்கி நாம் வாழ்க (வாழிய)

3 சங்கரரும் அரவிந்தரும் போல
ஸ்வாமி விவேகானந்தா, தனிச்சுடர்போல
(சற்குருபோல)

உத்தமராம் மாதவர் உடையவர்போல் வந்த
சுத்த சிவானந்த ஸ்வரூபமே வாழ்க
(ஜோதியே வாழ்க)
(வாழிய)

4 அடியவர் நாங்கள் அனைவரும் போற்றி
ஆறுதல் வேண்டினோம் அடைக்கலம் என்று
கடைக் கண்ணால் பார்த்து கவலைகள் தீர்த்து
உண்மைப் பேரின்பம் தந்த புண்ணிய மூர்த்தி
(வாழிய)

5 ஸோஹம் சிவோஹம், ஸோஹம் சிவோஹம்
ஏகமனமேகம், மோஹன கீதம்(மோஹரஹிதம்)
அதீதம் விசித்தியம் ஆத்மஸ்வரூபம்,
ஸ்வந்த சிவானந்த மந்திர தீபம் (மந்திர கீதம்)
(வாழிய)

—0—

காக்ஷி கண் காக்ஷியே-என்ற மெட்டு

பல்லவி.

இருக்க முடியாது எண்ணாமல் சத்குரு பாதம்
(நாம்) இருக்க முடியாது

அனுபல்லவி

கருக் குழிக்குள் விழாமல் கார்த்தவரைக்
காணாமல் இருக்க முடியாது

சரணம்.

1 அகண்ட சச்சிதானந்த அத்வைத நீதி தன்னைக்

கைத்தலக் கனியென்ன-காண்பித்த ப்ரபு
தன்னை
ஸத்வகுண வடிவாய் முன்னை
ஜனமன ஸ்தாபம் தணித்த மாரி உன்னை
கவிமலர் தரும் சிவானந்த சுகந்தத்தை
விட்டிருக்க முடியாது (இருக்க)
2 பத்தமடை உதித்த பாலஸூரியன் தன்னை
பாக்ய ஹிமாலயத்தில் ப்ரகாசிக்கும் ஒளி
தன்னை
பக்தி ஞானக் கடலாய் முன்னை
பவரோகம் விலக்கும் அருள் தன்னை
பார் புகழும் புனித பரம குருவை மறந்திருக்க
முடியாது
(எண்ணமல் சத்குரு பாதம் இருக்க முடியாது)
3 கருணை வுருவெடுத்து கயிலைகிரியில் வசித்து
கர்ம ஞான மார்க்கத்தின் கருத்தை
உபதேசித்து
தர்ம ஞானக் கொடியை பிடித்து
அதர்மம் வர்மப் பகையை கெடுத்து
குருவாய் தெய்வமாய், குறைதீர்ப்பவரை விடுத்து
(இருக்க)

—0—

ராகம்: பிலஹரி தாளம்: ரூபகம்

கற்பகாம்பிகே என்ற மெட்டு

பல்லவி.

ஸ்ரீ சிவானந்தா ஸ்வாமி திருநெல்வேலி தந்த

தேசிகனுகி வந்த (ஸ்ரீ சிவா)

அனுபல்லவி

போக மோக சோகம் நீக்கி (எங்கள் போக மோக)
புனிதமான வாழ்வுண்டாக்கும் (ஸ்ரீ சிவா)

சரணம்.

1 அவித்தை ஆணவத்தைப் போக்கி
அதீதமான போதம் தேக்கி
பேதைக் கோழை பயத்தைப் போக்கி (என்)
பிரம்மக் ஞான, தனத்தைத் தாரும் (ஸ்ரீ சிவா)
2 அனைவரும் போற்றும் அறுபத்தைந்தாம்
ஆண்டு
அன்பர்கள் கூடிக் கொண்டு-வேண்டுதல் கண்டு
ஐங்கரன் ஹரிஹரனும் தொண்டு
ஆற்றும் உனக்கருள் ஆசிபுரிந்தார் (ஸ்ரீ சிவா)
3 பக்தர்கள் போற்ற பாவலர் ஏற்ற
பர்வத ராஜன் மனம்-பரவச மாக்க
பதித பாவனி கங்கை நோக்கி
பரமானந்தம் கொண்டு-நிரந்தரம் சோபிக்க
(ஸ்ரீ சிவா)

—0—

## காவடிச் சிந்து

ஆறுமுக வடிவேலனே நீ கல்யாணமும் செய்ய
வில்லை என்ற மெட்டு

1 அண்டிய பேர்க்கினி அஞ்சேல், அஞ்சேல்
என்று

அபயம் கொடுக்கும் கரம்,
தொண்டு செய்தே மனத்தூய்மையடைந்த
ஸ்வாத்ம மெய் ஞானக் கரம்
2 கண்டவுடன் அன்பர் நெஞ்சைக் கவர்ந்திடும்
கமலப் பொற்றாள் நற்பதம்
கைவல்ய போத சுகானந்தம் தந்திடும்
காருண்யமான பாதம்
3 பார்த்தவுடன், பரமானந்தமாய்ப் பொங்கும்
பங்கய ஜோதி முகம்
ஆர்த்தி தணித்துண்மை மூர்த்தியிடம் சேர்க்கும்
அத்வைதானந்த முகம்
4 அன்பு கிருபை பரமானந்தம் பொங்கிடும்
ஆனந்தமான பதம் (அது)
மோனம் தனில் ஒளிர் ஞானானந்தக்கடல்
முக்தர் அடையும் பதம்
5 சின்மயமாம் சிதானந்தம் உலவிடும்
திவ்யப் பொற்றாள் தத்பதம்
ஐயம் எடுத்திட வேண்டாம் வேண்டாம் என்று
ஆறுதல் சொல்லும் பதம் (ஆர்த்தி தணிக்கும் பதம்)
6 அன்னை தந்தைகுரு தெய்வமுமாகிய
ஆத்மானந்தப் பதம் (பரமாத்மானந்தப் பதம்)
முன்னை வினை தீர்த்து என்னைக் கரைசேர்த்த
மூர்த்தி சிவாநற் பதம்
7 கண்ணை இமையினின்று காப்பதுபோல்—
பக்தர்

கஷ்டம் துலக்கும் பாதம்
இஷ்டமுடன் ஷடா அஷ்டாக்ஷரம் தன்னை
எடுத்துக் கொடுக்கும் பாதம்
8 மங்கள ஜோதிபோல் மலையமதில்—மின்னி
மகிழ்ச்சி கொடுக்கும் பாதம்
துலையாத சம்சார ப்ராரப்தம் தீர்த்தென்னை
தூக்கி விடும் நற்பதம்
9 காணக்காண சலிக்காது பேரின்பக் களஞ்சிய
மான பதம்
கோணக்கோண வேனும்—கோவிந்தா—
என்று நீர்
கூப்பிடும் என்ற பதம்
10 அஞ்ஞானம் நீக்கி அகண்டசிதாகாச
ஐக்யம் தந்த பதம்—ஆனந்தமாக
சதாகாலமும் நின்று-அர்ச்சிக்க வேண்டும் பதம

—0—

ராகம்: மத்யமாவதி — தாளம்: ஆதி

வந்தான் வந்தான் பரதா ரகுராமன் என்றமெட்டு

பல்லவி.

வந்தே ஸத்குரு நாதம்—ஹிமய மதில்
தங்கும் ஸத்குண போதம் (வந்தே)

அநுபல்லவி

அங்கும் இங்கும் நிறைந்து எங்கும் ப்ரபோதமாய்
சுந்திர கீதமாய் சொல்லுங் கதிதனும் (வந்தே)

சரணம்.

1 நித்யானந்த நிரந்தர சுகபோதம்
பக்தியாதி நவவித பாதைக்கோர் அருள் தீபம்
எம்மதமும் சமம்—எவ்வுயிரும் அவன்,
கை நெல்லிக்கனிபோல காண்பிக்கும் குருநீதம்
(வந்தே)

2 பத்தமடை உதித்த பார்வதி செல்வனும்
பரமாத்ம ஸுக போதம் ப்ரவாஹிக்கும்
உள்ளமாம்

ஆனந் தானந்த சிவானந்த நவயோக
மோனந்தனில் ஒளிர்...முனிவேஷா,
ம்ருதுபாஷிம் (வந்தே)

3 முன்னை வினையகற்றும முக்திபத மளிக்கும்
பக்தியுடனே ஞான சித்தசுத்தி அளிக்கும்
கண்ணன் போலவும் முடி மன்னன் போலவும்
(என்னுள்)

பின்னம பின்ன மின்றிப்ரகாசிக்கும்
குருதேவா. (வந்தே)

—0—

கலிலோ ஹரி ஸ்மரண முகட்டியே—என்ற மெட்டு

பல்லவி

சரணம் குருநாதா பரிவுடன்
தனய்னுக்கபய மிடும் (இது தருணம்)

சரணம்.

அனுபல்லவி

அரிதாம் இந்த மானிட ஜென்மம் (மிக)
(இது) அழியும் முன் கடைத் தேறணும்
(அடைக்கல முன் சரணம் குரு)

சரணம்.

1 (என்) மதியோ தெளிவில்லை இந்த
பாழ்மன மர்க்கடம் உறங்கவில்லை
(புனித மில்லை மதியோ)
2 கெதிவேறில்லை கவலை குறையவில்லை
பதிபசுபாசம் என்றால் புரிய வில்லை (சரணம்)

—0—

புன்னாகவராளி ராகமாலிகை

ஆடுபாம்பே விளையாடு பாம்பே என்ற மெட்டு

1 பாதுகையே பாதுகையே—எங்கள்
பரமகுருநாதன் திரு பாதுகையே—(திவ்ய)
பாதுகையே பாதுகையே என்னைப் பாவனம்
செய்யவேண்டும் பாதுகையே
2 பாதுகையே பாதுகையே பரமஹம்ஸ சிவா
திரு பாதுகையே
பாதுகையே பாதுகையே பவமோசன
ஸத்குருவின் பாதுகையே
3 பாதுகையே பாதுகையே என்னை
பாதுகார்த்தருள் செய்வாய் பாதுகையே
பாதுகையே பாதுகையே அன்பர்
பாபம் துலைக்கவந்த பாதுகையே
4 ஸ்வாமி சிவானந்த தேசிகனும் (உயர் தேசிகனும்)
தங்கி ஹிமயத்தில் பொங்குவனும் (நம் ஸ்வாமி)
சங்கைகளைந்தின்ப ஸாகரமேதரும் (இன்ப)
பங்கய பொற்பாத பாதுகையே

5 ஜெனன மரணபயம் தாண்டிவைப்பாய்
ஸாலோக சாமீப ஸாயுஜ்யம் ஈவாய்
பூலோகம் தனில் புகழ் பொருள் ஈவாய்
போதம் தந்தது வென்னும் பொருள் சேர்ப்பாய்
பாதுகையே பாதுகையே
பரமஹம்ஸ சிவானந்தம் பாதுகையே

—0—

நீலாம்பரி கண்ணிகள்

1 உள்ளம் இனிக்கும் (நம்) உடல் இனிக்கும்
மெய்சிலிர்க்கும்...தெள்ளு சிவானந்த வள்ளல்
திருவடியை சிந்தைசெய்ய (உள்)

2 மண் செழிக்கும் விண்செழிக்கும்
மாமறை பொருள் தழைக்கும் கண் இனிக்கும்
காதினிக்கும் கைலகிரி வாழ்ந்திடவே

3 வேற்றுமைகள் முற்றும் இங்கு
வேரோடு தான் அழிய—ஆற்று வெள்ளம்
போலே வந்த (சிவா) ஆனந்த
செல்வனுய்ய

4 மக்களுக்கு தாய்போலும் மறைந் தருள்
செய் மாதவன் போல் (நம்)
துக்க இருள் நீக்க வந்த
ஜோதியது வாழ்ந்திடவே

5 கல்லாத மூடர்க்கும், கலை சிறந்த
ஞானியர்க்கும்..எல்லவர்க்கும்
தீங்ககற்றும் எங்கள் குரு வாழ்ந்திடவே

6 பக்தர் சிதானந்தருடன் பார் புகழ்

ஆனந்தசுடர் சீர்பெற மென்மேல்
செழித்து-தேசமெங்கும் பொங்குகவே

—0—

தில்லையம்பல ஸ்தலமொன்றிருக்குதாம்—என்ற
மெட்டு

பல்லவி.

ஸத்குரு சிவானந்த..ஜோதியாம் அதை
தான் அடைந்தால் ஜெனன மரணமில்லை-
உறுதியாம்

அனுபல்லவி

கருணை புரியும் கனிந்த உள்ளமாம்-கலியுகமதில்
(கருணைபுரியும்) கைலைகிரியில் தங்கும்-செல்வமாம்

சரணம்.

1 வாரும், வாரும் என கூவி அழைக்குதாம்
வந்தடைந்தால் யாரும் காணு-சுகமளிக்குமாம்
2 அப்பய்ய னென்றோர் ஆதி திகழ்ந்ததாம்
அதன்வழிசிவா ஆனந்தசுடர் ஜோதி
பிறந்ததாம் சுடர்ஜோதி எழுந்ததாம்
3 துடரும் வினைவேர் தோண்டி எறிந்ததாம்
(அது துடரும்)
துரிதமாக ஆண்டியாகி-தவமும் புரிந்ததாம்
4 கைத்தலக் கனி என்றுகாட்டிற்றும்
கருணை பொங்கி காரிருள்
தன்னை எங்கும் விரட்டிற்றும்
பக்தரோடு ஸத்சங்கம் கூட்டிற்றும்

பத்திரிகையால் பார் முழுவதும் இன்பம்
புறட்டிற்றும்

6 அச்சமில்லை ஓடிவாருமே அதையடைந்து
துச்சமான உலகைத் தீருமே

7 நிச்சயம் சுகம் உண்டு பாருமே
நீண்டகால நெஞ்சகுறைகள்-நோய்கள் தீருமே
ஸத்குரு சிவானந்த ஜோதியாம்

— 0 —

## குருநாதா அகவல்

ஹரநாதா ஹரநாதா—என்ற மெட்டு

குருநாதா குருநாதா குருநாதா ஜெயகுருநாதா
குருநாதா குருநாதா குருநாதா ஜெயகுருநாதா
(ஓம்) (ஜெய) ஸத் குரு நாதா
போக மோஹ மாயா உலகினிலே புகலிடம் யார்
எனக் கருள்நாதா
கொடிய சம்சாரம் வடவைக் கனல்போல்
அடிமையை தஹிக்குதே-குருநாதா
ஜடமன மாயை தடபுடலாக படம் விரித்தாடுது
குருநாதா
அடுத் தடுத்து ஆணவப்பேய் தலையாடி மிரட்டுது
குருநாதா
காமக்குரோதக் கள்வர்கள் உண்மையை கொள்ளை
அடித்தனர்-குருநாதா
என் மனதிற் கொரு ஆறுதல் சொல்ல எழுந்து
வந்தாய் குருநாதா

முன்னை வினைபட சென்னை வந்தனை என்னை நின்
கிருபை! (குருநாதா)
நின் பிள்ளை விநாயகம் பெற்ற பேற்றினை
புகல்வதும் எளிதோ – குருநாதா
முன்னை வினைபட சென்னை வந்தனை! என்னை நின்
கிருபை
என் கண்ணைத் திறந்தருள்-குருநாதா (குருநாதா)
என்னை அருகழை – குருநாதா-முன்னைவினைகெட-
—முன்னைவினைவிட
கற்றவர் பெரியோர் கயிலைபோல் மயிலையில்
கண்டுகளித்தனர்—குருநாதா (உன்னை)
உற்றவர் பெற்றவர் உலகினில் நீயே—உன்னடி
பணிந்தேன் – குருநாதா
தங்கி ஹிமாலயம் இங்கில்நீ வந்தாய் பங்கயக்கண்
பார்—குருநாதா
சங்கடம் தீர்த்தென்னை தாளடி சேர்ப்பாய்
சரணம், சரணம் ஸத்குரு நாதா
என் மனதிற்கோர் ஆறுதல் சொல்லி தேற்றிடுவார்
யார்—குருநாதா
என்றைக் கென்னை கரையேற்றி இன்பருள்வாய்
ஏங்கி நிற்கின்றோம்-குருநாதா
என்றெனை கைக் கொடுத் தேற்றுவையே கரை
இனி தாமதமேன்—குருநாதா
என்றெமை உன் பதத்துக் கேற்றுக்கொள்வாயோ
எளியவர் அறியோம்—குருநாதா
அன்றே எனையுன் அடிமை கொண்டனை
ஆனந்த போதம்தா—நாதா

அன்றே என்னையுன் அடிமை கொண்டனை
ஆரணமுடிவே சிவ வா, வா வா குரு
கன்றின் குரல் கேட்டென்றும் வருகா (உருகா)
கறவையும் உண்டோ—குருநாதா
அன்றும் இன்றும் என்றும் உன் தாட்கபயம்
அபயம்—குருநாதா
ஓடிவாராய் குருநாதா உன்னடி தாராய் குருநாதா
ஒப்பிலா மணியே குருநாதா உண்மை அருள்வாய்
குருநாதா
(நின்) பொன்னடி தேடி குருநாதா முப்போது
மலைந்தேன்—குருநாதா
உற்றுப் பார்க்கில் உன்மேல் குற்றம் ஓதுதற்
கில்லை குருநாதா
ஜாதி மதவர்ணாச்ரமமெல்லாம் தாண்டிய
ஜோதியே குருநாதா
என் தவப்பயனே குருநாதா ஏக சிவானந்த
பொற்பாதா குருநாதா
(உன்) குழந்தைகள், யாங்கள் குருநாதா கும்பிடு
கின்றோம் குருநாதா துன்பமொழிப்பாய்
குருநாதா ஜோதி சிவானந்த திருபாதா—
குருநாதா
செஞ்சுடர் ஒளியே-சிவநாதா சின் மயபோதா
தவப்பாதா
எங்கிலும் மங்களம் தாநாதா என்றும் எம்மை
காத்தருள் நாதா—(குருநாதா)
தங்கும் புகழ் திருவல்லிக்கேணி (பொங்கி
மகிழ்ந்தது)—குருநாதா பொங்கி வழிந்தது

மங்களமாய் கடல் ஆடி நீர் வாரும்
மாக்ஷிமை தங்கிய மதிவாணு(குருநாதா, குருநாதா)

—0—

ராவே ராவே பங்காரு—பாப்பா என்ற மெட்டு

1 ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தம் மனக் கானந்தம்
ஆனந்தம் ஆனந்தம் ஆனந்த குடீரமுலோ
2 ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தம் பரமானந்தம்
ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தம் ப்ரும்மானந்தம்
3 ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தம் நித்யானந்தம்
ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தம் சிவானந்தம்
4 ரண்டோயி ரண்டோயி ராவேமி ரந்தருனு
வேகமுகா போத்தாமு—வெண்டிகிரி சாது
ஊனி
5 ஜூடுதாமு ஜூடுதாமு சுவாமி சிவானந்த குரு
பாதமுன ஸேவிஞ்சி பாபமுனு தீர்ச் சுடகு
6 என்னுளோ திருக்கிதிவி எப்புடுனு துக்கமுகா
சின்னுளோ செப்பண்டி ஜன்மபவ சாகரமு
7 அன்னையா பின்னையா அர்த்தமுலோ கனுபிஞ்சு
சித்தமுலோ தோச்சினதி திரிபுவனமு சூடண்டி
8 ஸல்லகனே மாட்ளாடி சந்தேஹம் விப்பிஞ்சி
பந்த பவரோகமுனு படகொட்டி காபாடி
9 சாந்தி மனகிஸ்தாரு ஸ்வாமி சிவானந்த குரு
புஸ்தகமு நிஸ்தாரு புத்தி, யுக்தி செப்தாரு
10 காபாடி ரக்ஷிம்சி கஷ்டசுகம தீர்க்சுடகே
அவதாரம் சேஸினதி ஆதிபராசக்தி சிவா
11 அபயம் மனக்கீயுடகே அவதார புருஷுடனே

ஙத்தமடை பாக்யுடனு ப்ரபல சிவானந்த ப்ரபு
12 னிர்மாணம் சேஸினதி நித்யசுக மந்திரமுலோ
ஸ்ரீ ராமய்யா ஸ்ரீ கிருஷ்ணய்யா லக்ஷமணுடு
ஸீதம்மா
13 பக்கமுலோ கணபதினி பார்வதி ஸ்ரீமாருதினி
ஸேவிஞ்சி வஸ்தாமு ஸ்ரீ விஸ்வநாதுடுனு
14 சூடண்டி சூடண்டி சுத்த கங்கா தேவிஜீ
அக்கடனே கங்கையுனு ஆனந்த முகா
கனபடனு
15 தேவி ஜகன் மாதாஜீ சுவாமி சிவானந்தஜீ
பாதமுலோ ஸேவிஞ்சி பாக்யமுகா
நிவஸிஞ்சுடகே
16 ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தம் சிவானந்தம்
ஆனந்தம் ஆனந்தம் ஆனந்த குடீரமுலோ

—0—

காவடிச் சிந்து

(செஞ்சேவலன் கரத்தில் அஞ்சாத வேலிருக்க
என்ற மெட்டு)

1 சந்தேகம் தீர்க்க சிவானந்த குரு இருக்க
சிந்தையில் என்ன பயமே (நம் சிந்தையில்
என்ன பயமே)
என்ன வந்தாலும் சிந்தையில் என்ன பயமே
ஏது வந்தாலும் சிந்தையில் என்ன பயமே
(ஏதுவந்தாலும்)
பந்த பாசங்கள் வந்துதான் என்ன செய்யுமே
இந்திரனும் பூர்ண சந்திரனும் புகழ்

இன்ப சுதந்திர மாகியதை அருள்
மந்திர தவரூபனே (ஜப மந்திர தவ ரூபனே)
ஹிமாலயம் தன்னில் வந்தால் வினைகள் தீருமே
2 கற்பனை நீக்கி அருள் உற்பன்னம் ஆக்கும் வழி
செப்பிடும் தேவ தேவனே (உண்மை செப்பிடும்
தேவதேவனே)
அற்ப புத்திக்கும் ஆணவப்பேய்க்கும் காலனே
ஒப்பிலாத பல பத்திரிகைகள் உள
தப்பிடாமல் பலநாடுகளுக்கும் தினம்
அப்பா செல்லுது சிரேஷ்டமே
அயல் நாட்டாரும் ஆனந்திப்பார் எதேஷ்டமே
(சந்தேகம் தீர்க்க)
3 பக்தியுடனே ஞானமுக்திதரும் சத்கர்ம
யுக்தி புகலும் மார்க்கமே—பத்து திக்கிலும்
சுற்றி சுகம் செய் ஸ்லாக்கியமே
உத்தமமான தோர் பத்தமடை உதித்து
உலகம் யாவைக்கும் ஊக்க மிக அளித்து
ஏக்கம் தணிக்கும் பாக்கியமே-(நம் ஏக்கம் தணிக்
கும் பாக்யமே)
இந்தியர் தர்ம எழிலை புகலும் யோக்யமே
(நம் எழிலை புகலும் யோக்யமே)
4 போற்றிடுவோம் புனித பொற்றாள் மலரடியை
புனிதர் பிறந்த தினமே இது புனிதர் பிறந்த
தினமே
பூமியில் அவர் அறுபத்தைந்தாம் ஆண்டின்
தினமே

கருணையான குருவாழ்க பரமனருள் தருக
வேண்டி அருள்-பெருகவேண்டி நாம்
சங்கீர்த்தனங்கள் செய்வோமே-எங்கு பார்த்தாலும்
சங்கீர்த்தனங்கள் செய்வோமே
சகலருக்கும் சந்தோஷமாம் இத்தினமே
வாழ்க சிவானந்தம், வாழ்க பரமானந்தம்
வாழ்க சிதானந்தமே வாழிய பக்தர் வையகம் போற்றும் செல்வமே
சூழ்க உலகிலெங்கும் ஸ்வரூப ஜோதி நிலை
துரிய ஞானநிலை பெருக வேண்டும் என
ஸ்தோத்தரிப்போம் இத்தினமே (நாம்)
சுந்திரமான ஆனந்த குடீரம் வாருமே
(சந்தேகம் தீர்க்க)

—0—

ஆனந்தக்களிப்பு: சங்கர சங்கர சம்போ

ஓம் குரு ஓம் குரு நாதா ஓடிவந்து ஞானமந்திரம் ஓதாய்
ஓம் குரு ஓம் குரு நாதா உலகினில் அனைவருக்கும் ஓங்கார போதா (ஓம் குரு)

1 ஓம் குரு ஓம் குரு நாதா ஓடிவந்தெங்களை
பாதத்தில் சேராய்—ஓம் குரு ஓம் குருநாதா
2 உவமைபெற்ற செல்வமே உண்மை நீ ஓதாய்
ஓம் குரு ஓம் குருநாதா
3 சச்சிதானந்தப் பொற்பாதா எங்கள்
ஜெனன மரண பயம் தீர்க்கலாகாதா (ஓம்)

4 பக்தர்க்கு அருள் வர தாதா
பார்வதியாள் பெற்ற பாக்கியமே வாதா (ஓம்)
5 துஷ்டர்க்கும் மெய்ஞ்ஞான போதா—
சூரியா நீதா ஆனந்த சுகவர தாதா (ஓம்)
6 ஏகாக்ஷரானந்த போதா-ஏழைகள்
எங்களை ரக்ஷிக்க வா வா குரு நாதா (ஓம்)
7 பங்கயக்கண் கொண்டு பாரும்—(நாங்கள்)
பட்ட துயர் தீர்க்கும் மந்திரம் ஓதும் (ஓம்)
8 சாது சங்கத்தெம்மைச் சேரும்
சகலவுலகமும் சஞ்சலம் பாறும் (ஓம்)
9 தீயோர்க்கும ஆனந்தம் அங்கே (கெட்ட)
திருடர்க்கும் முழு மூடர்க்கும் அங்கே (ஓம்)
10 எம்மதமும் சமஜோதி எழுந்தோடி வாரும்
சிவானந்த ரூபி— (ஓம்)
11 கன்னி முதல் கடலாடி கைலகிரியில் உலாவி
மெய்பாடி புண்ணிய தீர்த்தங்கள் ஆடி
பூவுலகெங்கும் ஓங்காரத் தொனிபாடி. (ஓம்)
12 பாவலர் போற்றிடும் சென்னை பதிவந்த
அருள்ஜோதி வள்ளலே உன்னை
13 சிந்தித்து கைகூப்பும் என்னை
உன் திருவடிக் கடிமை கொள்தேசிகா
சொன்னேன்

—0—

ஷை மெட்டு ஆனந்தகுடீர் சிறப்பு

1 காணு மலிருக்கலாகாது (யாரும்)
கங்கை கரை சென்று சிவானந்த தனிப்

பரஞ்சுடரை (தனிப் பரம் பொருளை)
(காணுமல்)

2 காணுமலிருக்கலாகாது காய கட்டைக்
கடத்தேற வேண்டி நினைத்தால் (காணுமல்)

3 கோணல் வழியில் செல்லும் மனமே
உந்தன் குறை தீர்க்க தோன்றினை குருவான
பரனை (குருவான சிவனை) (காணுமல்)

4 சென்று தரிசிக்க வேண்டும் (நீ)
சிவானந்தம் தங்கும் ஆனந்த குடீரம்
(ஆனந்த குடீரம்)

5 பொங்கும் பிர்ம்மானந்த போதம் (எங்கும)
அங்கு கங்கை தவழ்ந்தோடும் மங்களம் பாடும்

6 சங்கடங்கள் தானுய் ஓடும்
உபசாந்த மடுவினில் மனம் விளையாடும்
தினம் மனம் விளையாடும்

7 கண்டு கலிதீர்க்க வேண்டும் (நாம் சென்று)
கைவல்யம் அருள் சிவானந்தர் பொற்பாதம்

8 சஞ்சிதசுமை தீர்க்கதோன்றி (அவர் நம்)
இனி அஞ்சேல் அஞ்சேல் என்று அபயஸ்தந்
தந்தார்

9 பஞ்சபூதங்கள் விகாரம்—(எல்லாம் பஞ்ச
பூதங்கள்)
உற்றுப் பார்த்தாலோ, தனைக்கண்டு சுகிக்க
லாம் யாரும்

10 கண்டதே கண்டு மென்மேலும்
வீணய் காலத்தைப் போக்கினல் யார் துணை
பாரும் (காணுமல்)

11 கூறும் அகங்கார த்தை சுட்டு—(காம்)
குடியிருக்கலாம் இதில் பவ பாசம் விட்டு
(காணுமல்)

12 கண்ட சுகம என்ன பாரும் வாரும்
சண்டன் ஓலைக்குமுன் ஜடிதியில் வாரும்
(ஓம் குரு)

13 சித்த ஸு த்தி தரும் பாதம் (ஜெகத்)
ஜோதிஎன ஒளிர் ஸத்குரு பாதம் (ஓம்குரு)

14 முக்தி தரும் திருப்பாதம் கண்டு
முக்காலும் ஸேவிக்க ஓடிநீர் வாரும் (ஓம் குரு)

15 பந்த விச்சேதன பாதம் எந்தன் உயிர்க்
குயிர் ஆகிய பாதம் (அது)

16 ஸ்வந் த சிவானந்தர் பாதம்
தோன்றிய மும்மூர்த்தியாய் நின்ற பாதம்
(ஓம்குரு)

17 ஆண்டி என நின்ற பாதம் அர்ச்சிக்க
அர்ச்சிக்க வேண்டும் பொற்பாதம்

18 கங்கை புகழ்கின்ற பாதம்—கங்காதரம்
ஹரி கீர்த்திக்கும் பாதம்—(காணுமலிருக்க
லாகாது)

—0—

நந்தபாலன் கருணைசெய்வார்—என்ற மெட்டு

பல்லவி.

குரு நாதன் கருணை செய்வார் (அருள் குரு நாதன்)
மனமே. (குரு)

அநுபல்லவி

கனவிலும், நினைவிலும் என்னைப்பிரியாத(அன்பர்)
கைவல்ய சுகநிதி கதவுதிறந்தது (குரு)

சரணம்

1 உலகில் உலாவி உண்மை உசாவி
தன்னை அறிந்து இன்ப புன்னகை கொள்ள
(குரு)

2 மன தென்னும் அகழியில் சுழலில்
அமழ்ந்து தினம் மரண பயத்தால் துன்பம்
அடையும் நமக்கு (குரு)

—0 -

கண்ணன் மனநிலையை தங்கமே தங்கம் என்ற
பாரதியார் பாட்டு மெட்டு

1 சத்குருவின் பாதமலர் சரணமென்றேன்
தோழி

சச்சிதானந்த நிலை உறையும் என்றேன்

2 சொச்சப்பொருள் எதுவோ சொல்லனும்
என்றேன் தோழி

துரியவெளிக்குவழி செய்யுவீரென்றேன்

3 ஹரிஹரன் சரிதைகள் எதற்கோ என்றேன்
அந்த பெரிய வம்புகள் பேசிகளைத்தேன்
என்றேன் (தோழி)

4 பச்சைநிற வண்ணனும், பொய்யனே
என்றேன் (தோழி)

மலபலவித உருவமும் செய்ததே—என்றேன்

5 தேசங்கள் எங்கும் சுற்றி திகைத்தேன்
என்றேன்
அந்தபேசும் பிர்மத்தை சொன்னால் நகைத்
தேன் என்றேன்
6 நேசத்துடனே யுண்மை யுரைப்பீர் என்றேன்
என்னை சாஸ்வதப் ப்ரமத்துடன் கரைப்பீர்
என்றேன்
7 ஆசா பாசமிறக்கும் மருந்தெ தென்றேன்
தோழி
அந்த அகண்ட வெளியை காட்டிவிடும் நீர்
என்றேன்
8 சுட்டிக் காட்டினார் சுயம் ஜோதியதனை
நன்றாய் உற்று விசாரி என்றார் தேஹி இவனை
9 எண்ணினது பொய்யும் ஆச்சு ஏழை மனமே
பொருள்
இரண்டற் றொன்றாகி போச்சு ஏழைமனமே
10 கர்மவினை தேகமாச்சு கள்ள மனமே இதைக்
காண கண்கள் நீதான் ஆச்சு கள்ள நெஞ்சமே
சொன்னேன்
11 எல்லையில்லா ஆனந்தமல்லோ ஏழை
நெஞ்சமே
அதை கொள்ளையிட்டு உஹப்பாருண்டோ
கூடஸ் தப் ப்ரும்மமே
12 தள்ளு ஸகலமும் நீயல்ல அல்லவே
(வெறும் கெட்ட)
கள்ளுக் குடிகாரன்போல பதில் சொல்லாதே

13 எள்ளுக்குள் எண்ணெயைப்போல் எங்கு
முள்ளதே
நீ என்றிருக்க பரஸுகம் உனக்குள்ளதே
14 கரைக்க மனதை ஜெகம் மறைகின்றதே
யாரும் உரைக்க அறியாஸுகம் (பதம்)
கிடைக்கின்றதே

—0—

என்றைக்கு சிவகிருபை வருமோ என்ற மெட்டு

பல்லவி.

சிவானந்த அருள் செல்வ தேசிகர்
அருள் மொழி சிந்தித்து பார் பார் நெஞ்சே
நீ தினம் (சிவா)

அனுபல்லவி

ஸுகானந்த நதியினில் (நீ) துளைந்து
விளையாடலாம் பவஸாகரத்தின் கரை
அடைந்து கடைத்தேறலாம் (சிவா)

சரணம்.

1 விந்தை உலகி தன்றோ வந்து வந்து
மறைவதன்றோ பந்து மனைவிமக்கள்
பாசம் தான் உனக் குண்டோ—
இந்துசேகரன் அயன் ஹரியும் நீயேதான்
அன்றோ
மந்த மதியடைந்து மனிதன் ஆகினாய்
அன்றோ (சிவா)
2 போனத்தையும் எண்ணுதே பொருமை நீ கை
விடாதே

மோனத்திலுலே மூடி முழித்துக் கொள்வாய்
இப்போதே
ஞானத்தை இகழாதே நால்வர் கால்
பிடிக்காதே (நீ)
மூவர்களுக்கும் எட்டா முழும்பொருள் நீ
இப்போதே (சிவா)

3 ஸத்சித் ஆனந்தமே தானே நாம ரூபமாய்
தழைத்து உலகாய் உன்னுள் வஸித்து பவம்
விடுத்து
எடுத்து பல உருவம் கொடுத்து ஜீவர்க்கு
முத்தி நடித்து மாயாவியாய்
நான் நீஎன்பதாய் தோன்றும் (சிவா)

—0—

ராகம்: மத்தியமாவதி தாளம்: ஆதி

க்ருபயாமாம் உத்தர ஸ்ரீ கிருஷ்ண என்ற பஜனை
பாட்டு மெட்டு

பல்லவி.

(சிவா) ஸத்குரு நாதன் வந்து நின்றார்
ஸ்கலமும் விண்டார் உலகம் பொய் என்றார்

அநுபல்லவி

பக்குவமாய் உள்ளம் பழுத்தது கண்டார்
பரப்ரும்ம பாவனை பண்ணலாம் என்றார் (நீ) (ஸத்)

சரணம்.

1 மெய்ப்பொருள் லக்ஷணங்கள் கண்டார்
மேலான துண்டார் (அவர்)
காலம் மூன்றுக்கும் எட்டா தென்றார் (அது)

கைவல்யம் என்றார்
ஐயம் எடுப்பதில் பலன் இல்லை என்றார்
அக்ஞான மதமோஹம் கொல்லணும்
என்றார் (ஸத்)

2 மறைக்கும் மாயத்திரைதான் என்றார்
மனதில் குணம் விடுத்தால்—அது நீ ஆனாய்
என்றார்
அற்புதம் கண்டால்
உறைக்க முடியாதிதை மறக்காதே என்றார்
உயர் சத்சித் ஆனந்த பரம்பொருள் நீயே
என்றார் (ஸத்)

3 எல்லாம் ப்ரதி பிம்பங்கள் என்றார்
எதைப் பார்த்தாலும் ஈசன் வாஸுதேவன்
தான் என்றார்
(இது மெய் என்றார்)
அது இது எனச் சொல்லி நீ அலையாதே
என்றார்
அன்புருவே ஜெகம் இதை அறிந்து மகிழ்வாய்
என்றார் (ஸத் குரு நாதன்)

—0—

ராகம்: ஸஹானா தாளம்: ஆதி

கண்டவுடன் என் உள்ளம் கொள்ளை
கொண்டாய் என்ற மெட்டு

பல்லவி.

அகங்கார ஸர்பத்தை பாரு அது

தான் இது ஆடும் அழகை உற்றுபாரு (நீ பாரு)

அனுபல்லவி

நீங்கா சிவானந்த நிர்மலன் அருளாலே
பாங்காஹ அதின் விஷபற்கள் களைந்ததாலே
(அகங்கார)

சரணம்.

1 தூங்கா ஸமாதியில் சேரு ஸ்வரூப மென்னும்
ஓங்கார பேழை அதின் ஊரு
ஏங்காமல் உனதின்ப இருவிளையாட்டைக்
கூறு
அகங்கார ஸர்பங்கள் உனக் கணிகள் ஆகும்
அப்போது (அக)
2 கண்டால் பயந் தொளிய வேண்டாம்
தடி எடுத்து இரண்டாய் அடித் தெறியவேண்
டாம்
அண்ட பிண்ட பிர்மாண்டம் அவன் தலைக்
கொருபாரம்
ஆனால் நமக்கு இவன் சிறு விரல் மோதிரம்
3 இருந்தால் ஆஸனமாகுங் கேளு எங்கேனும்
சென்றால் விரிந்து குடையாகும் அப்போது
பரிந்து படுக்க நல்ல மிருதுவாம்
படுக்கையாகும்—பல விதத்திலும் வாசல்படி
கார்க்கும் துணையாகும் (அகங்கார)

—0—

ராகம்: நாக நாமக்கிரியா தாளம்: ஆதி

பந்தால் அடித்தாளே பார்வதி பரமசிவன் மேலே
என்ற மெட்டு

பல்லவி.

அதிசயம் கண்டேனே—நிரதிசயஸுகம் கொண்
டேனே—நான்
(ஸத்குரு) தெரிசனம் செய்தேனே-சிவானந்த
தெள்ளமுதுண்டேனே—(மானே)

அனுபல்லவி

சதி செய்யும் மாய்கையின் தளைகளை கொய்தேன்
களையின்றி ஆனந்த பொய்கையில் துளைந்தேனே
(அதி)

சரணம்

1 மடமையை வென்றேனே மானிட மாய்கையை
கொன்றேனே
(நான்) சுடர் பரஞ்ஜோதி ஸ்வரூபம் நான்
ஆனேனே
த்ருடமுடன் நின்று விவேக வைராக்யத்தால்
(அதி)

2 ஒன்ருய் நின்றேனே—ஸர்வமும் நன்ருய்
கொண்டேனே
புண்டரீகத்தயனும் விண்டுவும் வேறன்றி
எண் டிசையும் நிறைய ஏழைமனம் கரைய
(அதி)

3 சிந்தனை அறியேனே எந்தனை வந்தனை
புரியேனே (நானே)

ஸந்ததம் ஆனந்த ஸிந்துநான் ஆனேனே
பந்த பவ வனத்தை இந்திரன் உலகாக்கி(அதி)
4 ஹிமகிரி சென்றேனே சிவன் புகழில் இன்
னமுதுண்டேனே
முன்னே கங்கைத் தவழும் என்னே ஆனந்தக்
குடீர்
பெண்ணே நமக்கு முத்தி சொன்னேன்,
விரைவில் வாராய் (அதி)

—0—

ராகம்: பியாக் தாளம்: ஆதி

பரீக்ஷை தேறிற்றே எந்தன் ப்ராண நாதனே
என்ற மெட்டு

பல்லவி.

சாந்தம் வந்ததோ மனதில் பந்த மகன்றதோ
(சாந்தம்)
1 ஸாஸ்திரங்கள் தோறும் உள்ள தர்க்க முற்றும்
தீர்ந்ததோ
பார்த்ததும் தான் நேத்திரானந்தப் புனல்
பொழிந்ததோ (உபசாந்)
2 சத்ரு வென்றும் மித்ரு வென்றும் சந்தேஹம்
துலேந்ததோ
சத்குரு சிவானந்தர் சொல் (உன்) புத்தியில்
நுழைந்ததோ (சாந்)
3 கூப்பிட்டுக் குழந்தைபோல் கூறுவார் ரகசியம்
கூடி அன்பணுகி நின்று பாடுவார் ஹரிஜெபம்
(சாந்)

4 ரிஷிகேச ஸுக நிவாஸ இன்பஜோதி
கண்டதோ
அண்ட பிண்ட முற்றும் மூடி ஆனந்தம்
பொழிந்ததோ (பர மானந்தம் (பொழிந்ததோ
(சாந்)

5 ஸகஜ நிர்விகல்பமாம் ஸமாதி வந்தடைந்ததோ
ஸகல நாடும் போற்றும் திவ்ய ஜீவியம் புரிந்
ததோ (உப)

—0—

தேவ பந்தானே மன ரங்க பந்தானே—என்ற
மெட்டு

பல்லவி.

மோஹன மதிமுகம் முழுதையும் காட்டாய்
மோக்ஷ ஸாம்ராஜ்ஜிய முழுமுடி சூட்டாய்
(உன் மோஹன)

அனுபல்லவி

துன்ப பவ வினையை தூரத்தில் ஓட்டாய்
ச்ருதி நான் மறை புகழ் ஸ்வரூபத்தைக் காட்டாய்
(மோஹன)

சரணம்.

1 ஜோதி ஸ்வரூபத்தை சொல்லிட மாட்டார்
ஜாதிமத பேதத்தால் நிலை நாட்டார்
வேத வேதியர்களும் (அதை) அறிந்திடமாட்
டார்

வைகுண்ட வாஸியுன் திரு விளையாட்டால்
(மோஹன)

2 எங்கும் நிறைந்தொன்ருய் ஏகவைபோகமாய்
எவ்வுயிருள்ளும் இலங்கிய ஞானமாய்
கை தொழும் தெய்வமாய் காரண பூதனய்
கைலை கிரியில் அன்பர் கை தொழும்
(தேவா நின்)

—0—

ராகம்: கரகரப்ரியா தாளம்: ஆதி

விடமுசாயவே என்ற மெட்டு

பல்லவி.

குருநாதா அபயம்—உனதருள் புரிவாய் இது
ஸமயம் (குரு)

அனுபல்லவி

பலகாலும் ஜெனனம்—ஒரு கணம் பிறியாவன்
துயரம்
சிறியேன் அடைந்தனன் பரிவாய் ஆதரி (குரு)

சரணம்.

1 கொடிய ஸம்ஸாரம் நெடிய காந்தாரம்
மனக்குரங்கு செய் கோரம் பவ தாபம் அதிகம்
பவஹர
அருணசலம் உரையும் ப்ரபுவே ஹரி அயன்
அறியா முதல்வனும் (குரு)

2 என் குறை தீர்த்து ஏழையைக் கார்த்து
முன் வினைதான் தீர்த்து பண்ணிய பிழை
பொறுத்து (நான்)
சிறுபெண் என்னவே மன்னித்து
உன்னடி ஏற்றுக் கொள் தன்ய சிவானந்தா
(குரு)

—0—

## கண்ணிகள்

தாயுமானவர் பாடல் எக் காலக் கண்ணிகள் மெட்டு

1 ஸத்குருவின் அடிமலர்க்கு சாற்றும் கைமா
றெதுவோ
பார்த்தேன் அதொன்றெனவே பல பொரு
ளும் நான் எனவே

2 உவமையற்ற நற்குருவே உன்மொழியை நான்
பிறியேன்
என்னை விட்டு நீவேறு இதை யறிய நூல்
வேறே (ஸ)

3 மனத்தை விட்டு ஊர்வேறே மலரை விட்டு
மணம் வேறே
கிளைகள் பலவிதை வேறே கண் பார்வை
வெவ் வேறே

4 அணையா விளக்கேற்றி அக இருளைத் தான்
ஓட்டி
க்ருபயால் கண்ணால் நோக்கி சிசுவாய் என்னை
ஆக்கிய (ஸ)

5 அரசும் மணிமுடியும் அமரர் பதவிகளும்

துரிசாய் புரம் நீக்கி பரிசாம் பொருள் உரைத்
தாய்

6 சரிஸமானத்தளித்தாய் ஜெகக் கிணற்றை
துற்று விட்டாய்

மனக்குரங்கை தான் பிடித்து மதிமயக்கிக்
கட்டிவிட்டாய்

7 பகையை உறவாக்கி விட்டாய் பவ பயத்தை
நீக்கிவிட்டாய்

இதைத் தவிர யான் வேண்டும் எப்பொருள்
தான் எங்குமுண்டோ

8 ஸத்சித் ஆனந்த வெள்ள தவத்துரையை
காட்டிவிட்டாய்

அவஸ்தைகளை ஓட்டிவிட்டாய் அறிய அமு
தூட்டி விட்டாய்

9 தன்னை யறிய ஒரு காலாட்டும் பாடிவிட்டாய்

என்னை துரிய வெளி இன்ப நிலை சேர்த்து
விட்டாய்

10 தூங்காமல் தூங்கி நின்ற ஸ்வானுபவம் தந்து
விட்டாய்

பாங்காக உன் தொழிலை பார்த்துரங்க
பண்ணிவிட்டாய்

11 ஆனந்த குடீரமென்னும் ஆச்ரமமும் நிறுவி
விட்டாய்

அன்பருள்ளம் கவர்ந்து விட்டாய் அன்னியரும்
உகந்து விட்டார்

12 தங்கும் ரிஷிகேசம் என்பார் ஸ்வாமி விஸ்வ
நாத ரென்பார்
(நீ) மங்கள முரளீ என்பார் மன்னன் ரகுராம
னென்பார்

13 வாடாத பூவே யாரும் வரையாத சித்திரமே
கரையா கல்கண்டே உன்னை கை தொழுதேன்
கைதொழுதேன்

—0—

ராகமாலிகை: ராகம்: ஆனந்தபைரவி

ஸத்குரு நாதர் பதிகம்

1 மூவுருவும் ஓர் உருவாய் முனியாய் ஞான
முக்திதரும் ஸத்குருவாய்
ஆதிமூலமான அத்துவித வஸ்துவதாய் அகிலத்
துள்ளே
இத்துவிதவாதியர்க்கும் இல்லை என்பார்க்கும்,
பக்தியுடன்
ஞான ஒளி பரிந்து காட்டி பரஞான வீடருளும்
பாதம்போற்றி

2 உலகிலே மாந்தர்க்கு உபதேசம் செய்யவே
ஓடிவந் தவதரித்தாய்
ஸத்சித் ஆனந்தமுடன் நாமரூபம் ஏற்ற தவ
யோக சிவானந்தமே ஸந்தேஹமாம் பேயை தலை
தூக்க ஒட்டாத மந்திரம் ஏது புகல்வாய். இந்திர
னும் சந்திரனும் எமனும் உபேந்திரனும் அந்த
ணன் ஹரிஹரன்முதல் பந்தித்திடில், அவரும்
விடுதலை அடையாதபடி செய்யும் வன்பேய்

அன்றே. கெடுநினைவு ஸங்கல்ப வாஸனு ரூபமாய்
கெடுத்தென்னை மிரட்டும்—இதனை துரத்தி இம்
மனதை நிலை நிறுத்தும் ஓர் தத்துவம் உரைத்
தருள் செய் ஞானகுருவே

3 பெற்றதாய் தந்தை ப்ராதா பதி குரு தெய்வ
மென்றும்
உத்தமத் துணை நீ என்றும் ஓடிவந்தடைந்த
என்னை—பக்த
னென்றெண்ணு வாயோ—பாலனென்றெண்ணு
வாயோ
பாலனென்றெண்ணுவாயோ—பித்தனென்
றெண்ணுவாயோ
பிழைகண்டு தள்ளுவாயோ உத்தம மான
பத்தமடை பெற்ற
பாக்யமே-சொல் ச்ரத்தையும் இல்லை சித்தஸூத்
தியும்
வல்லைதேவா, கத்தினேன் கரடி போல—கருவுற்ற
நாளதாக
இத்தரை இன்பம் வேண்டி என்றைக்கும் நினைத்
ததில்லை
சுத்த சிற்ஜோதிகாண துரிதமாய் அருள் செய்
நீயே

4 குத்திரமாம் பஞ்சகோசக் குஹைக்குள்ளே
மெய்திரம் போல
நின்று—ஸத்தியம் போல் உலகைதான் தோற்று
வித்தென்னை

ஸந்ததம் மூடி, ஓடி இத்தின மென் உண்மைஉரு-
தெரியாதபடி
யாடி யீஷணைகள் தன்னை நாடி-- கோஷமாயா
வித்தை கொடிய
சூதுகள் ஆடி கோர பவ வினையும் தேடி—கொண்
டென்னை
சிரயிட்ட கூவத்தை விட்டு வெளிபட்டிவுன் அருள்
செய்
குருவே இஷ்டமுடன் ஹிமயத்தில் எங்கும் ப்ரகா
சிக்கும் ஹே சிவானந்த குருவே

5 எங்கும நிறைந்ததாய்-எவரும் அறியாத தாய்
இரண்டற்ற
பொருளதாகி என்றும் அழியாததாய், எல்லாம்
படைப்பதாய்
எண்ணி லடங்காத தாகி—கல்லிலும் செம்பிலும்
கலந்துயிர் குயி
ராகி கண்மூன்று பெற்ற தேவாய்—காலகாலன்
தொழும்
கருமுகில் வண்ணனாய் கமலத்திலமர் பிரம்மனாய்
—என்மனக்
கோவிலில் குடிகொண்ட தெய்வமாய் இலங்கு
ஸத்குரு நாதனே

6 அண்ட பிண்டங்களை உண்டாக்கி
தன்னுள்ளே அழித்து
ரக்ஷிப்பதாகி அறிஞர் ஹருதயத்தினுள் அலர்ந்த
பங்கஜமதாய்

அஞ்ஞானி கெட்டா ததாய் மெய்ஞான தீபமாய்
மேனிஇல்லாத
தாய் ஞானியர் அறிந்த ஜோதி பாரினில்
பக்தர்க்கு ப்ரஸன்ன
மாவதாய் பாமரர் காணுத தாய் என் மனக்
கோவிலில் குடி
கொண்ட தெய்வமாய் இலங்கு ஸத்குரு நாதனே
7 அஷ்டாங்க யோகாதி யாகாதி கிரியை களால்
அறியப்படாத
தாகி ஆசாரியர் உபதேச ப்ரகாசத்தால் அறியப்
படுவதாகி
மனமாதி மெய்களுக் கெட்டாத ஜோதியாய்—மாடு
களை மேய்
க்கும் ஆதி மந்த ஹாஸத்துடன் குழல் ஊதி
அன்பர்கள்மனதை
கரஹிக்கும் ரூபி (என் மனக்கோவிலில்).
8 கண்கட்டு வித்தையோ கண்டதுகள்
மித்தையோ காணுததே
அவித்தையோ—வீணுக பல கோடி அண்ட ப்ரம்
மாண்டங்கள்
விளையாட்டிற்காய் படைத்து—லீலா விநோ தமாய்
பலஉயிர்
கோடிகளை விருத்தி செய்தே அழிக்கும் எல்லாம்
தன்னுள்
கொண்டும் ஏதும் இல்லா ததாய் ஈராறு பேர்
பெற்ற தாய்—

என் மனக்கோவிலில் குடிகொண்ட தெய்வமாய்
இலங்கு ஸத்குரு நாதனே
9 நாமரூபம் அற்று நடுநின்ற நிலை அதாய்—
நாநாவடிவுள்ள
தாய், நான்யார் எனத்தேடும் ஞானியர் அடைவ
தாய்—
நவரஸத்தில்லாததாய் பவரோகம் தீர்த்திட
பலபெயர்
பெற்றதாய் பரிபூரணனந்தமாய் கருணையால்
ஆத்மாக்கள்
கரை ஏற மெய்ஞான கதிரவன்போல் உதித்தாய்
(என்
மனக் கோவிலில் குடி கொண்ட தெய்வமாய்
இலங்கு ஸத்குரு நாதனே)
10 வாழ்க ஸத்குருபரன்-வாழ்க ஸத்குரு வருள்-
வாழ்க
மெய்ஞான வீரர்-வீழ்க தீம்புனல்-வையகம் செழித்
திடவே தழும் ஓங்கிவாழ்க ஸாதுக்கள் மெய்யடியார்
தங்கும் ஆனந்த குடீர் ஜோதி சிவானந்த
மூர்த்தே —
பேதையர் அறிவிலிகள் பெண்கள் என தள்ளாது
பிரிய
முடன் அருகழைத்து அரிய தாரக மந்திரப்
பெரிய ஓம்
ஓங்கா ரத்வனிகள் கருணை நிதியே புகல்வாய்
(என் மனக்

கோவிலில் குடி கொண்ட தெய்வமாய் இலங்கு
ஸத்குரு நாதனே)

—0—

ராகம்: நீலாம்பரி தாளம்: ஆதி

ஸ்ருங்காரலஹரி என்ற மெட்டு

பல்லவி.

ஜோதி தெரியுதே சொல்லினுள் அடங்கா
ஸுகானந் தானுபவத்தில் ஆத்மஜோதி
சுந்திர ஹிமயமதில் தோன்றும்
ஆனந்தகுடீரில் ஜோதி (தெரியுதே)
சொல்லினில் அடங்கா சிவானந்தா
குரு வென்னும் அருள் ஜோதி (தெரியுதே)

அநுபல்லவி.

வேத கீதனே வெள்ளி மலை தன்னில்
வேணுநாதனையும் காணும்படிக்கு ஜெகத்
(ஜோதி)
ஜாதிமத மில்லை ஸகல உலகுடன்
ஓதிப் பல கலையும் ஆதி எனச் சுடற் (ஜோதி)
தத்வமஸி என்னும் நித்ய நிலையதை
புத்தியில் உரை உத்தமப் பரஞ்ஜோதி
புத்த ஹ்ருதயமும் சித்த ஸுத்தியும்
பக்த ஸேவையும் பாரும் நீரும் இதோ (ஜோதி)

சரணம்.

1 மனதாகிய ஸாகரமதில் மதியாம்
கிரண மனந்தம் ஒளிவீச
இருளாம் பவ வனங்கள் பட்டழிந்திட

எனதாம் பரம் பொருள் தன்னை அடைந்திட
(எனதாம் பரம்பொருள் தன்னை உணர்ந்திட)
(ஜோதி தெரியுதே)

—0—

ராகம்: அஸாவேரி
தாளம்: ஆதி

சரணம் சரணம் ரகுராமா நீ என்னை என்ற மெட்டு

பல்லவி

சரணம் சரணம் குருநாதா சிவானந்தா
என் தாபத் ரயத்தை தீர்ப்பாய் ஸ்வந்தா நீ
வந்தாள் (சரணம்)

அநுபல்லவி

ஆல நஞ்சுண்டவன் ஆலிலை துயின்றவன்
வேலன் முருகன் போல் என் நேரில் நின்றருள்
சிவா (சரணம்)

சரணம்.

1 கூவும் குழந்தை குரல் தாயின் செவிக் கெட்
டாதோ
குறை தீர்க்கவந்த கோவிந்தா வேணு
கோபாலா
ஜாதி மதம் கடந்த ஜோதி ஜோதி என்றெங்
கும்
ஓதிக் கும்பிடுகின்றார் நீதி கடவுள் உன் தாள்
(சரணம்)

2 வேதம் புகழும் நால் வேதியரும் புகழ்
ஹிமாலய யோகியாய்-வேஷம் தரித்த தேவா

த்வேஷம் ப்ரீதிகள் அற்ற நிர்தோஷ
பொருளே ஸ்ரீ கிருஷ்ண
நீ காஷாய வேஷத்தில் கங்கை கரையில்
நின்ருய் (சரணம் சரணம் குருநாதா)

—0—

பூமி மெச்சிடும் அண்ணுமலைக் கோர் துணை
யானவன் எ. மெட்டு
(சிந்து மெட்டு)

1 உலகம் புகழ்ந்திடும் உத்தம ஸ்ரீ சிவானந்தமே
பவ பந்தமே பார்த்து அஞ்சுமே
உந்தன் உத்தம பொற் பாதம்
ஊன்றிப் பதிந்த தென் நெஞ்சமே
நான் உன் தஞ்சமே (இந்த உலகம் புகழ்)
2 அகிலம் புகழ்திரு அப்பய்ய தீக்ஷிதர்
வம்சமே ராஜஹம்சமே அன்பே கண் பாருமே
எங்கள் முன்னை வினை தீர்க்க
முனி வேஷமாய் நின்ருய்
முத்தனே ஹே பரிஸுத்தனே
3 அன்னை தந்தை குரு தெய்வம் பதி ஸுதன்
ஆகினுய் தவமாகினுய் தர்மம் நீ ஆகினுய்
மோஹிக்கும் மூடர்க்கும்
யோக சித்தானந்தனுகினுய்—கைலை
ஏகினுய்
ஆம் இந்த பூமியில் அத்வைத சூர்யன் நீ
ஆகினுய் நித்யன் ஆகினுய் கர்த்தன் நீ ஆகினுய்
மெத்த தவம் செய்த இந்த மேதினி

பாரத தேசமே பெற்ற ப்ரகாசமே
4 கண்டு வுன் மலரடி கனிந்த அருள் மொழி
எங்குமே ப்ரும்மம் பொங்குமே
சங்கைகள் மங்குமே-உந்தன்
பங்கய கண் கொண்டு பார்த்தருள்
ஸ்ரீ சிவானந்தமே ஆத்மஸ்வதந்திரமே
உலகப் புகழ் திரு உத்தம ஸ்ரீ சிவானந்தமே.

—0—

ராகம்: சுருட்டி தாளம்: ஆதி

செம் பவழ வல்லிபோல எங்கு வந்தாய் வந்தசேதி என்ன சொல்வாய்—என்ற ராம நாடக பாட்டின் மெட்டு

1 எங்கள் குல தெய்வமே ஹே க்ருபா நிதே ராமா
நீ இங்கு சிவானந்தமாய் எழுந்தருளினய் மன்ன
2 எங்கள் குல தெய்வமே ஹே முரளீ மோஹன
நீ இன்று சிவானந்தமாய் ஹிமயமதில்
நின்ருயோ
3 எங்கள் குல தெய்வமே ஹே சிவானந்தப்ரபோ
ஹே சிவானந்த குரோ
நீ என்றும் நீடுழிவாழ்க வாழ்க ஆனந்தகுடீர்
4 பாதகங்கள் மலிந்த இந்த ப்பாமர உலகினை
(மிக்க) பாதுகார்த்திட வந்தாய் ஆதிமூலம்
போல் சிவா
5 நான் ஏதுபிழை செய்யினும் பேதைஎன்று
மன்னிப்பாய்
ஜோதி திருவிளக்கே ஸ்வரூப சாக்ஷாத்காரமே

6 தோன்றி ஹிமய மதில் என் துன்ப இருள் விலக்கி
பக்குவம் செய்தாய் செய்தாய் பாக்ய சிவானந்தமே. (சிவா)

7 உன் பாத பத்ம படகை பார்த்து சரண் அடைந்தோம்
ஸாது சிகாமணியே தள்ளி விடாதே இன்னும்

8 எங்கிலும் உன் வடிவம் தங்கி புகழ் பரவும்
எங்கிலும் உன் பொன்முகம் தங்கி என் சஞ்சலத்தை
மங்களமாக செய்ய மாதவா தாரும் வரம்

9 கையில் குழல் பிடித்தான் கண்ணன் ப்ருந்தா வனத்தில்
(அன்று)
மையில் பென் நீ பிடித்தாய் மானிலமே மயங்க
பொறுமையில் பென் நீ பிடித்தாய் பொழிந் தாய் அமுத மழை

10 வாவென்றழைப்பான் கண்ணன் வந்தால் மறைந்தொளிவான்
நீ தாவியணைக்க கண்டேன் தத்வமஸி லக்ஷ்யமே

11 வா வென்றழைப்பான் கண்ணன் வந்தால் பரிகசிப்பான்
நீ கூவி யழைக்க கண்டேன் கூடஸ்த ப்ரும்மமே

12 வா வென்றழைப்பான் கண்ணன் வந்தால்
பொய்கள் மொழிவான்
நீ இந்தா, இந்தா என்று அருள் தந்தாய்
சிவானந்தமே
13 கூடி குழந்தைகள் நாங்கள் கோடி பிழை
செய்யினும்
வேடிக்கையாய் மன்னிப்பாய் வேதாந்த
நாயகமே
14 கூடி குழந்தைகள் நாங்கள் பலகோடி பிழை
செய்யினும்
நீ கூப்பிட் டுபதேசிப்பாய் குளிர்ந்த
சிவானந்தமே
15 சென்று வருக இடம் எங்குமில்லை யல்லவோ
தொண்டர் தொழும் செல்வமே தூய
சிவானந்தமே (எங்கள்)

—0—

ராகம்: சுருட்டி தாளம்: சாபு

மாற்றறியாத செழும் பசும் பொன்னே என்ற
மெட்டு

1 ஸ்ரீல ஸ்ரீ சிவானந்தா நின் அடி சரணம்
என் ஜெனன மரணபயம் தீர்த்தருள் தரணும்
2 கருவிற்குள் தள்ளாதே கலியுக வரதா
கயிலை கிரீசாவுன் கழலிணை சரணம்
3 அறிவிற்குள் அறிவான ஆனந்தரூபா
ஆதி மூலமே சிவா அற்புத சரீதா

4 (என்) ஹ்ருதயமலரில் உந்தன் பாதமலர் பதித்து
என்றும் புன்னகையுடன் எனக்குள் நீ வசித்து
என் மனத்துயர் தீர்த்துந்தன் அருள்ஜோதி அளித்து
மானிடப் பிறவியை மாற்றி இன்பருள் வாய் நீ
5 நினைக்க நினைக்க அன்பு பெருக்கை நீர் கொடுத்து
நித்ய உபசாந்த மனைக்குள் எனை அழைத்து
தினப்போதும் பிரியாத சின்மயமளித்து
சிவானந்த ஜோதியில் சிறுமிக்கிட மளிப்பாய் (திவ்யசி)
6 தத்வமஸி லக்ஷ்ய ததாகார மளிப்பாய்
தானே நீயாய் நிற்க தான் வழி உரைப்பாய்
ஹிமாலயம் நின்றொளிர் சிவ மாதவ மணியே
பேதை என் பிறவிநோய் தீர் சிகாமணியே
7 ஆதாரம் ஏதும் இன்றி அலைந்தேன் கண்மணியே
அக்ஞான மதமோஹம் நாசம் செய் கனியே
தேனே பாலே தின்ன திகட்டாத கரும்பே
திருநெல்வேலி யளித்த செழுஞ்சுடர் ஒளியே
8 ஷண்முகனே கண்ணனே சக்திவேல் குஹனே
சமரஸம் ஸ்தாபித்த குரு சங்கர பாதனே
முக்தியளிக்க வந்த முகுந்தனே சிவனே
பத்தமடை க்ஷேத்திர பார்வதி ஸுதனே (நீர்)

—0—

ராகம்: யதுகுல காம்போதி  தாளம்: மிச்ர ஏகம்
மந்திரக் காரண்டி என்ற மெட்டு

1 தேடி அலைந்தனன் தோழி ஒரு திவ்ய சிவ
ஜோதி தேடி (நான்)
பாரினில் எங்கும் தோழி ஒரு பரமகுருவை
நான்நாடி (தேடி)

2 கண்டு மகிழ்ந்தனன் தோழி தெய்வ கங்கை
கரை தன்னில் (தோ)
ஆனந்த மென்றோர் குடீராம் அதில் ஞானனந்
தச் சிவாபேராம்

3 அதில் ஜோதி தெரிந்தது (தோ)
எங்கும் சுத்த ஓம் ஓம் என்று பாடி

4 வா, வா, வா என்றது கேளீர் அன்று வட
வாலின் கீழ் நின்ற யோகி
போலும் வாஸுதேவன் போலும் ஆகி
(நம்மை) வாரி விழுங்கிற்று பாரீர்

5 பார்க்கின்ற பார்வையில் ஜோதியாகி என்
பாபத்தை தீர்த்து விட்டாண்டி
பார்க்கின்ற பார்வையில் (ஜோதி) அவர் நம்
பாசத்தை நீக்கிடுவாண்டி

6 பார்க்கின்ற போதிலோ தோழி என்
பவரோகத்தை நீக்கி நின்றாண்டி
பார்க்கின்ற போதே கேள் தோழி
என்னை பாவன மாக்கி நின்றாண்டி

7 நோக்கின்ற நோக்கினில் தாண்டி
என் மன நோய்களை தீர்த்து விட்டாண்டி

கேழ்க்கின்ற கேள்வியில் தாண்டி
நம் ஆதி க்லேசங்கள் தீர்த்திடுவாண்டி
8 பேச்சினில் மூச்சினில் தாண்டி தோன்றும்
பொய் பேதங்கள் நீக்கிடு வாண்டி
காண்கின்ற காக்ஷியில் தாண்டி
கமலக் கண்ணனை வென்று விட்டாண்டி
ஆண்மையில் மேன்மையில் தாண்டி
ஐயன் அயோத்யா பதியை ஒத்தாண்டி
(ஸ்ரீ ராமன்)
9 கல்வினில் செம்பினில் தாண்டி தோன்றும்
கலைகளை வென்று நின்றாண்டி
10 காஷாய வேஷத்தில் தோன்றி (ஸத்குரு)
கண்டவர் கண் விருந்தாகி நிற்பாண்டி
11 பண்ணில் பதிந்த நெஞ்சாண்டி
(உத்தம பண்ணில்)
பக்த பாலனாய் சிவா தோன்றி
12 மண்ணில் புகழ் தெய்வ மாண்டி
முடி மன்னரும் யாரும் ஒன்றாமடி
13 என் கண்ணைத் திறந்து விட்டாண்டி
கண்டதோர் காக்ஷிக்கும் சாக்ஷியாம் ஆண்டி
14 அவர் நிற்க ஹிமயம் கண்டேனடி
நித்ய ஆனந்த சுடர் தெய்வம் தாண்டி
15 விரக்தி வைராக்கிய மில்லாண்டி (அதை)
விவரிக்க சொல் அறியேண்டி
16 பக்த பராதீனன் தாண்டி உத்தம
பத்த மடை உதித்தாண்டி

17 உபநிஷதப் பொருளாண்டி உலகிற்கே
உத்தம ஸத்குரு தாண்டி
18 ஆதிக்கும் வியாதிக்கும் தாண்டி
ஒரு அற்புத வைத்தியம் செய்வாண்டி
19 அன்புப் பெருங்கடல் தோழி அது
அனைத்துமாய் நின்றது பாரீர்

—0—

ராகம்: பியாக் தாளம்: ஆதி

ஜெய ஜெய கோகுல நந்த பாலா என்ற மெட்டு

பல்லவி

ஜெய ஜெய ஸத்குரு நாதா நாதா
தீன ரக்ஷகா ஸ்ரீ சிவானந்தா

அநுபல்லவி

வா வா ஸத் குருநாத தேவா (நீ)
வந் தென் மனத்துயர் தீராய் தீராய் (ஜெய)

சரணம்.

1 குழந்தை மொழியும் மலர்ந்த விழியும்
கொண் டென் மனதினில் குடி கொள் தேவா
(ஜெய)
2 கண்டேன் கண்டேன் கைலை கிரியில்
கண்ணனுடன் முக் கண்ணனையும் உன்னில்
(ஜெய)
3 நினைத்த அன்பர்கள் நினைவில் நிற்பாய்
நித்ய நிர்மல ஜோதி ஸ்வரூபா (ஜெய)
4 பக்த ரக்ஷகா பரம குருவே (ஹே பக்த)

பாக்ய ஹிமாலய சிவானந்த ப்ரபுவே
(ஜெய ஜெய)

—0—

ராகம்: ஆனந்தபைரவி தாளம்: சாபு

அற்புதமே உந்தன் அழகான கொண்டைக்கி
அறும்பு முடித்தார் ஐயா—என்ற மெட்டு

பல்லவி

சரணம் சரணம் குருநாதா சிவானந்தா
(என்) சஞ்சலம் தீர்த்தருள் தாதா (குருநாதா)
(சரணம்)

அநுபல்லவி

தேசம் புகழும் திவ்ய ஜீவிய மலர் தரும்
யோகியே ஹிமாலய நாயக ஜோதியே (சரணம்)

சரணம்.

1 புன்னகை அரும்பும் நின் பூர்ண சந்திர முகம்
கண்ணை கவரும் காவி கலையுடன் அன்பர்கள்
நெஞ்சில் குடி இருந்து நீடூழி நீர் வாழ்க
நித்யானந்த நிரந்தர ஸுகபோதா (சரணம்)

2 ஹ்ருதய மலரில் (எந்தன்) ஹ்ருதய மலரில்
உந்தன் பாதமலர் பதித்து நான்
என்றும் பூஜிக்க வோர் வர மருள் குருநாதா
குன்றினில் அமர் குஹா கோகுல தவஸுதா
குறை தீர்க்கவந்த சிவானந்த மலர் பாதா
(சரணம்)

—0—

ராகம்: மோஹனம் தாளம்: சாபு

நில்லபேகையா கிருஷ்ணையா நாமனதல்லி என்ற

புரந்தரதாஸ் கீர்த்தனை மெட்டு

பல்லவி

சோதிக்காதே குருநாதா (இன்னமும்)
சோதிக்காதே குருநாதா (அடிமையை)
சிவானந்தா ஆனந்தா (என்னை) சோதி

அநுபல்லவி

(சிறு) பிள்ளைப் பருவம் முதல் (ஒரு) கள்ளங்
கபடறியேன்
வள்ளலே வாழ்த்தி (நீ) வழி காட்டினல் ஆகாதா
(சோதி)

சரணம்.

1 தேடியுனை அடைந்தோர் திரும்பிப் பிறப்ப
துண்டோ
வாடும் மனதிற்குன் வதனமே மருந் தன்றோ
கூடிப் பிரிந்தால் துன்பம் கூற முடியாதன்றோ
தேடி அபயம் தரும் தேசிகன் நீரேயன்றோ
தேடி அபயம் தரும் சின்மய ப்ரபுவன்றோ
(சோதி)

—0—

ராகம்: பந்துவராளி தாளம்: ஆதி

நின்னுநேர நம்மினனுரா ஓராம என்ற மெட்டு

பல்லவி

என்னையுன் அடிமை கொள் ஐயா

ஹே சிவா சிவா நீ மெய்யா (என்னை)

அநுபல்லவி

முன்னை வினை முற்றும் நீக்கி (என்)
முக்தன் ஆகும் மார்க்கம் காட்டி (நீ) (என்)

சரணம்.

1 அன்புக் கடல் ஆன உன்னை
அடைந்த வர்க்கு துயரமில்லை
(இந்த) இரும் புலகை மாற்ற வந்தாய்
(பேரின்ப) இன்பமே கண்பாரும் ஐயா
2 பத்தமடை தான் உதித்து
பாக்ய ஹிமாலயத்தில் வசித்து
சாஸ்வத பதவியார்க்கும்
தந்த சிவானந்த ஸ்வாமி (நீ)
சாஸ்வத பதவி யார்க்கும்
தந்த சிவானந்த குருவே (ப்ரபுவே)
(நீ என்னையுன் அடிமை கொள் ஐயா)

—0—

ராகம்: நவரோஸ் தாளம்: ஆதி

கல்லார்க்கும் கற்றவர்க்கும் என்ற மெட்டு

1 பாரதத்தாய் பொக்கிஷமாம் இந்த
பாக்ய ஹிமயத்தில் நம்பாக்ய (ஹிமயத்தில்)
படர்ந் த லர்ந்த பங்கஜமே
பரிபூர்ணமே உன்னை (சிவா பரி பூர்ண)
2 கண்டேன் கலை சக்திரமை கமல
கண்ணனையும் உன்னில் ஒன்றாய்

கங்கை பொங்கும் மங்கள ஆனந்த
சுடர் தன்னில் (சிவானந்த சுடர் தன்னில்)
3 காணக் கிடைக்காத அருங்கற்பகத் தருவே
(சிவா) கஷ்ட ஸுகம் நீக்கி முக்தி
தந்தாள் நீ ஸத்குருவே (எங்கள்)
4 உபநிஷதப் பொருளே சிவா ஒப்பிலா குருவே
உன்னையன்றி வேறுதுணை உலகில் இல்லை
திருவே
5 என்னாள் உன் தாள் தேடி ஏழை
ஏங்கி நின்றேன் ப்ரபுவே(சிவா)
என்முன்னாள் வினை தீர்க்க வந்த மூர்த்தி
தவ உருவே (சிவா மூர்த்தி தவ உருவே)
6 ஜீவர்க் கொரு துணையே சிவஷண்முகத்தின்
வடிவே
மூவர்க் கறியாத முழு முதற் பொருளே குருவே
7 எங்கள் தவப்பயனே கிருபை பொங்கும்
ஞான பரனே (சிவா) அங்கும் இங்கும்
எங்கும் நிறைந் தானந்த நிர்மலனே
8 தமிழ்நாடு தந்த தவப்பயனே ஞானமயனே
(எங்கள்) தந்தை குரு தெய்வம் ஸுதன்
ஸகலமும் நீ சிவனே குரு சிவனே

—0—

ராகம்: சிம்மேந்திர மத்திமம் தாளம்: ஆதி

எல்லாம் இன்பமயம் என்ற மெட்டு

பல்லவி

என்ன ஆனந்தம் ஹிமயமதில் (நமக்கென்ன)
ஹிமயமதில்

தங்கும் சிவானந்தர் பாதம் சிந்தை செய்யச்செய்ய
(நமக்கென்ன ஆனந்தம்)

அநுபல்லவி

வாரும் வாரும் எனக்கூறும் உபசாரமும்
யாரும் காண அரிதான வினயமொழி
(என்ன ஆனந்தம்)

சரணம்.

1 அங்கு பூஜைமணி சங்கநாத தொனி
இங்கு அகண்ட ஜபம் எங்கும் ராமரஸம்
(நாமரஸம்) (என்ன ஆனந்தம்)

2 வேதஸார உபதேச கிளாஸும் ஹரிகீத
நாம ஸங்கீர்த்தனமும் தினமும்
ஜாதி வர்ண நிறபேத மின்றி அருள்
ஜோதி வானில் ஒளிர் ஞானிகள் நடுவில்
நமக்கென்ன (ஆனந்தம்)

3 ஸத்குரு சிவானந்தர் தரிசனமும்
உத்தம சிதானந்தர் பரிஜனமும்
காணக் காணச் சலிக்காது கங்கை தவழ்ந்
தோடும் வைபவமும்
கூடும் தியான நிலை (என்ன ஆனந்தம்)

—0—

(ஆதிச் சிதம்பரத்தே என்ற மெட்டு)

1 'ஓம்' என்று கும்பிடுவோம் சிவானந்த உத்தம
சத்குருவை,
ராம் என்று கைத்தொழுவோம் சதாகாலம்
ஷ்யாம் என்று தொண்டு செய்வோம்

2 ஆதி பரம் பொருளே சிவானந்த அற்புதத்
தேன் சுவையே
ஜோதித் திருவிளக்கே சிவானந்த ஸுகஸ்வ
ரூபகுரோ
3 வேத சிகர மென்கோ? சிவானந்த வேதாந்த
ரகஸ்ய மென்கோ?
நாத ஸ்வரூப மென்கோ? நடமாடும் நான்முக
ப்ரம்ம மென்கோ?
4 ஓங்கார உள்ளொளியோ சிவானந்த உத்தமப்
பூங்கொடியோ?
நீங்கா ஸமாதியிலே நிலேத்திடும் நிர்க்குண
வஸ்துவதோ?
5 குஞ்சித பாதமென்கோ? குரு உன்னை
கோபால க்ருஷ்ணன் என்கோ?
வேதா க மங்களெல்லாம் துதித்திடும் விஷ்ணு
வடிவமென்கோ?
6 ஷண்முக நாதனென்கோ? ஸரஸ்வதி தன்
அவ தாரமென்கோ?
விண்ணில் ஒளிச்சுடரே வே தாந்த விளக்
கெனும் ஸத்குருவே
7 ஓதிப் பலகலையும் படித்தபின் உத்தம
வைத்தியனுய்
பத்துத் திசை பரவ மலேயாவில் பக்குவ
டாக்டர் என்கோ?
8 சீர்பெற்று வாழ்ந்திருந்த திருக்குப்புஸ்வாமி
புனி தனென்கோ?

சீர்பெற்ற செல்வநிலை உதறி ஸ்திரப்பட்ட
நெஞ்சனென்கோ?

9 நெஞ்சில் குடியிருப்பாய் நீலகண்டா பஞ்சாக்ஷ
ரம் நீ என்கோ?
அஞ்சேலென்றே அபயம் அளித்திட வந்த
சிவானந்தமே

10 கம்பன் அருள் கவியும் காவேரியும் கும்பமுனி
புகழும்
(திரு)
எங்கும் பரவிடவே ஹிமாலயம் தங்கும்
சிவானந்தமே

11 தாயென்கோ? தந்தை என்கோ? சகோதர
ஸத்குரு நாதனென்கோ?
சேய் என்கோ? தெய்வ மென்கோ? கலியுக
தேவாதிதேவன் என்கோ?

12 அன்புப் பெருங்கடலோ? சிவானந்த ஆனந்
தப் பூம்பொழிலோ?
துன்பம் விலக்கிடவே துணை செய்ய தோன்
றிய ஸத்குருவோ?

13 சக்தி ஸ்வரூப மென்கோ? தயா நிதி உன்னை
(சாந்தஸ்வரூபமென்கோ?)
முக்தி தருவ தற்கே என்முன் நின்ற மூலபுரு
ஷன் என்கோ?

14 நன்மை தீமைகளையே ஒன்ருக்கி நசுக்கிப்
பிழிந்தெடுத்த
இன்பக் களஞ்சியமே சிவானந்த ஈடில்லா
மாணிக்கமே

15 பக்தி அற்ற சிறியேன் உன்திரு பாதங்களைப்
பிடித்தேன்
புத்தி அற்ற சிறியேன் எனக்கொரு போதனை
செய்குருவே
16 ஒன்றும் எனக்கில்லையே உலகினில் ஊனைச்
சுமப்பதன்றி
நீகண்டு சும்மாயிருந் தால் குருநாதா காத்திட
யார் புகல்வாய்?
17 ஸத்யம் அஹிம்சை என்றால் அதற்கொரு சக்
தியும் நீதரணும்
புத்தி வெளிச்சமென்றால் அதன் சிறுபூட்டை
திறவும் சிவா
18 காட்டை அழித்திடலாம் மனிதன் கரடி பிடித்
திடலாம் கரியும் (பிடித்திடலாம்)
கூட்டினுள் ஐந்தடக்கி சும்மா நிற்கக் கூடுமோ
சொல் சிவனே
19 மூவுலகும் வெறுத்தேன் பலப் பல மூர்த்தி
களும் வெறுத்தேன்
என் ஐயன் சிவானந்தமே உன் திரு அடிமலர்
தான் பிடித்தேன். —ஓம் என்று)

—0—

## பதிகம் பத்து

கற்றூணைக் கட்டி. கடலினுள் பாய்ச்சினும்
நற்றுணையாவது நமசிவாயவே—என்ற மெட்டு

1 சிவானந்த மென்னும் செந்தாமரை மலரில்

சுற்றி வரும் வண்டே நீ ஸோஹம் ப்ரம்மாஸ்மி
என்று
ஏகம் அதை நினைத்து எல்லாம் நீ தியாகித்து
சோகம் கடந்து தூங்கும் நாள் எந்நாளோ?

2 பஞ்சாக்ஷரப் பெயராம் பரம குருநாதன்
பார் புகழும் கங்கை பனிவரை தான் நின்று
தினம் (நம்மை)
காக்கின்ற நோக்கமுடன் கட்டி ஆனந்தகுடீர்
பார்க்கின்ற பார்வைதனில் பதினாலு உலகமுடன்
பாதத் தடிப் பொடிக் கீழ் பல புதுமை காணு
தம்மா!

3 இங்குற்ற துன்பங்கள் எத்தினையாயினும்
ஏன் இந்த புவியில் பிறந்தேன் என்ற போதி
லும்
மாண்புற்ற இமயத்தில் மங்கள ஜோதியைக்
காண்கின்ற கண்கள் களிப்புறுகின்றதே

4 ஊழ்வினை அநுபவம் ஒருகோடி யாயினும்
தாழ்மையடைந்து நாம் தளர்ந்து தான் மெலி
யினும்
காண்பவர் மெச்சும் கயிலைகிரிச் செல்வன்
கானத்தைக் கேழ்க்க நம் காதுகள் இனித்
ததே (மலர்ந்ததே)

5 அப்பைய தீக்ஷிதர் அருங்குல சிகாமணி
அற்புத ஹிமயத்தில் ஆனந்த வடிவுடன்
தத்துவம் போதிக்க தாஸர்கள் ஸேவிக்க
இது தன்னை மறந்து த தாகாரம் உற்றதே

6 ஜனன மரண ஸம்ஸாரத்தில் உழன்றாலும்
தாப த்ரயத்தில் சிக்குண்டு பயந்தாலும்
ஓம் என்னும் வாசகம் உண்டெனும் தைரியம்
தந்த சிவானந்த சுவாமி சந்நதியிலே
7 பலகோடி ஜனனங்கள் பிராரப்தம் இருந்தாலும்
பலவிதத்திலும் மனம்வாடி மெலிந்தாலும்
கலியுகக் கண்ணனும் காருண்ய குருசிவா
ஜீவர்க்கு அருந்துணை ஸ்ரீ சிவானந்தமே.
8 கல்லாலின் கீழ்நின்று சொல்லி ஓர் சின் முத்திரை
அன்று கல்லாலின் கீழ்நின்று காட்டி ஓர் சின் முத்திரை
முந்நாளில் குருவானாய் இன்னாளும் கருணையால்
பண்ணாலும் பாட்டாலும் பத்திரிகையினாலும்
எல்லார்க்கும் அருள் செய்தாய் ஹே சிவானந்தமே
9 கண்டேன் கைலாஸ் பத்ரி கேதாரி நாதங்கள்
நின் கண்களுக்குள் ஒளிர் சின்மய ஜோதியில்
எல்லையில்லாத ஓர் இன்ப ரகஸியம்
எங்கும் பரவும் ஐயா நின்பாத தூளியிலே
10 கனவினில் அவர் பாதம் கண்டாலும் போதுமே
கலங்கும் மனதிற்கொரு ஔஷதமாகுமே
கலியுக மதில் ஒளிர் கற்பகத் தருவான
நம்குரு சிவானந்தனை கும்பிடு நெஞ்சமே

11 பார்க்கடல் ஸயனித்த பரமாத்மனே இன்று
பத்தமடை உதித்து பார்வதி செல்வனுய்
சாரமில்லாத இந்த ஸம்ஸாரத்தைத்
தூவென்று
தள்ளியே ரகஸியம் தன்மயம் செய்கின்ருர்.

—0—

புள்ளிமானைத்தேடி வந்தவா என்ற மெட்டு

1 வாஸுதேவ மூர்த்தியல்லவோ குருநாதனே நீ
வைத்தியத்தில் நிபுணன் அல்லவோ?
2 கலியுகக் கண்ணன் அல்லவோ குருநாதனே நீ
காஷாயதாரி ஆனுயோ
3 கீதை சொன்ன வாயன் அல்லவோ குரு
நாதனே நீ
க்ருபை பொங்கும் வள்ளல் அல்லவோ
4 குழலூதும் செல்வனல்லவோ குருநாதனே நீ
குடியிருப்பாய் நெஞ்சில் அல்லவோ
5 ஆனந்த மூர்த்தியல்லவோ குருநாதனே நீ
ஆனந்த குடீர் வாசனல்லவோ
6 பாரதத்தின் செல்வமல்லவோ குருநாதனே நீ
பங்கஜக் கண்ணனல்லவோ
7 அரவிந்த பாதனல்லவோ குருநாதனே நீ
அக்ஞான நாசனல்லவோ
8 பத்தமடை பாக்கிய மல்லவோ குருநாதனே நீ
பார்வதியாள் புத்ரனல்லவோ
9 தக்ஷிணமூர்த்தி யல்லவோ குருநாதனே நீ
சுவாமி சிவானந்த னல்லவோ

10 அனைவர்க்கும் மித்ரனல்லவோ குருநாதனே நீ
அப்பையர் தோன்றனல்லவோ
11 சத்குருவும் நீயேயல்லவோ குருநாதனே நீ
சஞ்சலங்கள் தீர்ப்பாயல்லவோ
12 அஞ்சேல் என்று உரைப்பாயல்லவோ
குருநாதனே நீ
அனைவர்க்கும் அன்பனல்லவோ
13 ஸம்ஸார பய நாசனல்லவோ குருநாதனே நீ
ஸத்து சித்தானந் தனல்லவோ
14 கருணையுள்ள நெஞ்சனல்லவோ குருநாதனே நீ
கஷ்டசுகம் தீர்ப்பாயல்லவோ
15 பவரோக வைத்தியனல்லவோ குருநாதனே நீ
ப்ரபு சிவானந்த னல்லவோ?
16 ஸகல ரோகம் தீர்ப்பாயல்லவோ குருநாதனே நீ
சுவாமி சிவானந் தனல்லவோ
17 உடல் பிணிக்கும் வைத்தியனல்லவோ
குருநாதனே நீ
உத்தம குப்புஸ்வாமி யல்லவோ
18 மனப்பிணிக்கும் மருந்தல்லவோ குரு நாதனே
நீ
மன்மதனை எறித் தாயல்லவோ
19 ஏழை பங்காள னல்லவோ குருநாதனே நீ
எங்கள் குல தெய்வமல்லவோ
20 வாடாத பூ நீயல்லவோ குருநாதனே நீ
வைத்ய நாத ஸ்வாமி யல்லவோ
21 தேடாத செல்வமல்லவோ குருநாதனே நீ

ஜெகத்குரு நா தனல்லவோ
22 பரமானந்த நிலயமல்லவோ குருநாதனே நீ
பாமரர்க்கும் தெய்வ மல்லவோ
23 ஞான ஸ்வரூபனல்லவோ குருநாதனே நீ
மோனந்தனில் ஸார மல்லவோ
24 வேணு விநோ தனல்லவோ குருநாதனே நீ
வேல் பிடித்த கையனல்லவோ
25 ஜோதி ஸ்வரூபனல்லவோ குருநாதனே நீ
சுப்ரமண்ய ஸ்வாமி யல்லவோ
26 கோதண்டபாணி யல்லவோ குருநாதனே நீ
குறை தீர்க்கும் தெய்வமல்லவோ
27 தேவிபரா சக்தியல்லவோ குருநாதனே நீ
தண்டாயுத பாணி அல்லவோ
28 கங்கைக் கரை வாஸனல்லவோ குருநாதனே நீ
மங்கள சிவ ஜோதியல்லவோ
29 சுற்றி எங்கும் பார்த்தாயல்லவோ குருநாதனே நீ
சுதந்திரம் அளித்தாயல்லவோ
30 உலகமுற்றும் போற்றுந் தெய்வமே குரு நாதனே நீ
ஒரு உத்தம சிவானந்த ஐயனே
31 கலைமாது தந் தையனே குருநாதனே நீ
கயிலை கிரியில் தங்கு மெய்யனே
32 கரை சேர்க்க வேணும் எந்தனை குருநாதனே நீ
கண் திறந்து பாரும் சந்ததம்
33 மூடன் என்னைக் கார்க்கவேணுமே குரு நாதனே நீ

மோக்ஷ நிலை சேர்க்க வேணுமே.
34 ஓங்கார நா த கீதனே குருநாதனே நீ
உண்மை சொல்லி காரும் எந்தனே.
35 பக்தர் போற்றும் முக்தி ரத்னமே குரு
நாதனே நீ
பாரில் வந்த ஸுத்த தத்வமே
36 தத்வமஸி லக்ஷியவாக்யமே குருநாதனே நீ
நித்ய நிர்விகல்ப ச்லாக்யமே
37 ப்ருமைவாஹம் அம்ஸஸோகமே குருநாதனே
நீ
பேதமற்ற நாதாதீதமே
38 அகம் ப்ரும்மாஸ்மி என்ற வாக்கியமே குரு
நாதனே நீ
அபயம் தந்த யோக ராஜனே
39 ஓம் தத் ஸத் ஓம் தத் ஸத் ஓம் ஓம் சாந்தி
ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம்

—0—

சரண கமலாலயத்தை அரை நிமிஷநேரமட்டில்
என்ற மெட்டு

1 ஸத்குருவின் பாதமலரில்—(தினம்)
ஸஞ்சரி நீ நெஞ்சகமே அஞ்சவேண்டாம்,
நெஞ்சவேண்டாம் ஹரி ஓம் நீ (ஸத் குரு)
2 ஸ்வாமி சிவானந்தகுரு சரணக் கமலத்தை
நம்பு
பரம குருவான சிவா பவம் தீர்ப்பார் (நம்பவம்
தீர்ப்பார்)

3 அவலப் பிறவியை அடைந்து ஆணவத்தினுல்
மெலிந்து
அழுதழுது சாகும் நம்மை அவர் காப்பார்,
4 ஸர்வஜன ஸமரஸனுய் ஸகல வினைக்
கவுஷதனுய்
உலககுரு வான சிவா உன்னை காப்பார்.
5 தங்குபுகழ் இமயமதில் பொங்கும் கங்கை நதிக்
கரையில்
மங்கள ஆனந்தகுடீர் மலர்ப்பாதம்
6 கண்கள் அருள் பங்கஜமே (அவர்)
கைகள் தரும் கற்பகமாய் என்ஜயன்
7 சிவானந் த னுள்ளான் அஞ்சேல் நீ
மண்ணுலகைப் பொன்னுலகாய் மானிடரை
வானவராய்
மாற்றி இன்பமளிக்க வந்த மஹாதேவன்
8 உங்கள் துன்பம் நீக்கிடவே உயர்பதவி
சேர்த்திடவே
தங்கி உயிர் வாழும் சிவா தனைப்போற்று (ஸத்)

—0—

ராகம்: பைரவி தாளம்: ஆதி

வண்டொன்றும் கடம்பா என்ற மெட்டு

பல்லவி

சிந்தித்திரு நெஞ்சே ஸதா (சிந்தி)
அற்ப சிற்சுகம் கடந்து ஸச்சிதானந்தத்தை (சிந்)

அநுபல்லவி

ஸத்குருவின் பாதமலர் சார்ந்து பொருள்
ஆராய்ந்து ஸதா (சிந்)
ஸ்வப்பனம் போல் இப்பிரபஞ்சம் தோன்றுவதை
நீ தெரிந்து (சிந்)
கைப்பொருளும் மெய்புலனும் பைக்குதவி ஆகா
தென்று நீ (சிந்)

சரணம்.

1 மித்தையாம் இக்காயம் நித்யமாம் அத்வைதம்
ஸத்யமாம் மெய்ப்பொருள் தானெங்குமாய்
நிற்க
நான் யாரென புரிஞான விசாரணை ஆனல்
மறுபொருள்
காணுய் உலகிலே (சிந்)
2 தத்வமஸி யென்னும் சுத்த பரம்பிரும்மம்
ஸத்தும் அஸத்தன்று நித்ய நிராமயம்
இத்தரை அறவொழி சுத்த மதல்லாத பக்தி
உன் வழிதுணை பரிபூரணமேக (சிந்)
3 முக்குணம் கடந்து நிர்குணம் தன்னிலே
மூன்றுலகோர்களும் வேண்டும் அந்நிலையிலே
தாண்டும் ஜபதப கூண்டும் உடல் யோகம்
வேண்டாம் பவபயம் தீண்டாதது அதை (சிந்)

—0—

## இங்கிலீஷ் நோட்

1 த்யானித்துப்பார் அப்பா, த்யானித்துப் பார்
நீ (த்யானி)

சாந்தமனதுடனே த்யானித்துப்பார் பார்
2 வேண சுகம் கிடைக்கும் வறுமை அப்பால்
ஏனே தலை யெடுக்கும் இதோ உற்றுப்பார்
(த்யானி)

3 முக்தி குறும் வழியை முனைந்து செய்வாய்
அசுத்த மனதை பரிசோதியப்பா நீ (த்யானி)
4 ச்ரத்தை வைராக்ய கத்தியெடுப்பாய்
தேகப் பற்றுதல்களை வேரோடறுப்பாய்
(த்யானி)

5 நித்யானந்த புனலில் நீ குளிப்பாயப்பா
அத்யாத்ம யோகத்தில் ஸதா சுகிப்பாய் நீ
(த்யானி)

6 நித்ய அனித்ய மற்ற ஜக மிதைப்பார்
இது ஸத்யானந்தனுக்கொரு லீலையப்பா நீ
(த்யானி)

7 மானிட வாழ்வது சூளையைப்போல்
மண்ணாய் மடியுமதை உணர்ந்துற்றுப் பார் நீ
(த்யானி)

8 எண்ணும் மனமிரக்க மருந்திதோ பார்
இதைவிட ஸாதனம் ஏதுமில்லை பார் நீ
(த்யானி)

9 கண்ணால் ஹரி வடிவை கனிவுடன் பார் பார்
பெண்ணாசை பொன்னாசை விலக்கிடப் பார் நீ
(த்யானி)

10 கண்ணாடிபோல் உன்னுள் காணுமப்பா அது
(காணும்)

கலக்க இது ஒரு அறிய நெறி இது அப்பா
(த்யானி)

11 சிரக்கப் பத்மாஸனத்தி ருப்பாய் அப்பா
திசையை நோக்காதே நாசிதிரு கூடத்தைப்
பார் பார்

12 மனத்தினுள் அவனடி நினைத்துக் கொள்வாய்
நீ
மற்றவடிவங்கள் மூற்றும் முறையுடன்பார்

13 கற்றறிந்தும் மறப்பதை நிறுத்திக் கொள்வாய்
கருணைகுரு வருளை நினைத்துக்கொள்வாய் நீ

14 ஸாதனத் துறுதியாய் பிடித்துக் கொள்வாய் நீ
சதுர்வித பதவியை வெறுத்துக் கொள்வாய் நீ

15 தொடரும் வினைக் கொடிவேர் அறுத்துக்
கொள்வாய்
அந்த துரிய வெளியில் மனம் நிலைத்துக்
கொள்வாய்

16 அகண்ட ஸச்சிதானந்தத்தை யறிந்து கொள்
வாய்
அதுவே நீ ஆகிறாய் அதிசயம் பார் அந்த அதி
சயம் பார் நீ (த்யா)

—0—

ராகம்: காபி

ஜெய்ஹர நாதஜெய் என்ற மெட்டு

ஜெய் குரு நாத ஜெய் ஸ்வாமி சிவானந்த ஜெய்
,, ,, ,, ,, ஸத்குரு தேவா ஜெய் ஜெய்
,, ,, ,, ,, சிவக் ராம வாஸ ஜெய்

ஜெய் குரு நாத ஜெய் சிவானந்த ஜோதி ஜெய்
,, ,, ,, ,, ஸ்வாமி ஜெகன்னுதா ஜெய்
,, ,, ,, ,, ஸத்குரு நாத ஜெய்
,, ,, ,, ,, ஜெகத் குரு ஸ்வாமிஜெய்
,, ,, ,, ,, ஸ்வாமி விஸ்வானந்த ஜெய்
ஆனந்த குடீர் வாஸா ஜெய்ஜெய் ஆனந்த
ப்ரபோதா ஜெய்ஜெய்
ஜெய் சிவானந்தஜெய் ஸ்வாமி ஸத்குரு நாத ஜெய்
ஜெய் சிதானந்தா ஜெய் ஸ்ரீ குருநாதா ஜெய்ஜெய்
ஜெய் பரமானந்தா ஜெய் ஜெய் ஸ்வாமி நித்தியா
னந்தா ஜெய்
ஜெய் குரு நாத ஜெய் தக்ஷிணுமூர்த்தி ஜெய்
காசி விஸ்வனுதஜெய் கௌரி சிவ சங்கரா ஜெய்
ஜெய்
பன்னக பூஷணஜெய் ப்ரபு விஸ்வனுத ஜெய்
ஸ்ரீ ராம் ஸீதா நாதா ஜெய், ஜெய் ஹனுமந்த
ஜெய்
முரளீ மனோஹர் ஜெய் முகுந்த ஸ்ரீ க்ருஷ்ண
ஜெய்
மங்களரூபஜெய் மதன மோஹனஜெய்,
பாப ஸம்ஹாரஜெய் ப்ரபு ராதா க்ருஷ்ண ஜெய்
ஜெய் ஜகத்குரு ஜெய் ஸ்வாமி சிவானந்தா ஜெய்

—0—

ராகம்: சங்கராபரணம் தாளம்: திரிபுடை

ஆருருதியாகேசா யாகசாலேக்கு வந்தார் என்ற மெட்டு.

பல்லவி.

மனதை உருக்க (என்) ஒரு அவதாரம் ஆகி வந்த மாதவா
மதுஸூதனு, ஹரே க்ருஷ்ண (ஸத்குரு நாதா) (என்மன)

அநுபல்லவி.

தினத்தை பாழ் ஆக்காத செல்வ த்ரவியமே திரு மூர்த்தியர்க்கும்
எட்டா அறிவுக் களஞ்சியமே (மனதை)

சரணம்.

1 பவத்தை துலேக்க ஒரு துவஜத்தை கையில் பிடித்து
முக்குண த்தை கடக்க (இன்ப) நிலத்தில் தினம் வஸித்து
இத்தரைக்குள் செழிக்கும் பத்தமடைக்குள் நீ அவதரித்து
எனக்குள் தினம் வஸிக்கும் ஹே சிவானந் தமே (மனதை)

2 அன்பர் பணியும் தொண்டும் அறமும் வயித் தியமும்
குருவும் தெய்வமும் ஒன்ருய் கூடி உருவெடுத்து
தேடி பாமரருக்கும் ஓடி உபதேசிக்கும்

திருவே ஜெகத் குருவே ஸ்ரீ சிவானந்தமே
(என்மன)

3 (உன்) பாத மகிமை சொல்ல நான் முகனுலும் இல்லை
வேத வேதாந்த விக்ஞானப் பரஞ்சுடரே
பேதை எனக்கு தோன்றிப் பேசும் பிழை பொறுப்பாய்
ஸ்ரீ சிவா கனவில் வந்தே பொற்பாத மளிப்பாய் (மனதை)

—0—

ராகம்: முகாரி தாளம்: ஆதி

பாலிம்பவம்மா பரம கல்யாணி பவானி என்ற மெட்டு.

பல்லவி

தெரிசனம் தாரும் ஸ்வாமி.. ஸமரஸ
ஸன்மார்க்க (தெரி)

அநுபல்லவி

அபலைக்கு புகல் இடம் அங்குமில்லை
இங்கு மில்லை.. ஆறுதல் புகல ஒரு
அன்பர் இல்லை ஐயா எங்கும் (தெரி)

சரணம்.

1 ஸ்ரீ சிவா உன் தஞ்சம் - திவ்ய ஜீவனம்
செய் உந்தன்—ஐந்தெழுத்தாம்
பெயரில் அடங்கிய தென் தன் நெஞ்சம்

ஆனந்த குடீரில் தங்கும் அற்புதமே கண்
இரங்கும் (தெரி)

2 பக்தர் போற்றும் செல்வம் (நிஜ) பாரதத்தாய்
செல்வன்
உத்தம ஸத்குருவாய்—உலகை துறந்தான்
மெய்யன்
(எங்கள்) உள்ளம் கவர்ந்து எங்கும் பொங்கும்
சிவானந்தத்தின் (பொங்கும் சிவானந்தமே)
(தெரி)

—0—

ராகம்: கேதாரம் தாளம்: ஆதி

ஸகல கலாவாணியே சரணம் தாயே என்ற மெட்டு

பல்லவி

ஸ்வாமி சிவானந்தா (ஸ்ரீ) சரணம் உன் தாள்
தாரும் அபயம் வந்தாள்—இது தருணம் (ஸ்வா)

அநுபல்லவி

கலைமகள் மலைமகள் திருமகள் வடிவமோ (அது)
அலைகடல் துயின்ற கோபாலன் முருகன் தானோ
(ஸ்வா)

சரணம்.

1 மாய இருளில் சிக்கி மதி இழந்த மக்களை
(எங்களை)
தாய் எனக் காத்திட தயவுடன் தோன்றினாய்
ஞானப் பரஞ்சுடரே மோனமுதல் குருவே

ஏனோ தாமதம் இனி வானோர் புகழ் சிவமே (ஸ்வா)

2 அன்பு மில்லை அறிவும் ஆற்றலும் இல்லை மனத்
தெம்பு மில்லை சிவமே தேடி அறிய வெனில்
என் பிறப்போ அனந்தம் ஏதுமில்லையே சொந்தம்
ஜாதி மதம் கடந்த தவ சரணம் அடைந்தோம் (ஸ்வா)

—0—

ராகம்: கரஹரப்ரியா தாளம்: ஆதி

கண்கண்ட தெய்வம் நம் காந்தியே என்ற மெட்டு

பல்லவி

ஸ்வாமி சிவானந்த குருமகராஜ் ஸத்குரு மஹா ராஜ் (ஜெயஸ்)

அநுபல்லவி

கண்ணிமை நம்மை காப்பது போலே
உண்மையில் நம் துயர் தீர்த்திட வந்தார் (ஸ்வா)

சரணம்.

1 அன்பென்னும் சிவமே ஆனந் த மாகியே
ஆரணப் பொ ருளாம் ப்ரம்மத்தைத் தேடியே
காரணப் பொருளாம் கண்ணனைப் பாடியே (கூடியே)
கைவல்ய ஸுக வழி காட்டிய ஜோதியே(ஸ்வா)

2 இன்பமும் துன்பமும் இல்லையே உனக்கென் பார்

எல்லையில்லா ஆத்மஜோதி நீதான் என்பார்
தொல்லை படாமல் துரிதமாய் வாவா என்பார்
துணை இருப்பேன் அஞ்சவேண்டாம் குழந்தாய்
என்பார் (ஸ்வா)

—0—

ராகம்: சிம்மேந்திர மத்யமம் தாளம்: ஆதி

த்வமேவ மம சரணம் கிருஷ்ண என்ற மெட்டு

பல்லவி

எத்தனை நாள் சுமப்பேன் (இன்னும்) ஹீனமாம்
இந்த பொய்யுடலை ஐயா (எத்தனை)

அநுபல்லவி

ஸத்குரு தேவா-சரணம் நீ வா வா வா
அத்புதரூபா சிவானந்த குருநாதா (எத்தனை)

சரணம்.

1 பெற்ற தாய் என்றும் பெண்டு பிள்ளைகள்
என்றும்
கற்ற வித்தைகள் என்றும் கைப்பொருள் என
தென்றும் (எத்தனை)

2 புண்ணிய பாபமென்றும் போகஸாதங்கள்
என்றும்
மோக வலையில் சிக்கி மூர்க்கனாகி அடியேன்
(எத்தனை)

3 பக்தர்கள் போற்றும் பாவன மூர்த்தியே
நித்ய சிவானந்தா நிஜம் உரைப்பாய் அப்பா
(எத்தனை)

4 ஏங்கி கண்ணீர் விட்டு இகபரங்கள் விட்டு
அகமதில் அகப்பட்டு அழியும் உடலை பெற்று
(எத்தனை)

5 நீ ஒன்று சொல்லாய் நின் மனம் கல்லா
ஏன் என்பாரில்லா இன்பமே நில்லாய்
(எத்தனை)

6 ஞான அன்பில்லா நம்பினேன் சொல்லாய்
ஏகமே என் மனக் கோயில் கொண்டுள்ளாய்
(எத்தனை)

—0—

ராகம்: சங்கராபரணம் தாளம்: ஆதி

பல்லவி

ஏற்றுக் கொள்வாய் ஸத்குரு நாதா என்னை
(ஏழை என்னை)

அநுபல்லவி

அன்பு கொண்டுன்னை நம்பினேன் சிவா
ஆனந்த போதா அதீதா என்மேல் வாதா (ஏழை)
கூற்று வந்தென்னை கொடுமை செய்யும் முன்
கூறும் உபதேசம் நேரில் வாரும் சிவா (ஏழை)

சரணம்.

1 போதமில்லை கேள் வேதநாயகா ஸாது ஸத்
ஜன சங்கமில்லையே
பேதை என் மனத் துன்ப எல்லையே இல்லை
இல்லையே
நீயும் இரங்க வில்லையே (ஏழை)

சின்னஞ் சிறு கிளியே கண்ணம்மா என்ற மெட்டு

1 என்னை அடிமை கொள்வாய் குருநாதா ஏழைக்
கிரங்கும் சிவா
கோழை மதி எளியேன் உலகினில் கோடி
விதம் பயந்தேன் (நான்)

2 பல கோடி துயரடைந்தேன் (வந்து என்னை
யடிமை கொள்)
எங்கும் நிறை பொருளே சிவானந்தம் தங்கும்
ஆனந்த குடீர்
மங்களம் உன்னடிக்கே (ஜெய) எனக்கொரு
மந்திரம் சொல்லும் சிவா நீ (என்னை)

3 தேடி மிக மெலிந்தேன் குருநாதா ஜென்ம
பவக்கடலில் (நான்)
கூடி உன்னையடைந்தேன் குருநாதா கும்பிட்
டுக் கை தொழுதேன்
காடுமலை திரிந்தேன் சிவானந்தா காயா புரி
யின் உள்ளே
வேடிக்கை போதும் ஐயா (இந்த) அறிவிப்பாய்
வேணுகோபாலனிடம் (என்னை)

4 கூடி என்னை பிரிந்தான் அதன் துயர் கூறத்
திறமில்லையே
காரிருள் மாயையிலே கலியிலே கை காட்டி
நின்ற சிவா நீ (என்னை)

5 ஓம் ஆதிமூலமுதற் பொருளே சிவானந்த மும்
மூர்த்தியானவரே
கைமா றுனக்குளதோ (புகல்ஒரு) கைவல்ய

ஸதானந்த மெய்ச் சுடரே
விண்ணில் ஒளிர் சுடரே சிவானந்த வேதாந்த
நாயகரே
நா தாந் தத்தின் முடிவே நடமாடும்
நா காபரண சிவா
உன்னை மறக்கறியேன் அன்பர்க்கருள் கண்
ணைத் திறந்த சிவா
நீ என்னை மறந்திடிலோ புகலிடம் எங்குமில்லை
சிவமே—(என்னை அடிமை கொள்வாய்)

—0—

ராகம்: பிலஹரி                                        தாளம்: ஆதி

பூஜிதமாதவனே பூபாலா என்ற மெட்டு

பல்லவி

ஸ்ரீலஸ்ரீ சிவானந்தா ஸ்ரீ கோவிந்தா—ஸ்ரீ முகுந்
தா ஹே (ஸ்ரீ)

அநுபல்லவி

மூவுலகும் புகழ் முனிகிரேதியில் ஒளிர் ஞானப்
பரஞ்சுடரே சிவானந்தா (ஸ்ரீ)

சரணம்.

1 புண்ணிய மூர்த்தியே பொங்கும் மெய்
கீர்த்தியே
தங்கும் க்ருபா மூர்த்தியே என் சஞ்சலம்
தீர்ப்பாயே
அஞ்சேல் என்றே அபயம் அளிக்க அவதரித்த
சிவானந்த

ஆனந்தமூர்த்தியே அபயம் கொடுப்பாயே (ஸ்ரீ)

2 பக்தரை காத்திட பத்தமடை ஜனித்து
பக்குவ டாக்டராய் பதவிகளும் வஹித்து
உற்று நோக்கினுய் சற்று உலக துன்பம்
குறித்து
உதறித் தள்ளினுய் மனைமக்கள் தனம்
வெறுத்து (ஸ்ரீ)

3 ஓம் என்னும் (மந்திரம்) ஒன்றென்னும்
தந்திரம்
ஓடி வரும் கங்கை கரை தன்னில் யந்திரம்—
தேடி.
வந்த வருக்கு திவ்ய ஸ்வதந்திரம் தேச தேசங்
கள்
புகழ் திருமுக மண்டலம் (ஸ்ரீ)

—0—

## ராகமாலிகை

சொல்லுபாப்பா, சொல்லுபாப்பா, என்ற மெட்டு

ஸ்ரீ ஸத்குரு பாதுகா ப்ரபாவம்

ஆடுபாப்பா விளையாடு பாப்பா இந்த அகில
மனித்ய மென்று ஆடுபாப்பா,
நீ ஆடுபாப்பா விளையாடு பாப்பா இந்த அகில
ப்ரமை விலக்கி ஆடுபாப்பா,
,, ,, ,, நீ ஆனந்தம் சிவானந்தம்
என்ருடு பாப்பா
,, ,, ,, ஆனந்தம் பரமானந்தம் என்
ருடு பாப்பா

ஸ்ரீ குருபாதுகையை பாப்பா நிஜ தெய்வமென்று
நம்பு நம்பு பாப்பா
ஸத்குரு ,, ,, ,, நீ தஞ்சமென்று
நம்பி இரு பாப்பா
கொஞ்சமும் பயமில்லே கேள் பாப்பா அதைகோரி
அடைந்தவர்க்கு பாப்பா
ஸோஹம் சிவோஹம் என்று (பாப்பா) நீ சொல்லி
விளையாடடி பாப்பா
ஏகம் அநேக மென்று பாப்பா நீ என்றும் சுகித்
திரடி பாப்பா
ஸத்குரு பாதுகையை பாப்பா நீ ஸந்ததம் சிந்தை
செய்து பாப்பா
வந்தனம் செய்து தினம் பாப்பா அதை உந்தன்
மனத்தில் கொள்ளு, பாப்பா
சிந்தித் திருக்க வேண்டும் பாப்பா நீ சிவானந்த
தாமரையை, பாப்பா
மெய் குரு நாதனடி பாப்பா மிக்க மேன்மை
யளிக்குமடி (பா)
ஸ்வாமி குருநாதனடி பாப்பா ஜென்ம ஸாபல்யம்
செய்யுமடி பாப்பா,
இன்ப துன்பங்கள் என்ற பாப்பா அந்த
இரண்டை விலக்குமடி பாப்பா
ஸ்ரீ குருநாதரடி பாப்பா அது தேடாத செல்வமடி
பாப்பா
ஓம்குரு நாதனடி பாப்பா உன்னுள் பஜிக்க
வேணும் பாப்பா

Q232 SIV
J6



சிவானந்தத் திருவடி பாப்பா உன்ஜென்ம வினை
தீர்க்குமடி பாப்பா
கர்ம பவமழிக்கும் பாப்பா அந்த கயிலை ரிஷியின்
பாதம் பாப்பா
தூங்கி விழித்தவுடன் பாப்பா அதைத் தொழுது
வணங்கிக் கொள்ளு பாப்பா
நிலையில்லா காயமடி (பா) மிக்க நீச வஸ்துக்கள்
உள்ளே (பா)
மூச்சுப்புகுந்து வந்தால் (பா) இதற்காச்சு காரியம்
என்பார் பாப்பா,
ஏச்சுப் பேச்சுக்கள் இல்லை (பா) நீ ஏக பாவனை
செய்தால் (பா)
ஜோதி சிவானந்தமடி (பா) உன்னைத் தூக்கிக்
கரை சேர்க்குமடி பாப்பா
ஆவின் குளப்படிபோல் பாப்பா அது தாண்டச்
செய்யுமடி பாப்பா
மூவர் அறியாத பாப்பா முக்தி நிலை சேர்க்குமடி
பாப்பா
ஜோதி சிவானந்த பாதம் (பா) அது சுத்த
சிவமடியோ (பா)
சந்திர சூரியர் இல்லை (பா) அங்குதானே ப்ரகா
சிக்குமது பாப்பா
ஸ்ரீ குரு பாதுகையை பாப்பா சிரஸில் வஹிக்க
வேணும் (பா)
விரைவில் கடந்துசெல்லு (பா) இந்த வீண் பவ
ஸாகரத்தை (பா)

பொய்யை நீ நினைக்காதே (பா) இனி போனத்தை
சொல்லாதே பாப்பா
ஆன துனக்கென்ன இதில் (பா) மிக்க அலக்ஷிய
மாய் இரடி பாப்பா,
எல்லாம் ஒலியடியோ பாப்பா நீ ஏமாந்து
போகாதே பாப்பா
ஓங்காரத்துள் ஒளியில் பாப்பா நீ நீங்காமல் விளை
யாடு பாப்பா
ஓங்காரத்துள் வெளியில் பாப்பா நீ நீங்காப் பொரு
ளடியோ (பா)
ஆங்காரம் விட்டு விட்டால் பாப்பா அன்பே சிவ
மடியோ பாப்பா
ஏங்காமல் முன்னோக்கு பாப்பா பாங்காய்ஸுகம்
பெறுவாய் பாப்பா
நீங்காத் திருவடியை பாப்பா உன் நெஞ்சில் பதித்
திடப் பார் பாப்பா
ஆடுபாப்பா விளையாடு பாப்பா ஆனந்தம் நித்யா
னந்தமென் றுடு பாப்பா

—0—

(சிவானந்த பக்தியாஷ்டகம்)

1 தேவதேவ பாஹி பாஹி ஸ்ரீகுரோ நமோ
நமோ
ஸ்ரீலஸ்ரீ சிவானந்த ஜெகத்குரோ நமோ நமோ
காலகாலன் போற்றும் ஞான காருண்ய நமோ
நமோ காருண்யாலயா நமோ நமோ
கௌரீ சங்கர ஸ்வரூப கலியுக ஸ்கந்தா நமோ

2 பந்த பாச நாச ஸ்ரீ விச்வேசஹே நமோ நமோ
இந்து சேகராதி ஸ்துதி ஹே விபோ நமோ நமோ
வந்து காக்க வேணுமென்னை வாஸுதேவ
ஹே நமோ
(என்) தந்தையாகி தாயுமான ஸத்குரோ சிவா
நமோ

3 ஊமை பேசலாகுமோ சொல் உன்னையன்றி
யான் வேறே
தன்னை மறந்தின்னுள் தேடி ஸஞ்சலத்துழன்
றனன்
அஞ்சேல் என்று ஓடிவந்து அபயம் ஈந்த உன்
பாதம்
ஆடிப்பாடி சூடி நின்று (உலக) அனைத்தையும்
மறந் தனன்

4 நினைத்த நெஞ்சில் நின்றுலாவும் நீலமேகம்
நீயல்லோ
கோலமயிலாடி வரும் குமாரகுரு நீயல்லோ குமர
னும் நீ தான் அல்லோ
அமரர் போற்றும் ஆதிமூல ஆனந்த ஸ்வரூபமே
(சிவானந்த ஸ்வரூபமே)
பேதம் நீக்கி என்னை யுன்னில் பிரம்மமே, (நீ)
ப்ரம்மமே—

5 யான் விரும்ப ஒன்றுமில்லை நான் என்றேன்
றிங்கில்லையே
காமன் இல்லை காயமில்லை மாயை என்றும்
இல்லையே

தாயையன்றி பிள்ளை இல்லை தத்வமஸி லக்ஷியமே
நீயுமில்லை நானுமில்லை நிலவும் ஞான ஒளியிலே
(தீபமே)

6 அலையும் நெஞ்சை அடக்கியாள யாருமில்லையே
சிவா
உன் தடக்கையால் என் சென்னி தொட்டு தாபம்
தீர் ஸதா சிவா
கொடுக்கவந்த காயமிது கொஞ்சமில்லை முன்வினை
தடுக்கவேணும் (நீ) ஓடிவந்து ஸத்குரு சிவா சிவா

7 எங்கு சென்ற போதிலும் நீ அங்கு வந்தென்
னுள்ளமே
கொள்ளை கொண்ட மாயமென்ன கூறுவாய்
பேரின்பமே
நீ நேரில் வந்த போதிலெந்தன் நெஞ்சடைத்து
மோனமே
த்யான மான யோகமே ஸதா நமச்சிவாயமே

8 வேதமே அதீதமே மெய்போ தமே சிவோம்
நமோ
நாதமே எனக்குள் நித்யம் நடனமாடும் பாதமே.
படனமில்லை ச்ரவணமில்லை பதி தனை எந்தனை
விரட்டி நீ யடிக்கவில்லை விதிவிலக்கி நிற்குதே
(நின்றதே)

9 ஓடிவந்து உன்பாதம் நாடி ஓய்ந்து நிற்கும்
பேதையை
ஆதரிக்க வேண்டும் வேண்டும் அன்பே சிவானந்
தமே

தேவ தேவ பாஹி பாஹி ஸ்ரீ குரோ நமோ நமோ
சீலஸ்ரீ சிவானந்த ஜெக த்குரோ நமோ நமோ

—0—

ஸ்ரீலஸ்ரீ சிவானந்த ஸத்குரு மகராஜு நீ
பஞ்சரத்ன பத்யமுலு

1 ஸத்குரு தேவுடனு ஸ்வாமி ஸ்ரீ சிவானந்த
ஸரஸ்வதி யுன்னுரு ஸாதுவுலகு
பேதமுன ஜன்மபவ ஸாகரமுலோ முனிகி பிராந்
திதோ துக்கிஞ்சி தின தினமுனு
ஆத்மஸூத்தி யுலோக ஆசார ஹீனுலை அக்ஞான
அடவிலோ திரிகி திரிகி
அந்தகுடைன மனக்கானந்த நிலயமனு ஆச்ரமமு
நிர்மாணம் சேசினுரு
அந்தமுன கங்கையுனு ஆனந்த சிவா பதமு
அர்ச்சிம்பராண்டிஓ அகிலஜனுலாரா (ச)

2 பார்வதி தனயுடை பத்தமடை ஜென் மிஞ்சி,
பதித பாவனுடைன குப்புஸ்வாமி
உத் தமுடு தர்மபூஷண மனுடாக்டரனி உலகசாத
கமைன பனுலுசேசி
நித்ய சாஸ்வதமுகா பக்தி தோ வைத்யமுனு நிரந்
தரமுகா சேய நிச்சயிஞ்சி
அத்வைத நிதியனு சிவானந்த ஜோதியனி ஆனந்த
குடீரமுன நெல கொன்ன தேவா
அபயமனி நினுபா தபத்மமுனு நம்மிதினி ஆதரிம்
புமு (மம்மு) சிவானந்த ஸத்குருநாதா

3 பா ரத ஜோதியனு பக் தரக்ஷகுடனு பரமார்த்த

தத்வமனு பரசிவமனு
கர தலா மலகமனு கைவல்ய போதுடனு கைலாஸ
ரிஷியனு கலியுகமுலோ
கருணதோ அவதாரம் சேசின ஸ்ரீ க்ருஷ்ணுடனு
கங்கா தருடனு நின்னு ஜூசி
மரி திரிகி புட்டகா மஹா வாக்ய உபதேச மந்த்ர
உபசாந்தமனு மந்துலு கொனி
ஸந்ததமுனு நீபாதபக்திதோ த்யானிஞ்சி
சாயுஜ்ய முனு ஜெந்தராண்டி ஒஸஜ்ஜனுலாரா
4 சிவானந்தமனு திவ்ய ஸாகர கிருபாளுடை
ஜகமுலோ திவ்ய ஜீவனமு நேர்ச்சி
அந்தரிகி மித்ருடை அகிலபவ வைத்யுடை ஹரி
பக்தி நிலயுடை அவதரிஞ்சி
கதியனுவாரினீ கஷ்டமுனு விப்பிஞ்சி கைலாஸ
கிரியந்து ஸந்ததமுனு
அஷ்டாங்க யோகமுனு ஹரிபக்தி ஞான வைராக்
கிய ஸாதனதின முனப்யஸிஞ்சி
சித்தன சிதானந்த சின்மாத்ரரூபுடை நீனுலகு
ஆதார மைன தேவதேவா
5 நினுபாத பத்மமுனு நம்மிதினி தேவுடா, நிஜ
பக்திலேனி நன்னேலு கோரா
கெஜமுனகு ரக்ஷகுடு கமலமுனனுன்ன ஸ்ரீ கல்
யாண சைலபுரீ வாஸுடன்ன
கலியுக முலோ புட்டி காமாதி ஷட்வர்க் காமினீ
காஞ்சனமுலன்னி தீர்ச்சி
கருணதோ காபாடி ரக்ஷிம் பவனு தினமு
கங்கணமுகட்டு கொனி அவதரிஞ்சி

மந்தரமுதோ மஹா மந்தர கீர்த்தன ஜபமு மான
வுலகந்தரீகி மௌனரக்ஷா
ஓங்காரத் தொனியனு உத்தம மார்கமுனு உபதே
சம் சேசின ஸ்ரீ உத்தம சிவா—ஸத்குருசிவா

—0—

ராகம்: மத்யமாவதி தாளம்: ரூபகம்

கட்ட கயிர் இல்லையே கிருஷ்ண அடிக்க மனம்
வல்லையே என்ற—மெட்டு

1 பாஹி பாஹி ஜெகத்குரோ மாம் பாஹி பாஹி
சிவகுரோ (மாம் பாஹி பாஹி தயாசிந்தோ)
சந்தி ரசேகரசாரங்கஸ்துதி
பந்தமோசன பாஹிமாம் (பவபந்தமோசன)

2 கண்க ளுக்கொரு அற்புதம் அது
கா தினித்திடும் தத்பதம் (நால்)
வே தவேதியர் போற்றிடும் பாதம்
வெங்குவையர் அருள் ஸ—தம் (பாஹி)

3 ஸ்ரீபார்வதிக்கருள் பாலகம் இந்த
பார தத்திருநேத்திரம்—அதை
கா தலித்தவர் கேட்ட தனைத்தும்
கைக் களித்திடும் கற்பகம் (பாஹி)

4 பொங்கும் கங்கைக் கரைக்கருகினில்
தங்கும் மங்கள நாயகம் அது
எங்கிலும் புகழ் எங்கள் ஸத்குரு
ஹேசிவானந்த பாஹிமாம் (பாஹி)

5 ஸ்ரீசிவானந்த பாஹிமாம்—திருமூர்த்தி
ஸ்வரூப பாஹிமாம்

தீனபாலன பாஹிமாம் ஹே தீனபந்தோ
பாஹிமாம (பாஹி)

6 (என்) உள்ளக் கோவில் நீ பாஹிமாம் அதில்
ஒளிரும் பொருள் நீ (ரக்ஷமாம்) மாம்பாஹிமாம்
எதிரில்லானந்தம் பாஹிமாம்
ஹே இன்பமே சிவா பாஹிமாம் (பாஹி)

—0—

ராகம்: ஹரிகாம்போதி தாளம்: கண்ட ஜாதி
சிலம்பு வாங்கலையோ—என்ற மெட்டு

1 ஆனந்தம் என்றவுடன் (ஸ்ரீ சிவானந்தம்
என்றவுடன்)
மனதிற்கு ஆறுதல் தோன்றுதடி
மோனம் தன்னில் முதல்வன் முன்னே நின்றால்
மோக்ஷம் கிடைக்குதடி (ஆன)

2 உள்ளம் குளிருதடி மனது ஓடி ஒளியுதடி
அள்ளக்குறையாத சிவானந்த
அற்புத தாளடிக்கீழ் (ஆன)

3 ஞானப்பெருங்கடலாம் சிவாவின் தாள்
நாமும் நினைத்து விட்டால்
காமம் துலையுதடி கைவல்ய கதவும் திறக்குதடி.
(ஆன)

4 எங்கள் மனக்கோயில் குடிகொண்ட
இன்பக்குருநாதன் (சிவானந்த குருநாதன்)
கங்கைக் கரை அமர்ந்தான் அவன்
புகழ் கேட்டவுடன் உள்ளம் (ஆன)

5 பொங்கி பொழியுதடி ப்ரும்மானந்தம் பூரணம்
ஆகுதடி

நேரினில் வந்துவிட்டால் சிவானந்த
நித்யானந்தக் குடீரில் (ஆன)

6 தங்க நினைத்ததுமே (அங்கே) உபசாந்தம்
தானே பிறக்குதடி— மங்களமூர்த்தியடி
சிவானந்தம் மனதை மயக்குதடி (ஆன)

7 ஏற்றுக்கொள்ளுவரோ (ஏழை என்னை)
(அவர்) ஏமாற்றி விடுவாரோ (அறியேன்)
காத்திருந்தேன் பல கால் கிளியே
கண்டு வந்து புகல்வாய் (ஆன)

8 ஸோஹம் சிவோஹம் என்று (ஹம்ஸ) சதா
சொல்லி ஜபிக்கும் ஹம்ஸம் (அது)
ஏகமனேகம்தாய் கிளியே எங்கும்
நிறைந் திருக்கும் (ஆன)

—0—

ராகம்: காம்போதி தாளம்: ஆதி

வண்டாடும் சோலைதனிலே—என்ற மெட்டு

பல்லவி

கண்டேன் கைலாஸ கிரியில்
கருணை பொங்கிட கங்கைக் கரையில் (கண்)

அநுபல்லவி

தொண்டர் போற்றும் ஜோதிர் வடிவை
துரிய ஸ்ரீ சிவானந்த குருவை (கண்)

சரணம்.

1 அள்ளிக்கொடுக்கும் அபயகரமும்
அருள் பொழிந்திடும் திருநயனமும்

துள்ளி ஓடும் மனதை நிருத்தி
துணை புரிந்திடும் சிவகுருபாதம் (கண்)

2 ஆனந்த குடீர் நாதன் ஸத்குரு
அடிமலர் காண வேணும் கண்கோடி
அற்புத சிவானந்தமூர்த்தி (அதி)
அங்கும் இங்கும் எங்கும் நிறைய (கண்)

3 அன்னசாலை வைத்யசாலை
ஐக்யஞான பாடசாலை
பின்னே தோன்றும் (கண்) காக்ஷிசாலை
பிரம்மஞான பூஞ்சோலை (கண்)

4 மோஹன முரளி மந்திரமும்
முனிவர் கூடி பணிசெய்திரமும்
ராமநாம ஜப கீர்த்தனமும் (ஸ்ரீ....ராம)
நமதுஸத்குருநாத சிவமும் (கண்)

—0—

## ஸத்குரு நாமாவளி

ஸத்குருநாதா (தவசரணம்) ஸ்வாமி சிவானந்த தவசரணம்

ஸ்ரீ குருநாதா (த) ஸ்ரீ சிவானந்தா தவசரணம்
பக்த வத்ஸலா (த) பார்வதி புத்ரா தவசரணம்
சிஷ்யோத்தாரா (த) ஸ்ரீஜெகத்குரோ தவ சரணம்
அத்வைதபோதா (த) ஆனந்த மூர்த்தே தவ சரணம்
அனாத ரக்ஷகா (த) ஆதிமூலா தவசரணம்

நித்யானந்தா (த) நிர்மலரூபா தவசரணம்
சித் ஸ்வரூபா (த) சின்மயபோதா தவசரணம்
கலிமலநாசா (த) கருணா மூர்த்தே தவசரணம்
பேத ரஹிதா (த) ப்ரும்மானந்தா தவசரணம்
ரிஷீகேசவாஸா (த) பவபயநாசா தவசரணம்
ஸத்ஜன வந்தியா (த) ஸ்வாமிநாதா தவசரணம்
மும்மூர்த்தி ரூபா (த) முனிஜெனவந்தியா தவ சரணம்
ஸத்குருநாதா (த) ஸ்வாமி சிவானந்தா தவ சரணம்

—0—

## மங்கல ஸ்லோகம்

1 சித் கனானந்த ரூபாயா தேஜோன்மய மூர்த்தியே
சி தானந்த ஸஹிதாயா ஸ்ரீசிவானந்தாய மங்களம்

2 கங்கா தீர நிவாஸாயா கருணமய மூர்த்தியே
வருணலய கம்பீராய ஸ்ரீவாஸ தேவாய மங்களம்

3 பரப்ரும்ம ஸ்வரூபாயா பாபவர்ஜித மூர்த்தியே
பதி தபாவன பாதாய பரமஹம்ஸாய மங்களம்

4 அக்ஞான த் வாந்த தீபாயா, ஆனந் தா தீத மங்களம்
ஆனந்த குடீர் தேவாயா அதி அத்புதாய மங்களம்

5 சிவானந்த சிவரூபாயா ஸ்ரீசிவாய நமோஸ்
துதே
சிஷ்ய ஹ்ருத் பத்ம வாஸாய ஸ்ரீஜெகத்
குருவே நமோ நம:

6 வேத வேதாந்த போ தாயா விச்வமங்கள
காரினே
விச்வேச்வ ரஸ்வரூபாயா, வேணுகோபால
மூர்த்தியே மங்களம்

—0—

ராகம்: பைரவி தாளம்: சாபு

முகத்தைக் காட்டியே தேஹம் முழுவதையும்
காட்டாமல் என்ற மெட்டு

பல்லவி

திரும்பிப் பார் குருநாதா சிறியேன் என்மேல்
வாதா
(உன்) திருவடி தரலாகாதா (திரு)

அநுபல்லவி

அகிலமோர் விளையாட்டு அலைந்து திரிந்தேன்
கேட்டு
நீ ஆனந்த மாயிருந்தால் (சிவா) ஆதரித்தருள்
காட்டு (திரு)

சரணம்.

1 (நின்) பொன்னடி தேடி முப்போதும்
கண்ணீர் விட்டு
கண்ணிழந்தவன் போல கதறித் திரிந்து
வந்தேன்

பதறி வழியில் நின்ற பரிபூரணப் பொருளே
பார்த்தும் இரங்காவிடில் சேர்த்தணைப்பார்
வேறுண்டோ (திரு)

2 பாயும் தண்ணீர் இல்லாமல் காயும் பயிரைப்
போல
தாயை பிறிந் தலறும் தன் இளங்கன்றைப்
போல
(மன) நோயால் வருந்தி மிக நொந்தேன்
நளின நீர் போல
நீ இப்போதே இரங்கி அருள் ஸுக மாறி
போல (திரு)

—0—

தேவாதி தேவர் புகழ் பாலனடி ஏலேலோ என்ற
மெட்டு.

1 அன்பும் சிவமும் ஒன்ருய் ஆமடியோ தோழி
(அதை) ஆனந்த குடீரில் சென்றுபாரடி நீ
தோழி

2 அவதாரம் செய்த தடி ஆமடியோ தோழி
ஆதிபரா சக்தியடி கேளடி நீ தோழி

3 வந்து நம்மைக் கார்த்த தடி ஆமடியோ தோழி
வாஸுதேவ மூர்த்தியடி (கேளடி நீ தோழி)

4 நம் கூடப்பிறந்தது டி ஆம் அடியோ தோழி
கூடஸ்த் த ப்ரம்மமடி கேளடி நீ தோழி

5 ஷண்முகனே தான் அடியோ ஆம் அடியோ
தோழி
சரவணையில் வந்தவனே தான் அடியோ
தோழி

6 கண்ணன் என்னும் உண்மை தெய்வம் ஆம்
அடியோ தோழி
இந்த கலியுகத்தில் வந்த தடி கேளடி நீ தோழி
7 தாஸர் உள்ள கோவிலிலே ஆம் அடியோ
தோழி
தங்கும் சிவானந்தமடி கேள் அடி நீ தோழி
8 பக்த பரா தீனன் அடி ஆமடியோ தோழி
அது பத்தமடை தோன்றியதைக் கேளடி நீ
தோழி
9 பொங்கும் ப்ரம்மானந் தமடி ஆம் அடியோ
தோழி
பூவுலகக் கண்ணனடி கேளடி நீ தோழி
10 ஸ்வாமி சிவானந் தகுரு ஆம் அடியோ தோழி
(அது) தத்வமஸி லக்ஷியமடி. கேளடி நீ தோழி
11 எங்கும் நிறைந்த தடி ஆம் அடியோ தோழி
எங்கள் குல தெய்வமடி கேளடி நீ தோழி
12 கண்டவர்கள் நெஞ்சை கொள்ளை கொள்ளுதடி
தோழி
கைலை கிரி பொங்குதடி கேளடி நீ தோழி
13 கண்டம் கறுத்த சிவம் ஆம் அடியோ தோழி
கவிதைமழை பெய்யுதடி கேளடி நீ தோழி
14 அன்பு கிருபை ஆனந்தம் ஆமடியோ தோழி
அகண்ட பரி பூரணமே தானடியோ தோழி
15 உலகை மனம் மறக்குதடி ஆம் அடியோ
தோழி
உத்தமாம் சக்திசிவம் கேளடி நீ தோழி

16 நித்ய ஸுக வாருதியில் ஆமடியோ தோழி
நிலைத்த சிவானந்த வள்ளல் பாரடி நீ தோழி
17 ஓடி ஓடி ஓடி விளையாடலாம் வா தோழி
ஒன்றும் நமக்கில்லை என்று உலகினில் நீ
தோழி
18 ஸோஹம் சிவோஹம் என்று சொல்லடியோ
தோழி
ஜோதி சிவானந்த ஒளி வீசுதடி தோழி

—0—

கிளிக்கண்ணி மெட்டு

1. மாண்டு

வாழ்க சிவானந்த குரு, வள்ளலடி மலறை
வணங்கி எழுந்த உடன்—கிளியே
வஸ்துமயம் ஆனேனடி (கி) (வாழ்க)

2. பிலஹரி

கனிந்த சிவானந்த கனியெனும் ஸத்குருவை
கை கூப்பி நின்ற உடன் கிளியே
காயம் மறைந்த தடி—(கி) (வாழ்க;

3. ஸகாந

ஞான சுடரொளியாம் நற்குரு பாதுகையை
நான் பற்றிக் கொண்டவுடன் கிளியே
ஞான மிழுந்தேனடி—(கி) (வாழ்க)

4. அடாணு

ஜோதி சிவானந்த குரு துரிய சுடரொளியை

ஸோஸ்திரம் செய்தவுடன்—கிளியே
துன்பம் ஒழிந்த தடி (மன) துன்பம் துலைந்த தடி

5. வஸந்தா

ஓம் என்னும் மந்திரம் உபதேசமான உடன்
ஒன்றும் அறியாமலே - கிளியே
உயரப் பறந்தேனடி (கி) (வாழ்க)

6. எதுகுல காம்போதி

நன்று தீதுகள் பற்றி நாம் இனி
சுற்றிவர ஞாய மில்லையடியோ—கிளியே
மாயை விலக்கி விட்டார்—(கி) (வாழ்க)

7. பூபாளம்

போதுமென மூவுலகும் பொய்யாய்
மறைந்த உடன் போதம் பிறந்த தடி—கிளியே
பூரண மானேனடி (கி) பரிபூரணமானேனடி
(வாழ்க)

—0 –

ராகம்: கல்யாணி தாளம்: ஆதி

க்ஷேமம் குரு கோபால சந்ததம்மம என்ற மெட்டு

பல்லவி

பஜரே ஸத்குரு நாதம் மம மானஸ
பஜரே ஸத்குண போதம்....ஸந்ததம் மானஸ
(பஜரே)

அநுபல்லவி

பந் தவிச் சேதன பாவன பாதம் (குருபாதம்)

பா ர்வதி தேவி ஸுதம் ம்ருது பாஷிம் (பஜரே)

சரணம்.

1 பாபவி தூரம் பரமா த்ம போ தம் நிஜவர
தா தம் நீலமேக சரீரம்
கங்கா தீர நிவாஸம் கருணவிலாஸம் மங்கள
கீத மஹா மந்த்ர கோஷம் (பஜரே)
2 நித்ய நிராகார நிர்மலரூபம் ஸுத்த சிவானந்த
ஜோதிப் ப்ரபாவம்
பக்த பராதீன பாலனசீலம் நித்யானந்த குடீர
நிலஸிததீரம்...(பஜரே)

—0—

ராகம்: சங்கராபரணம் தாளம்: த்ருபுடை

பல்லவி

கைகாட்டி அழைக்கின்றார்...(இதோ)
கருணை நிதியாம் சிவா (கை)

அநுபல்லவி

பொய்காட்டி மெய்காட்டி புண்ணிய பாவங்கள்
காட்டி
போத அமுதம் ஊட்டி பூர்ணமாய் க்ருபை செய்ய
(கை)

சரணம்.

1 எங்கும் நிறைந் ததே இலங்கும் அதிசயத்தை
தன் கை சின் முத்திரையால் ஸனகாதிக்
குரைத் தார் போல்

மனமாகி எதிரிகள் மத்தியில் சிக்குண்டு
கதியின்றி புலம்பிடும் இக்கலியுக மாந்தரை
(கை)

— 0 —

(ஆதி சிதம்பரத்தே கிளியே என்ற மெட்டு)

1 ஸோஹம் சிவோஹம் என்று கிளியே சொல்லும் சிவானந்தமே
ஏகம் அனேகமதாய் கிளியே எங்கும் நிறைந்ததடி

2 தோன்றி மறைந் தழியும் இந்த துன்ப உலகினிலே
என்குருநாதனடி...கிளியே ஏழைக் காதாரனடி

3 என்று வரும் கிளியே புகல்வாய் என் குருநாதன் அருள்
துன்று மலமாயை அறுத்தென்னை தூக்கிக் கரைசேர்க்க

4 எண்ணித் துலையாத பிறவிகள் எடுத்தலுத்தேன் கிளியே
மண்ணில் படாதுபட்டு....கிளியே மயங்கித் தவித்த தெல்லாம்

5 கொஞ்சம் அல்லவடி கிளியே கோரபவக் கடலில்
அஞ்சி அபயம் என்றேன் கிளியே ஆரணத்தின் முடிவை

6 கண்டு தெளிய வெனில் நமக்கொரு கைகாட்டி
வேண்டுமன்றே
பொய்காட்டிப் போனவரே விரைவினில் மெய்
காட்ட வேண்டுமடி (கிளியே)
7 கள்ள மனக்குரங்கை கிளியே கட்டி ஓர் மந்தி
ரத்தால் அதை
எட்டிப் பிடிக்கவழி எனக்கவர் என்று புகல்வா
ரோடி
8 நெஞ்சக் குறைகள் எல்லாம் கிளியே நீ சொல்ல
வேண்டுமடி
பஞ்சுபடாது பட்டேன் கிளியே பாசவினைக்
கயிற்றால்
9 (நான்) சுற்றி மெலிந்த தெல்லாம் கிளியே
சொல்ல நீ இல்லையோடி
மனக் கள்ளனை கட்டிவிட்டால் கிளியே....
உள்ளது காணுமடி
10 தொண்டருடன் கூட்டி கிளியே துன்பம்
விலக்கிவிட்டால் (இந்த)
ஐம்புலக் காக்ஷிகளும் கிளியே அக்ஞானமும
துலையும்
11 ஓடிவருவாரோ கிளியே தேடி அழைப்பாரோ
உத்தமர் கூட்டத்திலே
நம்மையும் ஓர் பக்தனாய் சேர்ப்பாரோ
12 நித்திய வைகுந்தம் விட்டு கிளியே ஸுத்த
சிவானந்தமாய் (அது)
பத்தமடை உதித்து ஹிமயத்தில் பிரத்யக்ஷ
மாய் விளங்கும் சிவானந்தம்

13 கருணைபொங்கும் உள்ளம் அதற்கொரு கட்டு
கரைகள் இல்லை
பட்டகுறை தீர்க்க பருவங்கள் பார்ப்பதும்
நியாயம் இல்லை
14 சொன்னதொரு சொல்லே அதில் ஒரு ஜோதி
விளங்குதடி
மீதி ஏதும் அறியேன் கிளியே பாதி புரிய
வில்லை
15 ஓம் குரு ஓம் குரு ஓம் சிவானந்த உத்தம
ஸத்குரு ஓம்....ஓம் குரு
ஓம் குரு ஓம் குரு ஓம் நிஜானந்த உன்
னடிக்கே சரணம். (ஸோஹம்)

—0—

ஸத்குரு பாதுகை குஞ்சரம் என்மேல் பட்டவுடன்
தானே என்ற மெட்டு

1 ஜேஜே சிவானந்த ஸத்குரு மகராஜ் ஸ்ரீ குரு
மகராஜ் ஜேஜே
பவத்தைக் கடக்கவுன் பாதமே அண்டினேன்
பாவனகுரு மூர்த்திஜேஜே
2 சிவானந்த ஸத்குரு திருவடி மலரினை சிந்தித்
திரு மனமே தினமே (நீ)
பவசாகரத்தைக் கடக்க நீ வேண்டிஞல் பரிவு
டன் காத்திடுவார் சற்குரு
3 ஆலிலைமேல் பள்ளிகொண்டவனும் புகழ்
அகண்டபரி பூரணமே இங்கு

அபயம் அளிக்கவென்று அவதரித்தனனே
சிவானந்த சின்மயனே சிவனே
4 கண்டவுடன் அன்பர் கவலைகள் தீர்த்திடும்
கைவல்ய ஸுகபோதனே
(ஸத்குரு) ஐவர் தங்கும் உடலை ஆனந்த குடி
ராய் ஆக்கிய தேசிகனே சிவனே
5 முக்குணம் நீக்கியே முக்தியை அளித்திட
பத்தமடையில் உதித்தான் ஸத்குரு
ஸத்து சித்தானந்த தன் மயபோதனுய் நித்ய
ஸுகம் அளித் தான் தாய்போல் அன்பும்
தந்தை போல் உதவியும் ஸமரஸ நன் மொழி
யும் கொண்டு
6 அமரர் புகழும் கங்கை கரையினில் நின்று
(நம்) ஆணவமலம் அழித்தான் ஸத்குரு
7 வாவென அழைத்தொரு வாக்கியத்தாலேயே
தூக்கிக் கரையில் சேர்ப்பான் ஸத்குரு
பாக்கியத்தால் வந்த பார்வதி புத்திரனை பக்தி
யுடன் தினமே ஓமனமே (ஜே ஜே ஸத்குரு)

—0—

சிவபெருமான் கிருபை வேண்டும் என்ற மெட்டு

பல்லவி

(ஸத்) குரு அருள் நாம் பெறவேண்டும், பிற
கென்ன வேண்டும் (ஸ்ரீ)

அநுபல்லவி

தேடும் சிவானந்தத் தேன் வேண்டும்
சின்மயனும் ஸத் (குரு)

சரணம்.

1 க்ரோத லோபம் அழியவேண்டும் குறை ஏதும்
வேண்டாம் (குரு)

2 எங்கும் ஒன்ருய் காணவேண்டும் ஏகிகமானல்
சங்கர ஸ்வயம் புவாய் தோன்றும் தத்வமுரைக்
கும் (குரு)

3 நானே நீயாகி விடவேண்டும் காணாது காணும்
நற்றவம் பெறயாது வேண்டும் ஸத்குரு
வேண்டும் (குரு)

4 திரும்பிப் பிறப்பறுக்க வேண்டும் த்ருட புத்தி
வேண்டும்
குடும்பவலையறுக்க வேண்டும் கைகூப்பிட
வேண்டும் (குரு)

5 ஸாதனை செய்தடைய வேண்டும் ஸத்து சித்தா
னந்த
மாக மனதிருக்க வேண்டும் மஹாத்துக்கள்
வேண்டும் (குரு)

6 துரியவெளி யடையவேண்டும் தோன்றி
மறையா (அத்)
அழியா ப்ருஹ்மமேயாக வேண்டும் (குரு அருள்)
(குரு)

—0—

ராகம்: தோடி தாளம்: ஆதி

கண்டாளே கண்ணன் திருவயிற்றில் என்ற மெட்டு

பல்லவி

கண்டு மகிழ்ந்தேனே கனவிலும் நினைவிலும்

கங்கைக் கரை வாழ் குருவை (ஸ்ரீ சிவானந்த
திருவடியை) (கண்)

அநுபல்லவி

கைலயங்கிரி தன்னில் கருணையே வடிவான
ப்ரபு சிவானந்தரை பரமானந்தத்துடன் (கண்டு)

சரணம்.

1 முன்செய்த வினை எல்லாம் முழுதிலும் விலகிட
கண்செய்த புண்ணிய காக்ஷிகள் தோன்றிட
சாக்ஷி நான் என்று மனம் சந்ததம் மகிழ்ந்திட
சரணாரவிந்தத்தை (குரு) த்யானித்து அமர்ந்
திட (கண்)

—0—

மங்களம்

(மங்களம் ருக்மிணி ரமணாய என்ற மெட்டு)

ஸ்வாமி சிவானந்தாய ஸாதுஜன வந்தியாய
ஸச்சிதானந்தாய ஜெய மங்களம்
பவரோக வைத்யாய பாபதோஷ ஹராய
பரிபூர்ணரூபாய பரமகுரவே (ஜெயமங்களம்)
ஆனந்த குடீர்வாழும் அன்புசிவானந்தமாய்
ஆரணங்கள் தேடி அறியாத வடிவாய்
கோரபவ ஸாஹரத்தைத் தீர்த்த குரு மூர்த்தியாய்
கோகுலத்தை விட்டு வந்த குழந்தை க்ருஷ்ண
(ஜெய)

திவ்ய ஜீவிய மலர்கள் ஜெகம் எங்கும் வாசிக்க
சிஷ்யருடன் நீடூழி வாழி வாழி (நீ)

பக்ஷமுடன் மீனாக்ஷி பகர்ந்த (சில) மழலைக்கும்
பார்வதி புத்ரனே பிழை பொறுத்தாள்
ஜெய மங்களம் நித்ய சுபமங்களம்

—0—

ராகம்: காம்போதி                    தாளம்: ஆதி

மரகதவல்லி மனஸாஸ்மராமி என்றமெட்டு

பல்லவி

ஸ்ரீஸத் குருநாதா சரணம் சரணம்        (ஸ்ரீ ஸத்)

அநுபல்லவி.

தீன தயாளா தேவா வா வா நீ
ஸ்ரீ சிவானந்த மூர்த்தே கார்த்தருள்     (ஸத் குரு)

சரணம்.

1 மோஹன மூர்த்தே (ஜெகன்) மோஹ விவர்ஜிதே
பாவன பவித்ரே பரமானந்த கீர்த்தே
அற்புத சரித்ரே (அதி) அபயம் அபயம்
ஆதரித்தருள் புரி ஸத் குரு மூர்த்தே     (ஸத்)

—0—

செந்தூர் வேலாண்டி என்ற மெட்டு

பல்லவி.

எல்லாம் நான் தானே உலகில் இதை
சொன்னன் குஹன்தானே        (உலகமெல்லாம்)

அநுபல்லவி

ஸத்குரு நாதம் ஸ்வாமி சிவானந்தம்

பக்தருக் கருள் செய்ய பாரில் வந்தருள் குஹன்
(எல்)

சரணம்.

1 பார்ப்பன கேழ்ப்பன பலதொழில் புரிவானே
ஆத்திரத்தோடு என தென தென தென்பா
னேன் (எல்)
2 பாற்கடல் நீரை பாகம் பிறிப்பானேன்
மேக மின்னலைப் போன்ற தேகம் விசித்
திரமே (எல்)
3 மண் இதோர் பாண்டம் பொன்னையே
பூண்டோம்
அன்னியம் வேண்டோம் ஆணவம் தாண்டி
னல் (எல்)
4 கண்டுகொள்வாயே கலங்கிச் சொல்லாதே
வண்டு போல் நீயே விசாரித்தால் அறிவாயே
(எல்)

—0—

ராகம்: சாவேரி தாளம்: சாபு

எத்தனை சொன்னாலும் என்ற மெட்டு

பல்லவி

நிரதிசயானந்த சுக அனுபவம் கண்டால் ஸ்ருதி
மறை
ஏதுக்கடி சொல்லடியோ என்தோழி (நி)

அநுபல்லவி

பலகலை பயின்றாலும் மனம் நிலை நிற்குமோடி
வினை

உன்னை தொடராத விதத்தை விசாரிபோடி (நி)

சரணம்.

1 விரதம் உபவாசம் புண்யம் நதி நதங்களும் மற்ற
விகித கர்மங்கள் முற்றும் விளம்பின தாருக்கடி
சதுர் மறை முற்றும் தேடினலும் குணமில்லை யடி
தானே நாளுகிவிட்டால் சஞ்சலம் அங்கே யில்லேடி (நி)

2 யாக தான தவங்கள் மோனமுக்திமார்க்கத் தால்
தியான நிலையடைந்தால் அக்ஞானம் நசிக்கு தடி
வீணே பொழுதை சில விட்டிட வேண்டாம் தோழி
காலன் ஒரு நிமிஷக் கணக்கும் பிசகான் கேளீர் (நி)

—0—

## ஸ்ரீ சிவானந்த நாமாவளி

மோஹன முரளீ பாலகோபால பாஹி பாஹிமாம்
என்ற மெட்டு

ஸ்வாமி சிவானந்த ஸத்குரு நாதா பாஹி பாஹிமாம்
சரணுகத ரக்ஷண தர்மமே பூண்ட ஸத்குருவே பாஹிமாம்

அகண்ட சத்சித் ஆனந்த ஸ்வரூபா பாஹி
பாஹிமாம்
ஆனந்த குடீரின் தேவாதிதேவ பாஹி பாஹிமாம்
அபலை என்னையுன் அடிமை கொள்வாய் ப்ரபுவே
பாஹிமாம்
அன்னை தந்தைகுரு தெய்வமும் ஆன கோவிந்தா
பாஹிமாம்
குழந்தை என் மனக் கோயில்கொண்டுள்ளாய்
குருவேபாஹிமாம்
கோபித்து தள்ளிவிடாதே கதி இல்லை கோபால
பாஹிமாம்
காணக் காணச் சலிக்காத பேரன்பே சிவமே
பாஹிமாம்
கண்ணனைப்போலவே என்னை மயக்கிய ஸ்கந்தா
பாஹிமாம்
பின்னை ஒன்றும் அறியாமலே செய்த பேரின்
பமே பாஹிமாம்
முன்னை வினைபட என்னைக் கடாக்ஷித்த மூர்த்தே
பாஹிமாம்
ஸாக்ஷாத் காரமாய் தத்வமஸி என்ற தவமே
பாஹிமாம்
மோக்ஷ உலகின் கதவைத்திறந்த முகுந்தனே
பாஹிமாம்
பார்க்கப் பார்க்க மனம் பரவசமாகுதே பாஹி
பாஹிமாம்

பாபவினைகள் பறந்து விலகுது பாஹி பாஹிமாம்
என்ன ஆனந்தம் ஈடில்லா தெரிசனம் பாஹி
பாஹிமாம்
கோழை மதிகொண்ட குழந்தை என்னைகார்
பாஹி பாஹிமாம்
ஏழை மீனாக்ஷிக்கிரங்கும் சிவானந்த தேவா
பாஹிமாம்
என்னுள்ளம் கவர்ந்து எங்கும் நிறைந்த சம்பூர்ண
பாஹிமாம்
பாதமலர் தொட்டு ஸேவிக்க எண்ணுதே பாஹி
பாஹிமாம்
பரப்ரும்மமாகிய உன் தாள் எங்குண்டு பாஹி
பாஹிமாம்
எங்கும் நிறைந்த சிவானந்த ஜோதியே பாஹி
பாஹிமாம்
அது பொங்கிவழிந்து புதுமைகள் செய்யுதே
பாஹி பாஹிமாம்
தங்கி உன்னடிக்கீழ் சாந்தி (யுரச் செய்வாய்)
பெற அருள் (பா)
மந்திரக் கோல்கொண்டு மனதை அடக்கினாய்
பாஹி பாஹிமாம்
ஜே ஜே ஸத்குரு ஸ்வாமி சிவானந்த பாஹி
பாஹிமாம்

—0—

## வேறு

1 சம்போசங்கர பாஹி சிவ சாம்பஸதாசிவ
பாஹி
கும்போத் பவனுத பாஹி குவலய நேத்ரா
பாஹி
2 ஸத்குரு நாதா பாஹி ஸ்வாமி சிவானந்த
பாஹி
முக்குண ரஹிதா பாஹி மோக்ஷப்ரதாயக
பாஹி
3 நித்யானந்தா பாஹி நிஜவர தாதா பாஹி
உத்தம புருஷா பாஹி ஓங்காரானந்த பாஹி
4 மோஹன ரூபா பாஹி மூர்த்திநிஜானந்த
பாஹி
சாக்ஷாத் காரா பாஹி மாம் ஸாது சிகாமணி
பாஹி
5 கைலாஸவாஸா பாஹி கல்மிஷரஹிதா பாஹி
கண்ணுக்கினியாய் பாஹி மனக்கள்வனை
வென்றாய் பாஹி
6 சாந்த ஸ்வரூபா பாஹி ஸத்ஜன வந்தியா
பாஹி
மாந்தர் கொருதுணையாகி ஹிமாலயம் வந்தாய்
பாஹி
7 ஒன்றையும் அறியேன் பாஹி உன்னை மனம்
கொண்டேன் பாஹி
கைவிடலாமா பாஹி கடும்பசிகொண்டேன்
பாஹி

8 உள்ளம் கவர்ந்தாய் பாஹி ஓடிவந்தடைந்
தேன் பாஹி
தள்ளிவிடாதே பாஹி ஸத்குரு நாதா பாஹி
9 தீனரக்ஷகா பாஹி திருக்கடைக் கண்பார்
பாஹி
தேடியபாதா பாஹி ஸ்ரீசிவானந்தா பாஹி
10 அடியார்க்கெளியாய் பாஹி ஆரணமுடிவே
பாஹி
அறியா எளியேன் பாஹி அபயம் தரும்குரோ
பாஹி மாம் பா..........

—0—

ராகம்: சங்கராபரணம் தாளம்: ஆதி

யார் வீதி வராரோடி, நடராஜர் தான் வீதி
வருவாரோடி என்ற மெட்டு

பல்லவி

காணமல் இருப்பேனோடி (ஸத்குரு நாதனை) நான்
வீணய்
நாள் கழிப்பேனோடி—விளம்புவாய் தோழி (கா)

அநுபல்லவி

பாழாய் மடியும் தனுபங்கம் அடைந்த தென்று
ஆலால முண்டவனும் அடிவணங்கும் பாதனை
(நான் காண)

சரணம்.

1 தேனே கரும்போ அவன் திரு நாமம் யான்
அறியேன்

வானோர் துதி செய் ஸ்ரீ வைகுண்ட நிவஸிதனே
மானார் விழியார் மனம் தானே பரிக்கும் எழில்
ச்யாமள மேனியனே ஸ்வாமி சிவானந்தனே
(கா)

2 வாக்கு மனத்திற் கெட்டா வஸ்துவை
போதித்து
யார்க்கும் கிடைக்கா ஞான நிஷ்டை எனக்
களித்து
பார்க்குள் ஆனந்த குடீர் பர்ணசாலை
அமைத்து
பலரும் புகழும் சிவானந்தத்தைத் தியானித்து
(கா)

—0—

ராகம்: ஆரபி தாளம்: ஆதி

யாஹி மாதவ யாஹி கேசவ மாதவ கைதவ
வேடம் என்ற மெட்டு

பல்லவி

பார்த்து உன்னை மனதில் சேர்த்த
அன்பருக் குரும் ஆர்த்தி தணிப்பார் யார் ஐயா
(ஸத்குரோ சொல்வாய்) (பார்)

அநுபல்லவி

ஸாஸ்திரக் கடல் ஆடி தவயாக யோகம் தேடினா
லும்
மனம் நசித்து மஹாமௌனம் தான் தருமோ
(பார்)

சரணம்.

1 வாடாத பூவே யாரும் வரையாத சித்திரமே
கரையா கல் கண்டே உன்னை அறிந்தால்
பிறவி யுண்டோ
ப்ரதிமைகளைக் கைகூப்பிப் பலதிசை செல்வ
துண்டோ
நதி நதங்களை தேடி யாத்திரை தானும்
உண்டோ (பார்)

2 ஸூஸ்திரப் பதுமைபோல் சுற்றிப் பாசக்
கயிற்றால்
அவித்தையினால் மயக்கி பக்திதரும்
முதல்வா
எப்பொருள் ஏனும் உனக்கப்பால் பிறிதொன்
றுண்டோ
ஏகனே ஹ்ருதயத்தில் இலங்கும் சிவானந்தமே
(பார்)

—0—

ராகம்: சுருட்டி தாளம்: கண்டகதி

பல்லவி

கண் பார்த்தார் ஸத்குருநாதன் என்னை கடைக்
கண் பார்த்தார் ஸத்குரு (க)

அநுபல்லவி

மண் பெண்ணுடன் பொன்னும் மனதை
கவராமல் அருள் (க)

சரணம்.

1 முன்னை புண்ணிய வசமூர்த்தியின் க்ருபையி
னல்
என்னைப் பிடித்த இடர் (இருள்) விட்டொழிந்
திட
ஓங்கார கோட்டைக்குள் ஒளிதரும் தனிசுடர்
ஒன்ருகி எங்கும் ஓம் ஓம் ஓம் எனும்படி (க)
2 கயிலேகிரியில் தங்கி கருணை அருள்பொங்கி
பரிபூரணப் பொருள் ஆகி என்னுள் தங்கி
பந்தத்தினல் வந்த பாராதி ஷட்வர்க்க
மோஹாதி சோகங்கள் பாபங்கள் விலக (க)

—0—

ராகம்: தோடி தாளம்: ரூபகம்

எல்லாருமாக நில்லுங்கள் கோபஸ்த்ரீகளா
நீங்கள் என்ற மெட்டு

பல்லவி

உலகில் எங்கும் போய்த் தேடினேன் புகலும்
உபசாந்தத்தை
ஒரு அணுவளவேனும் காண்கிலேன் (உல)

அநுபல்லவி

இரவும் பகலும் ஓடி எட்டுதிசையும் நாடி
பட்டினியாலும் வாடி பலவிதம் ஸ்துதிபாடி (உல)

சரணம்.

ஸேதுமுதல் குமரி திருக் கைலேகிரி தீர்த்தங்கள்
(முற்றும்)

(நீராடி) தரிசித்தேன் ஹரி ஹரி (என்னை)
ஸ்பரிசிக்க வில்லை அமைதி குருக்ஷேத்திரம்
ப்ரயாகை
கூறும் மணிகர்ணிகை கடைத்தேறும் கயை
அயோத்யை கண்டேன் (உல)

2 ஸாஸ்திரம் கொண்டு
ஸப்தபுரிகள் தோரும் போய் தரிசித்தேன்
ப்ரதிமை தான் சுற்றி சுற்றி கவனித்தேன்
ஐயா
துலையா அக்ஞானத்தால் மெத்தப் படித்தும்
களைத்தேன்
சிற்றிடைமாதர்கள் சிறுவர்கள் போல் கண்
ணீர்
எத்தனையோ வடித்தேன் ஹ்ருதயா புரியை
விட்டேன் (உல)

3 வேத வாக்கியம் நம்பினேன் விளம்பும் வைதீ-
கர் தொல்லை முழுதும் முடித்தும் ஏங்கினேன்
பழுதுள்ள ப்ரபஞ்சத்தை பார்த்துக் கொண்
டாடினேன்
பக்தி கொண்ட ஹர ஹர ஹர எனச் சாடி
னேன் (உல)

4 ஸ்வாமி சிவானந்தத்தைச் சரணம் என்றடைந்
தநும்
இந்த ஸந்தேகம் முற்றும் ஒழிந்தேன்
பொங்கும் ஆனந்த குடீர் மங்கள சிவானந்தம்
எங்கெங்குமாய் நிறைய இன்ப ஸ்வதந்திரம்
(பெற்றேன் உல)

ராகம்: கேதாரம் தாளம்: ரூபகம்

ஸ்ரீநிவாஸனே என்மீதில் என்ற மெட்டு

மங்களம் ஜெய மங்களம் குருநாத ரடி மலருக்கு
ஸந்ததம் மங்களம் சுபமங்களம் (குருநாத)

எங்கிலும் புகழ் மங்கள சிவானந்த ஸத்குரு
மஹாராஜருக்கு (மங்களம் ஜெய)

பாப புண்ணியம் அதற்ற மெய்நிலை
பார்த்து சேர்க்கும் பரமானந்தருக்கு (மங்களம்)

—0—

## குருநாமாவளி

அநாதநாத தீனபந்து ராதே கோவிந்தா
(பிருந்தாவனசந்திரா)

ஆபத்வாந்தவ ஸத்குருநாதா ஸ்வாமி சிவானந்தா
(ஸ்ரீ ஸ்வாமி சிவானந்தா)

நித்யானந்த நீல சரீரா ராதே கோவிந்தா
(பிருந்தா)

நிர்மலபோதா நிஜவர தாதா ஸ்வாமி சிவானந்தா
(ஸ்ரீ ஸ்வாமி சிவானந்தா)

மோஹனரூபா முரளிவினோதா ராதேகோவிந்தா
(பிருந்தா)

மோக்ஷப்ரதாயக முனிஜென வந்தியா ஸ்வாமி
சிவானந்தா (ஸ்ரீ ஸ்வாமி)

பங்கஜலோசன பதிதபாவன ராதேகோவிந்தா
(பிருந்தா)

பக்தஜெனப்ரிய பார்வதிபுத்ரா ஸ்வாமி சிவா
னந்தா(ஸ்ரீ ஸ்வாமி)
கோகுலவாசா பாப விநாசா ராதேகோவிந்தா
(பிருந்தா)
ரிஷிகேச வாஸா பவபயநாசா ஸ்வாமிசிவானந்தா
(ஸ்ரீஸ்வாமி)
சங்குசக்ர பீதாம்பரதாரி ராதேகோவிந்தா
(பிருந்தா)
சரணகத பரிபாலன ரூபி ஸ்வாமி சிவானந்தா
(ஸ்ரீ ஸ்வாமி)
பரமபத கோவிந்த முகுந்தா ராதே கோவிந்தா
(பிருந்தா)
பாபவிமோசன பவபயநாசன ஸ்வாமி சிவா
னந்தா (ஸ்ரீ ஸ்வாமி)
ஏழை எங்களைக் காக்க ஓடிவா ராதே கோவிந்தா
(பிருந்தா)
எங்கள் மனத்துயர் தீர்த்திட வந்த ஸ்வாமி சிவா
னந்தா (ஸ்ரீஸ்வாமி)
அன்னை தந்தை குரு தெய்வமும் நீயே ராதே
கோவிந்தா (பிருந்தா)
அண்டியபேருக்குக் கற்பகதருவாய் ஆன சிவா
னந்தா (ஸ்ரீ ஸ்வாமி சிவானந்தா)
ஆனந்த முரளி மோஹன ரூபா ராதே
கோவிந்தா (பிருந்தா)
ஆனந்த குடிலில் தங்கும் மெய்ப்பொருளே ஸ்வாமி
சிவானந்தா (ஸ்ரீ ஸ்வாமி)

திருவடி சரணம் செய்து மகிழ்ந்தேன் ராதே
கோவிந்தா (பிருந்தா)
திவ்விய ஜீவிய மலர்தரும் தருவே (குருவே)
ஸ்வாமி சிவானந்தா (ஸ்ரீ ஸ்வாமி)
மங்களமூர்த்தி மாதவகிருஷ்ண ராதே கோவிந்தா
(பிருந்தா)
கங்கைக் கரைவாழ் கருணமூர்த்தி ஸ்வாமி சிவா
னந்தா (ஸ்ரீஸ்வாமி) (அநாதநாத)

—0—

கும்மி—மெட்டு

1 ஆனந்த ஸாகரம் தன்னில் உதித்த சிவானந்த
பாஸ்கர
தேசிகனை (சிவா) காணக் கண்கள் கோடியாயி
னும்
போதுமோ கங்கை கரைவந்து பாருங்கோடி
(நீங்கள்)

2 அப்பைய தீக்ஷிதர் தந்த வழி வந்து அவதார
மான
சிவக் கொழுந்து (அது) அன்பர் உள்ளம்
கொள்ளை
கொண்ட சிவானந்த அற்புத ஜோதியை
பாருங்கோடி (ஆ)

3 செம்பொன்னைபோன்ற திருமேனி சிறு
பிள்ளைகளைப்
போன்ற வெள்ளை மனம் அள்ளக் குறையாத
அத்வைத போதனை

ஆனந்தமாஹ மலர்ந்த முகம் (பரமானந்தமாக)
4 பொங்கும் கடல் போன்று கம்பீரம் பரிபூரண
சந்திரன்போன்ற முகம்
அள்ளிக் கொடுக்கும் அபய கரம் மன ஆறுதல்
சொல்லும் திருநயனம்.
5 பாவம் துலக்கும் திருவடிகள் (நம்) பக்த பால
னம் செய்யும் குளிர்ந்த உள்ளம்
ஞானஸ்வரூபி சிவானந்த மூர்த்தியை நம்பின
போக்கினி துன்பம் இல்லை.
6 பாக்ய ஹிமாலய கங்கை கரைதனில் பக்தாளை
இரட்சிக்க நின்ற சிவம்
பக்குவம் பார்த்து வைத்தியம் செய்யுது பாம
ரர்க்கும் உண்டு ஞான வழி.
7 கைலேகிரி விட்டு வந்தனரோ இவர் கன்றுகள்
மேய்த்து மகிழ்ந்தவரோ (அன்றி)
புண்டரீகத்தில் அமர்ந்தவரோ புள்ளி மானை
துடர்ந்த ஸ்ரீ வேலவரோ.
புள்ளி மானை துடர்ந்தவரோ புகல்வாய்.
8 கண்ட கண்ட பல தெய்வங்களை கை கூப்பி
நின்றது கொஞ்சமில்லை. (இதோ)
ஒன்ருகி வந்து குரு வடிவாகிய உத்தம ஸத்
குரு நாதனடி சிவா உத்தம (சத்குரு)
9 பார்க்கத் திகட்டாத பாக்ய சிவானந்தம் பக்
தரை ஆள்கொள்ளும் சித்தரடி
சித்த ஸுத்தி தந்த முக்தனடி ஜெகத் ஜோதி
யடி பரஞ்ஜோதியடி.

10 கண்ட கல் நெஞ்சும் கரையுதடி கவிதை மலர் மாரி பெய்யுதடி
அவித்தை துலைத்தென்னை ஆள்கொண்ட
தெய்வத்தை ஆனந்த குடீரில் கண்டேனடி.
(ஆ)

—0—

## நாமாவளி

ஸத் குரோ பாஹிமாம் ஸ்வாமி சிவானந்த பாஹி மாம் ஸ்ரீ குரோ பாஹிமாம் சிவானந்த ரக்ஷமாம்.

ஓம் குரோ பாஹிமாம்-ஓடி வந்து ரக்ஷமாம் ஜெய் குரோ பாஹிமாம் சிவானந்த த்ராஹிமாம்

ஆனந்த குடீர் தேவனே அற்புத சிவானந்தனே
ஞானம் தந்திடும் முதல்வனே நம்பினேன் குருநாதனே.

கங்கை கரை வாழ் முக்தனே கார்த்திடும் பரிஸுத்தனே மங்கை பார்வதி புத்ரனே மாதவ சிவானந்தனே.

பங்கய மலர் பாதனே பாவலர் போற்றும் தூயனே
சங்கடம் தீர்த்த நாதனே ஸ்வாமி சிவானந்தனே.

அபயமளிக்கும் கையனே அகிலம் போற்றும்
ஐயனே உலகில் வந்த மெய்யனே உனை நம்பினேன் நம்பினேன்.

குழந்தைகள் நாங்கள் போற்றியே கும்பிட்டோம்
குருநாதனே எங்கிலும் நிறை ஜோதியே மங்கள ஸ்வரூபியே.

ஓடி வந்து கார்த்திடாய் உண்மை எது உரைத்தி
டாய் தேடி வந்தோம் ஐயனே திரும்பிப்பாராய்
மெய்யனே.

[ஸத் குரோ பாஹிமாம் ஸ்வாமி சிவானந்த
ரக்ஷமாம்]

—0—

## கங்கா பிரவாகமும் இமாலயமும்

ஹரி ஓம் ஓம் ஓம் ஓம் ஓம் என்றொலிக்குது ஓடி
வந்து ஸத்குருவாகி

தேடி அழைக்குது. நம்மைத் தேடி அழைக்குது

ஆகாயத்தில் நீலவானம் அழகாய் தெரியுது
[அங்கே அழகாய் காணுது]

ஆனந்தமுடன் கங்கை தவழ்ந்து அமைதி அளிக்
குது [மன அமைதி]

ஓம் ஓம் ஓம் என்று ஓடி வருகிறது. [அங்கே]
[கங்கை ஓடி வருகிறது]

உத்தம சிவானந்த குடீரில் உள்ளம் குளிருது
[நமது உள்ளம் குளிருது]

ஸாது சர்ஜ்ஜன சங்கம் கூட்டி தத்துவம் பொழி
யது [பர தத்துவம் பொழியுது]

தத்துவமசி தத்துவமசியென சாந்தம் அளிக்குது
[உபசாந்தம்]

ஸத்குருவாகி தரணியில் வந்தார் ஸ்வாமி சிவா
னந்தா [ஸ்ரீஸ்வாமி]

சகல மதங்களும் ஏகம் என்றார் ஸ்வாமி சிவா
னந்தா [ஸ்ரீஸ்வாமி]

அகிலம் போற்றும் ஸத்குரு மூர்த்தி ஆன சிவா
னந்தா [குருஸ்வாமி]
அற்புதமாக ஹிமாலய ஜோதியான சிவானந்தா
[ஜோதியான சிவா]
ஸ்வாமி சிவானந்த திருவடி சரணம் அடைந்திடு
வோம் [நாமும் சரணம்]
சம்சாரப் பெருங்கடல் கடந்து நடனம் புரிந்திடு
வோம் [ஆனந்த நடனம்]
ஆணவம் போக்கிடும் ஆனந்த குடீரில் அன்பைப்
போற்றிடுவோம் [சிவா]
ஆனந்தம் சிவானந்தம் என தியானம செய்திடு
[வோம் ஆத்ம தியானம்] [ஸதா தியானம்]
[நீங்கள்]
வாருங்கள், வாருங்கள் வந்து பாருங்கள் [இங்கே
வந்து பாருங்கள்]
வாசுதேவ மூர்த்தியாம் சிவ குருவைப் பாருங்கள்
[சிவ குருவைப் போற்றுங்கள்]
ஓம் சச்சிதானந்தா குருவைப் பணியுங்கள் [நீங்கள்
குருவைப் பணியுங்கள்]
ஓடி வந்து (DIVINE LIFE) 'டிவைன் லைப்பில்'
உடனே சேருங்கள் [நீங்கள் உடனே]
மோக்ஷமளிக்கும் முனிகிரேதியில் முனிவர் சிவ
குருவை [ஆனந்த முனிவர்]
சாக்ஷாத்கார ஷண்முகனென்று சரணம் பண்
ணுங்கள் [நீங்கள் சரணம்]
கருணமூர்த்தி ஸ்வாமி சிவானந்தர் கற்பகமல
ரடியை [அவர் கற்பக மலர்]

கங்கைக்கரையில் கண்டு மகிழ்ந்திட ஓடிவாருங்கள்
[சீக்கிரம் ஓடி]

]ஹரி ஓம் ஓம் ஓம் என்று]

—0—

ஸ்ரீ ராமசந்திரனுக்கு ஜெய மங்களம் என்ற மெட்டு

பல்லவி

ஸத்குரு நாதருக்கு ஜெய மங்களம்
ஸ்ரீ சுவாமி சிவானந்தருக்கு சுபமங்களம்

அநுபல்லவி

ஸ்வாமி சிவானந்த ஜீக்கு ஜெய மங்களம்
ஸர்வஜன ரக்ஷகர்க்கு சுபமங்களம்

சரணம்.

1 கண்டவர் மனம்குளிர காட்சி தரவேணு
மென்று
புண்டரீகம் விட்டுவந்த பூர்ண பரப்பிரம்மருக்கு
(மங்களம்)

2 பக்தஸர ரக்ஷிக்க வென்று பாற்கடலை விட்டு
வந்த
பார்வதி சகோதரருக்கு ஜெய மங்களம் பக்த
பரிபாலருக்கு (சுப)

3 கார்த்திகேயன் போல நின்று கங்கை சுதன்
போலும் இன்று
கருணைமாரி பெய்பவர்க்கு சுபமங்களம்

4 அஞ்சிவரும் மெய்யருக்கும் அபயம் அளிக்க
வென்று

அவதாரம் செய்தவர்க்கு சுப மங்களம்
ஆதிபரப்ரும்மருக்கு ஜய மங்களம்
5 பக்குவமாய் பக்தர்களைப் பார்த்து வந்து
உபதேசிக்கும்
பார்வதி புதல்வர்க்கும் ஜெய மங்களம்
பத்தமடை உத்தமர்க்கு சுப மங்களம்

—0—

ஸ்ரீ லக்ஷிமிதேவிநீ சாலககொலசிதே என்ற
மெட்டு.

1 மங்களம் மங்களம் பவந்துதே எங்கள் குருநாத
ருக்கு
அன்பு நிலையமாய் திவ்ய அறநெறிச் செல்வ
மாய்
பொங்கு ஆனந்த குடிஆரும் தெய்வமாய்
வம்புகள் தீர்த்துண்மை வழிகாட்டும் கையனாய்
வந்த சிவானந்த வள்ளல் திரு வடிக்கு
(மங்களம்)

2 அங்கை நெல்லிக் கனிபோல் அத்வைத ரகஸ்
யத்தை
செங்கையினல் சொன்ன ஸத்குரு சுவாமிக்கு
எங்கிலும் புகழ் சிவானந்த ஸரஸ்வதிக்கு
ஏழை என்குறை தீர்த்த யதிராஜ யோகிக்கு
(மங்களம்)

3 காவி உடைதரித்து கையில் தண்டம் பிடித்து
ஆதி மங்கள பரஞ்சோதியை தியானித்து
சாது ஸத் ஜனங்களுக்கு ஓதி உபதேசிக்கும்
வேத சிகரகுரு நாதருக்கு மங்களம் (மங்களம்)

4 பக்தியுடனே யோக முக்தி தரும் (ஸத்கர்ம)
மெய்ஞான
சித்திஎல்லாம் அளிக்கும் யுக்தி புகலும் அவர்
உத்தமமான உபதேச மொழிகளுக்கும்
சித்த சுத்தியை தரும் அவர் திவ்ய மலரடிக்கு
(மங்களம்)

5 துன்ப பவமழிக்க தோன்றிய ஜோதியாய்
இன்ப நிலை அளிக்கும் எம் குருநாதர்க்கு
சங்கரன் அயன் புகழ் ஸ்வானுபவத்தை தரும்
ஸ்ரீங்கார பீடத்தில் திகழும் ஜெகத் குருவிர்க்
கும்
மங்களம் மங்களம் மங்களம் பவந்துதே
(மங்களம்)

—0—

## விருத்தம்

கைமாறு கருதாத கருமுகில் போல்
எனக்கருள் செய்—
உருவமாய் எதிரில் தோன்றி
உயர்நிலை பொருளை ஓதி
திருஅருள் செல்வமாகி
தெய்வீக வாழ்வை தந்து
ஐவகை புலனுக்கெட்டா
ஆனந்த குடில் வாழ் அன்பாய்
ஆகிய ஜோதி வாழ்க
அருள் சிவானந்தமே வாழ்க, வாழ்க.

ஓம் சுபம்.

சிலஸ்ரீ சிவானந்த ஸத்குரு மஹராஜ் பாத பூஜா

## நவத்வாதச நாம அர்ச்சனவளி

ஓம் ஸ்ரீ ஸத் குரவே நம:
,, ஹிமாசல வாஸினே நம:
, வானப்ரஸ் தாச்ரமிணே நம:
,, ஆனந்தாய நம:
,, நிர்மலாய நம:
,, ஆத்மனே நம:
,, நந்தநாய நம:
,, தக்ஷிணமூர்த்தயே நம:
,, அகங்காரவிவர்ஜிதாயநம:
,, ஸ்ரீஸ்வயம் பிரகாசாயநம: 10
,, இஷ்டஸித்தி ஸ்வரூபாயநம:
,, விச்வ ப்ரேமாய நம:
,, அத்வைத குரவே நம:
,, நித்ய த்ருப்தாய நம:
,, ஆத்மஞானந்தாய நம:
,, நாம தேவாய நம:
,, தாமஸ்வரூபிணே நம:
,, ஆனந்த மூர்த்தயே நம:
,, ஸர்வலோகசரண்யாய நம:
,, இஷ்டப்ரதாய நம: 20
,, வாக்விலாஸாய நம:
,, ஆத்ம ஸ்வரூபாய நம:
,, நந்தி தாகிலலோகாய நம
,, ஆத்மகுரவே நம:

ஓம் நாராயணரூபாய நம:
,, தர்மபோதகாய நம:
,, அபயப்ரதாய நம:
,, ஸச்சிதானந்த ரூபாய நம:
,, ஐச்வர்ய ப்ரதாய நம:
,, விசால புத்தயே நம: 30
,, அதிமானுஷ்யக்ருத்யாய நம:
,, நந்த கோப குமாரஸ்வரூபிணே நம:
,, அன்னதான ப்ரபவே நம:
,, நாம பாராயணுயவதே நம:
,, தாந்தாய நம:
,, ஆத்மஞானபோதகாய நம:
,, ஸத்வ ரூபிணே நம:
, ஈச்வரி ஸ்வரூபிணே நம:
,, விச்வ ப்ரேமபாத்ராய நம:
,, ஆசார்யாய நம: 40
, நேதிநேதி ச்ருத்யார்த்தி தாயினே நம:
,, அக்ஞான நாசகாய நம:
,, நாத ஸ்வரூபிணே நம:
,, தாரித்ரிய நாசகாய நம:
,, அத்வைதஸ்வரூபிணே நம:
,, ஸாமரஸ்யானுபவாய நம:
,, இத பாஷிணே நம:
,, விச்வநாதாய நம:
,, ஆனந்த ரூபாய நம:
,, நேதிநேதி தத்வ போதாய நம: 50

ஓம் அகிலப்ரியாய நம:
,, நாரத ஸ்வரூபிணே நம:
,, துக்க ஹராய நம:
,, அத்வை தபோதாய நம:
ஸ்வாமினே நம:
விவேக தாயினே நம:
ஆனந்த வர்த்தனாய நம:
நந்தகோ பாத்மஜ ப்ரியாய நம:
அகங்கார சேதனாய நம:
நமச்சிவாய நம: 60
தேவ தேவாய நம:
அஹங்கார வித்வம்ஸினே நம:
சாஸ்திரார்த்த ப்ரகடனாய நம:
ஹிதபோத பிரஸித்தாய நம:
விமலாத்மனே நம:
அப்பய்யகுலே ஜனித்ரயே நம:
நாமரூப விவர்ஜிதாய நம:
ஆத்மஞான ஸ்வரூபாய நம:
நவவித பக்தி போதகாய நம:
தீன ரக்ஷகாய நம: 70
அக்ஷய கிருபாநிதயே நம:
ஸூக்ஷ்மார்த்த தர்சினே நம:
இஷ்டப்ர தாயினே நம:
விசேஷ ஞானந்தாய நம:
அத்வைத மூர்த்தயே நம:
நாமோபதேசினே நம:

ஓம் ஆத்யந் தரஹித பரப்ரம்ம ஸ்வரூபிணே நம:

,, நாமபாராயண ப்ரியாய நம:
,, தர்மாகாராய நம:
,, ஆனந்தினே நம: 80
,, சிவஞான போதகாய நம:
ஈஸ்வர புத்ராய நம:
விப்ர ப்ரியாய நம:
ஆஸ்திகப்ரியாய நம:
நிர்மலானந்தாய நம:
அனந்த குணகம்பீராய நம:
நிர்மலபோதகாய நம:
தன்வந்த்ரி அவதாரயே நம:
அனுபூதிப்ரவசனாய நம:
ஸர்வலோக குரவே நம: 90
இஷ்ட ஸித்திதாய நம:
விமலாகாராய நம:
அமரநந்திதாய நம:
நித்யமஹோத்ஸவகர்த்ரே நம:
அபார புத்தயே நம:
நித்ய த்ருப்தாய நம:
தர்மப்ரஸித்தாய நம:
ஆத்ம ஜோதிஷே நம:
ஸுந்தராய நம:
இஷ்டப்ரியாய நம: 100
விச்வேச்வராய நம:

ஓம் அப்ரமேயாய நம:
,, நாஸ்திக்ய நாசகாய நம:
,, அகிலாண்ட பூஜிதாய நம:
நிரஹங்காராய நம:
தர்ம வேதஸே நம:
அபயதாய காய நம:
ஓம் சீலஸ்ரீ விராஜித சிவானந்த குரவே நம: 108

ஸ்ரீமத் சிவானந்த ஸத்குரு நவத்வாதச நாம அர்ச்சனாவளி

ஸம்பூர்ணம்
ஓம் தத் ஸத்

THE TANJORE MAHARAJAH SERFOGI'S SARASWATHI MAHAL LIBRARY + TANJORE +

குருவும் சிஷ்ய ஜெயராமனும்

## ஸ்ரீ பரமானந்தமும் ஸ்ரீ சிவானந்தமும்

ஆத்ம ஞானச் செல்வர்களே !

எப்படி கங்கா பிரவாஹமும், ஹிமாலயமும், ரிஷிகேச ஆனந்த குடீரத்தில் நம்மானிடர்கள் மனதைக் கவரும், அற்புத தோற்றமாய் விளங்குகின்றதோ, அப்படியே போல நமது சுவாமி பரமானந்தஜீயும், ஸத்குரு ஸ்ரீ சிவானந்தஜீயும் ஆவார்கள். நக்ஷத்திரங்களைக் காட்டி வானமண்டலத்தை எப்படி அறிகின்றேமோ அப்படியே பரமானந்தாவை முன்கொண்டு சிவானந்தாவை நாம் தெரிந்து கொள்ளுகிறேம். நீரில் சீதளமும், நெருப்பில் பிரகாசமும், உஷ்ணமும், எப்படியோ அப்படிப்போல் பரமானந்தமும், ஸ்ரீ சிவானந்தமும் பிரிக்க முடியாத இரு தோற்றமாக விளங்கி வருகிறது.

ஸ்ரீ சிவானந்தம் என்ற ஒரு திவ்விய அருள் குழந்தையைப் பெற்றெடுத்துக்கொண்டு வந்து நமக்கெல்லாம் கொடுத்தது யார் தெரியுமா? அது அந்தப் பரமானந்தமேயான தாயேதான் ஆகும். சிவமும், சக்தியும் பிரிவற்று விளங்குவது போலவும், காற்றும் மணமும் கலந்து எங்கும் பரவுவது போலவும் ஆனந்த குடீரமும் அதின் தெய்வமுமாகி விளங்குவது எது? அதுதான் பரமானந்தமும் ஸ்ரீ சிவானந்தமுமாகும்.

பரமானந்தாவைப் போன்ற தீரமும், தைரியமும், உற்சாகமும் தன்னலம் கருதாத உலக சாதக தொண்டும், உடல்நலம் பாராத உழைப்பும் உத்தமமான குருபக்தியும்' உண்மையான உருக்கமான தயாளத்வமும, ஆனல் கண்டிப்பும், கண்விழிப்பும் கொண்டு எடுத்த காரியத்தை கடைசி வயையில் விடாமுயற்சியுடன் செய்து முடிப்பவரும் பரமானந்தச்செல்வரே யாவர்.

ஸ்ரீ இராமரும், இலக்குமணரும் போல இவ்விடத்தில் இவர்கள் அன்பும், ஆதரிப்பும், தோற்றமும் பொருந்தியுள்ளது எனலாம். ஸ்ரீ இராமபிரானைப்போல் பொறுமை, அசைக்கமுடியாத சாந்தி நிறைந்த உள்ளம், கருணைக்கடல் போன்றுள்ளவர் ஸ்வாமி சிவானந்தஜீ மகராஜ் ஆவார்கள். ஸ்ரீ இளையபெருமாள் இலக்குமண சுவாமியைப் போல் தொண்டு செய்வதிலும் சரி, கோபப், படபடப்பு, அசகாய சூரத்தனமும், அன்புமிக்க சேவையும், அளவிடமுடியாத கம்பீரமும் கொண்டு சஞ்சரிக்கும் சிம்மம் போன்றவர் பரமானந்தஜீ அவர்கள் ஆவர்.

தாய்போல் இரக்கங்காட்டும் பரமானந்தாவும், தந்தைபோல் அன்பு காட்டும் சிவானந்தாவும், நாம் என்றும் மறக்கமுடியாத நம்நாட்டு மகோன்னத செல்வங்களாக விளங்கி வருகின்றார்கள். அன்று பஞ்சவடி தீரத்தில் ஸ்ரீ இலக்குமணசுவாமி பர்ணசாலையைக் கட்டி முடித்து, "அண்ணா வாருங்

கள். இதோ வந்து பாருங்கள்" என்றார். அப்போது ஸ்ரீ இராமச்சந்திர பிரபு அதை வந்து பார்த்ததும் "தம்பீ இது எங்கு கற்றனே" என்று அதிசயித்து கட்டித் தழுவிக் கொண்டார்கள் என்பார்கள். அதுபோல இன்று நம் ஆனந்த குடீரில சிவானந்தா ஆசிரமத்தில் இது காணக் கிடைக்கும் காட்சியாக இருக்கின்றது. அங்கு பசித்து வந்தவர்க்கு உண்டியும் போஜனசாலையும், நோயுற்றவர்க்கு வைத்தியமும், சிறுவர்களுக்கு படிக்கும் பள்ளிக்கூடமும், வசதிகளும், துக்கமுற்று வரும் ஞானியர்க்கு சுகபோதமும் ஆனந்த உபதேசமும் அளிக்கும் அதிசய நிர்மாணமும், கடவுள் வழிபாடும். கண்டவர் மனது ஆச்சரியப்பட்டு சந்தோஷிக்கத் தக்கதாக இருக்கின்றன.

ஆச்சிரமத்தில் ஒவ்வொரு சிஷ்யர்களும், சாதுக்களும், சாதகர்களும் இவ்விதமே பரமானந்தாவைப் போலவே குருபக்தியில் நீங்காத அன்பும், ஆதரவும் நிறைந்த உத்தம சிஷ்யர்களாக விளங்கி வருகிறார்கள். அவர்கள் நிரந்தரமான பக்தி வைராக்கியம் கொண்டு சேவை செய்துவரும் நித்தியானந்த செல்வர்களாவார்கள். பக்தி பண்ணிக் கொண்டு வந்தால் முக்தி பெறலாமே என்னும் பெரியோர் வாக்கியத்திற்கு இணங்க உத்தம வழிகாட்டியாகி விளங்கும் ஸ்ரீ சிவானந்த ஜோதியும் அவர் சிஷ்ய கோடிகளும், பக்தர்களும் நீடூழிவாழ்வார்களாக.

இப்படி விடாமுயற்சியும் ஆர்வமுமுள்ள பல பரமானந்தர்கள் தோன்ற வேண்டும். உலகின் விடுதலைக்கு பாடுபட முன் வரவும் வேண்டும். உன்னதமான "டிவைன் லைப் சொஸைட்டி' (DIVINE LIFE SOCIETY) யின் கொள்கைகள் ஒவ்வொரு ஊரிலும், டவுனிலும், ஒவ்வொரு வீடுகளிலும் நிறைந்து மக்கள் யாவரின் மனதையும் உள்ளத்தையும் சுத்தி செய்து மானிடர்களை தேவர்களாக்கி இத்துன்ப உலக வாழ்வைத் தூய ஸ்வர்க்கலோக போகமாக்கி அனைத்துயிர்க்கும் நாம் அன்பு செய்வோம் என்று திடமாயும் உலக முற்றிலும் வாசுதேவ குடும்பம் என்னும் பேரானந்த நிலைப் பெற்றுய்ய எங்கும் நிறைபொருளைப் போற்றுவோமாக.

ஸ்ரீ இராமர் இருக்குமிடம் அயோத்தி என்பது போல சிவானந்தா குரு அவர்கள் இருக்குமிடம் அவர் பாதத்தை ஸ்தோத்தரித்து கீர்த்திக்கும் இடமும் ஸ்ரீ கைலாசம் வைகுண்டம் என்பது நிச்சயம்; அவர் அடிமலரை நினைப்பதே மோக்ஷம், அவர் புஸ்தகங்களைப் படிப்பதே வேதசாஸ்திர விசாரம்; உபதேசப்படி நடப்பதுதான் ஜீவன் முக்திக்குச் சுலபமான வழி:

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

மீனாக்ஷி

6-9-1954

# இரண்டாம் பாகம்

1

துலையா நரக படுகுழி வீழ துணிந்தனர் அன்றோ

ராகம்: பந்துவராளி தாளம்: ஆதி

பல்லவி

பரிபூரணனே பார்த்த சாரதே உந்தன்
பாதமலர் மது உண்டேன் மனமகிழ்வு கொண்
டேன் (பரி)

அநுபல்லவி

கருணாகரனே கௌரி சோதரனே உன்
கரமதில் சங்கு சக்ராயுதமும் கண்டேன் (பரி)

சரணம்.

1 மலர் மகள் உறை மார்பும் மதிமுகமும் புஜமும்
சதிசெயும் அரக்கர் வேரறுக்கும் கதையும்
வில்லும்
தரித்து பூமியின் பாரம் இறக்க அவதரித்த
பிறப்பிலுயர்ந்த உன்னை கடற்கரை கருகினில்
(பரி)

2 திருடனே உனைநான் திரும்பவும் கண்டேன்
திடமுடன் உனை நெஞ்சில் நிலைநிறுத்த முயன்
றேன்
விடுதலை செய்வதே வல்லி மணாளனே
நெடிய திருவல்லிக் கேணிக்கலங் க்ருதனே
(பரி)

2

ராகம்: பிலஹரி                                        தாளம் ஆதி

கனுகொண்டினி என்ற மெட்டு

பல்லவி

புருஷோத்தமா பூர்ணஹரே     ஸ்ரீ

அநுபல்லவி

பொற்கிரணம் கொண்டு அற்பவிருள் நீக்கி
மெய்ப் பொருளுக்குள்ளே மேன்மை யுற்றதேவா
(புரு)

சரணம்.

க்ஷணத்திற் தஹித்தும், செழித்துத்தழைத்தும்
மனத்தை வஹித்தும் மதியை அளிப்பாய்
கிழக்கில் உதித்து கீர்த்தியை அளிக்கும்
மூர்த்தியை ஸ்மரித்தால் நேத்ரானந்தமாகும்
(புருஷோத்தமா)

3

ராகம்: ஆரபி                                        தாளம்: ஆதி

பல்லவி

பாலன் திருமுகனை பணிந்திடு
பரிவாய் விரைவாய் பார்வதி அருளிய.

அநுபல்லவி

மூலப்பொருளைப் பிரித்துரைத்த மூவிரு முகன்
தாளை அடைந்து வினையான பவம் கடக்க
(பாலன்)

சரணம்.

காமன் தனைப்பழித்த சோமஸமானனை
காமியவள் வெள்ளி தெய்வானை சமேதனை
பாவலர் துதிபுரி பங்கஜ நயனனை
ச்யாமள வருணனின் தன்பிரிய மருகனை (பாலன்)

4

ராகம்: உசேனி தாளம்: ரூபகம்

ரகுவீர ரணதீர என்ற மெட்டு

பல்லவி

பூர்ண சந்த்ர நிபானனும்புஜ
பாத பங்கஜமே கதி கதி (பூர்ண)

அநுபல்லவி

தவ யோகியர்க்கே ஆதாரம்
தச அவதாரம் கம்பீரம் (பூர்ண)

சரணம்.

சங்கு சக்ர சதுர்புஜம் திவ்ய
சாருஹாஸ பிர்ந்தா தரம்
குங்கு மாங்கித கௌரீசோதரம்
எங்கும் வியாபித ஈச பூஜிதம் (பூர்ண)

5

ராகம்: கமாஸ் தாளம்: ஆதி

சீதாபதே என்ற மெட்டு

பல்லவி

கருணாகரா கம்ஸாந்தகா

மங்களஸ்வரூபா-மதுஸூதன ஹே (கருணா)

அனுபல்லவி

பவரோஹ அவுஷத பங்கஜாக்ஷா
பாமைலோலா பதித பாவன (கருணா)

சரணம்.

முஷ்டி காசுரமல்வஜாணூரநாச
மோக சோகநாசா முக்தி தாரும்ஈசா
சரணாகதி ஸர்வலோக பதி
தயை நீபுரி சங்கு சக்ரதாரி (கருணா)

6

ராகம்: காவேரி தாளம்: சாபு

எத்தனை சொன்னாலும்—மெட்டு

பல்லவி

தேடிக்கிடைக்காத தெய்வம் இவன் என்று
ஓடிப் பணியுவோம் வாடி சகி (தேடி)

அனுபல்லவி

கரத்ருசிரன் தூஷணனையும் வென்று
கபந்தனுடன் விராதனையும் கொன்று
காட்டில் சபரியின் எச்சிலை யுண்டுகரத்தில்
வீர கோதண்ட ராமனை (தேடி)

சரணம்.

சொல் ஒன்று வில் ஒன்று சுகித்திடும் பெண்டிர் ஒன்று
சுந்திர முகச் சேர்வை சுகிர்தம் எப்போதும் ஒன்று

ஈரேழும் வனம் சென்ற ஈடில்லாப் புகழ் ஒன்று
இராவணனை வதைத்து எழுந்தருளினர் அன்று
மூல பல சூரர்களைக் கொண்டு-மும்மூர்த்தி ரூபன்
இவனே என்று
பிர்மாதிகள்சுரர் போற்ற நின்று நிலைநாட்டினர்
தர்மம் உலகினில் என்று (தேடி)

7

நாதபிந்துகலாதி நமோ நமோ— மெட்டு
தாளம்: ஆதி

1 கோகுல நந்த குமாரா நமோ நமோ
கோபியர் ஹ்ருதய ஸஞ்சாரா நமோ நமோ
குன்றை குடைபிடித்த கோவே நமோ நமோ
குறை தீராய்.......எங்கள்

2 சுகந்த புஷ்ப துளஸீதரா நமோ
ஜோதி உள்ளுருவானய் நமோ நமோ
சசதம்யமுனை ஜலக்ரீடா நமோ
ஸர்வேசா——

3 எவ்வுயிர்க்கும் நிறைந்தானய் நமோ நமோ
இடுக்கண் களைந்திடும் இன்பா நமோ நமோ
படித்துபஜரிக்கலாமா பராத்பரா
பவநாசா——

4 நன்மை தீமையும் நீயானய் நமோ நமோ
நரக ஸ்வர்க்கங்களும் உண்டோ நமோ நமோ
நாடி சபையிலவள் கண்ணு கண்ணு என்று
நவின்றுள் ஓர்........

5 பாதி பஞ்சவருக்கானுள் உரைத்திட

ஓதி உன் அக்ஷயமாய் துகில் அளித்திட
கேசம் முடித்திட செய்தாய் க்ருபாகரா
ஜயசீலா........ (கோகுல)

8

ராகம்: தோடி
கருடன் மேலேறி இத்தருணம் வருவாய்—மெட்டு

பல்லவி

பொறுமை தா கண்ணு! கண்ணு!!
என்றும் உன் பெருமையைப் புகல நீ (பொறுமை)

அனுபல்லவி.

கருணையால் என் மனத்துள் நின்று
கஷ்டசுகம் அனைத்தும் வென்று (பொறுமை)

சரணம்.

1 சிந்தை நொந்து தீனன் ஆனேன்
சந்ததம் உன் தாஸியானேன்
சிஷ்டபரி பாலனனே சினம் வந்தணுகிடாமல்
(பொறுமை)

2 பாபம் என்ற பொருளைக்கூட்டும்
பக்ஷபாதம் தனையும் ஊட்டும்
கஷ்டத்திற் புக கைகாட்டும்
கருணை புறமோட்டும் வாட்டும் (பொறுமை)

3 சோதனை செய்யாதே இன்பா
துஷ்டன் நானும் கண்பார்
அஷ்டாக்ஷரம் தன்னை நானறியேன்
அமைதியடைய ஆவலுடையேன் (பொறுமை)

9

## ஸ்ரீ ஆசார்யாள் ஓடம்

ஆதிகுரு பாதமலர் அண்டியவர் கேதுபயம்
சங்கரரே சங்கரரே ஸத்குருவாய் வந்தவரே
முடுகு

1 கைலாஸ நாதரே கலியுகம் தன்னில்
காலடி எனும் ஊரில் அவதாரம் செய்து
2 ஈராறு வயதினில் சுன்யாஸம் கொண்டு
இவ்வுலகினர் தம்மை ஈடேற்ற வென்று
3 கனிவுடன் அன்னைக்காய் கங்கையை அழைத்து
கர்த்தவ்ய மார்க்கத்தை மனிதர்க் குரைத்து
4 கன்னியா குமரிமுதல் ஹிமயம்வரையுள்ள
கணக்கற்ற மதங்களைக் கண்டனம் செய்து
5 அனைத்தும் ஒவ்வொரு வழியே ஆகுமானாலும்
அத்வைத மார்க்கமே அதன் வாசலென்று
6 நித்தியானந்தமே நிலையுள்ளதென்று
நீடித்து நின்றிட மார்க்கம் புகன்று
7 பங்கயத்தாள் ஸரஸவாணி முன்நின்று
மண்டன மிச்ரரை வாதினில் வென்று
8 சிஷ்யர்களுக்கு அருள் ஒளியை நேர்காட்டி
சிவலோகம் தான் சென்று திரும்பியே ஐந்து
9 அற்புத லிங்கங்கள் அவரே கொணர்ந்து
அடியவர்க்காய் உலகில் ஸ்தாபனம் செய்து
10 மாயமயக்கம் தன்னை மனம் அண்டிடாமல்

தூய சன்மார்க்கமது துலங்கிட செய்து
11 இரண்டற்ற அத்வைத மார்க்கத்தை நாமும்
இலேசாய் அனுஷ்டிக்க எடுத்தோதி நின்றார்
12 தர்மம் எனும் வித்து சகலர் ஹ்ருதயத்தும்
தழைத்தோங்கிடும் படிக்கு உபன்யாசம்
செய்து
13 சந்திர மௌலீஸ்வரரை ஸ்தாபனம் செய்து
சாரதா தேவியே பிரத்யக்ஷமென்று
14 முப்பதும் இரண்டும் ஓர் ஆண்டுக்குள்ளாக
மூலபரஞ்சோதியோடு முக் கண்ணன் மறைந்
தார்

ஏலேலோ சிவஞான சம்போ
ஏலேலோ சங்கர குருவே
ஏலேலோ ஜகத்குருவே என்றும்
என்னை ஈடேற்றும் ஐயா.

10

ராகம்: கமாஸ்

சுஜன ஜீவன— மெட்டு

பல்லவி

கருட வாகன (கண்ண) கேசிநாசன

அநுபல்லவி

தயைபுரி கண்ணால் தான் பாராய் இன்னாள்
சங்கு சக்ர கதாதரா நீ இத்தருணம் வாமன்ன!
கண்ண (க)

சரணம்.

பாவலர் பூமாலைசாற்றி பணியும் பூரண
பத்ம பொற்பாதம் தருக பரிந்து வாமுன்னல்
சருமம் போர்த்த இச்ஜடசரீரமே தான்
மறைந்திடு மாகிலும் தன்னை தனியே நாண்கி
லேன் கண்ணு (கருடவாகனு)

11

அலங்காரம் அலங்காரம்—மெட்டு

பல்லவி

நீவா வா வா வா வா வா வடிவேல் முருகையா (நீ)

அனுபல்லவி

பச்சை மயில் ஏறி வெகு பக்ஷமுடன் இக்ஷணம்நீ
(வா வா)

சரணம்.

1 அன்று அசுரர் படைகள் அலறிவிழச் செய்த
வனே
குன்றுகளில் நின்று பக்தர் கொடியவினை
தீர்த்தவனே
2 என்றுமுந்தன் அடியவரை ஈடேற்றுவாய்
குஹனே
பண்டு வினைதனை யகற்றி பாதமருள் ஷண்
முகனே
3 செப்பிடவோ யான் அறியேன் மெய்ப்
பொருள்நீ என்றறிவேன்

திக்கு உன்னையன்றி இனி சத்குருவே யானறி
யேன் (வாவா)

12

ராகம்: அசாவேரி தாளம்: சாபு

சரணம் ரகுராமா—மெட்டு

பல்லவி

சத்குருவே அபயம் தந்து தாஸன்
எந்தனை அழையும் ஸ்ரீ குரு (சத்குரு)

அனுபல்லவி

பக்குவமில்லாத பாலகனும் என்னை
பட்சமுடன் காரும் தக்ஷிணமூர்த்தியான (சத்குரு)

சரணம்.

1 தானெனும் ஆணவமான மதில் தன்னை
தகர்ந்துலாவுவது நாம் எப்போது?
நான்எனும் மாய்கையை போய்விட விடை
தந்து
நீயே நானுவது எப்போது? ஸ்வாமி (சத்குரு)

2 வன்சொலும் இன்சொல்லும் வாழ்வதும்
தாழ்வதும்
வாராமல் இருப்பதெப்போது?
காமமும் மோகமும் தாபமும் தீர்ந்து தான்
நாமாய் இருப்பதும் எப்போது? (சத்குரு)

3 பந்தமதணுகாத சிந்தையினல் உன்னை
வந்தடைவது தான் எப்போது?

சந்ததமும் உந்தன் விந்தையை தியானித்து
சிந்தை களித்திருப்ப தெப்போது? (சத்குரு)

4 கூட்டினில் அடைபட்ட குருவிதனக்கு
முக்தி காட்டி யழைப்ப தெப்போது?
காட்டினில் திசைகெட்ட கன்னிகையை உந்தன்
வீட்டினில் சேர்ப்பது எப்போது? (சத்குரு)

5 பட்டியில் அடைபட்ட பசுவிற்கு பணம் கட்டி
பார்த்து வந்தழைப்பதும் எப்போது?
சிரேஷ்டமாம் உன்பாத கூட்டிற்குள் நிவஸித்து
தீக்ஷை பெறுவ தெப்போது? (சத்குரு)

6 கைவிலங்கை தெறித்து கைதியை விடுவித்து
கார்த்தருள் செய்வது எப்போது?
காயத்தில் இடர்படும் கண்ணற்ற ஆத்மாவிற்கு
கை கொடுத்தழைப்பாய் நீ எப்போது (சத்குரு)

13

ராகம்: தாளம்: ஆதி

மருகேலரா ஓராகவா—மெட்டு

பல்லவி

வடிவேல் குஹா வள்ளிநாயகா (ஹேவடி)

அனுபல்லவி

குருவே அபயம் குறைதீர் இன்னேரம்
அடிமை அடிமை ஹரஹர குஹா (ஹேவடி.)

சரணம்.

1 கருணும் ருகத்திற் குடையாய் சரணம்
கௌரீ பாலவேலா மௌனியோ நீ கூறாய் (வடி)
2 பலகாலம் பாடி பாபியான் தான்தேடி
கூவியே அழைத்தும் கோபமோ என்மேல்
(வடி)

14

ராகம்: சங்கராபரணம் தாளம்: சாபு

நேராகவந்தவர் யார் சகி—மெட்டு

பல்லவி

ஸஞ்சலம் ஏன் கொள்வாய் நெஞ்சே
ஸ்ரீ சரவணபவன் நிற்க— (சஞ்சலம்)

அனுபல்லவி

கஞ்சதள நயனன் கந்தன் துணை இருக்க
உந்தன் வினைகள் ஓடி ஒளியாதோ அறிவாய் நீ
(சஞ்சலம்)

சரணம்.

கெஞ்சியே அமரர்கள் தஞ்சம் அடைந்தார் அந்த
சஞ்ஜலாக்ஷியாள் ஸுதன் தன்னை மறந்தாய்
போனும்
பஞ்சாய் பறக்கடிப்பான் பாபத்தை பாலன்
வேலன்
சூலத்தையும் நினைந்தோர்க் காபத்தென்பது
முண்டோ (சஞ்சலம்)

## அடியேன் தரிசித்த ஆனந்த குடீர் தெய்வம்

அன்பு நிறைந்து அவதாரமாகி வந்த நம் சுவாமி ஸ்ரீ சிவானந்தாஜீ அவர்கள் திருப்பாதங்களுக்கும் ஆனந்த குடீர் சாதுக்கள், சன்யாஸிகள் தொண்டர்கள், யாவருக்கும் எனது நமஸ்காரங்கள்.

H. H. ஸ்ரீ சிவானந்த குருமகராஜ் அவர்களையும் அவர்கள் விடுத்துள்ள நல்உரைகளையும் பற்றி அறியாத மாந்தர்கள் உலகில் ஒருவரும் இல்லையென்பது திண்ணம். அவர் ஞான ஆகாயத்தினின்றும் "திவ்ய ஜீவியம்" என்ற சூரியனைத் தோன்றி பக்தி, ஞானம், யோகம், வேதாந்தம் எனும் கிரணங்களை ஆபால கோபாலர்க்கும் தெளிவாக புரியும்படி எளிய நடையில் அரிய வஸ்துவை போதிக்கும் திவ்ய ஜோதிஸ்வரூபன் ஆவார். ஆதலால் நம் ஸ்வாமிஜீயின் ப்ரபாவங்களைப்பற்றி நான் உங்களிடம் சொல்ல வந்தால் அது ஒன்றும் அறியாத சிறு குழந்தை ஆகாயத்தைப் பற்றியும், நக்ஷத்திர மண்டலங்களைப் பற்றியும் விஞ்ஞானியான ஸர். சி. வி. ராமன் போன்ற பெரியாரிடம் சொல்ல வந்தது போல் ஆகும். ஆதலால் நீங்கள் சுவாமிஜீயின் உன்னதத் திருத் தொண்டைப்பற்றியும் அன்னாரின் அருள் க்ருபையின் விசேஷத்தைப் பற்றியும் அடியேனுக்கு சொல்லவேண்டுமாக கேட்டுக்கொள்கிறேன்.

நீங்கள் யாவரும் சில ஸ்ரீ சிவானந்த குருமகராஜ் அவர்களின் மகிமையையும், பேரன்பையும் ஒவ்வொருவரும் எந்த திவ்ய சக்தியினால் கவரப்பட்டு எப்படி வந்து இந்த சிவஜ்ஜோதியை அடைந்தீர்கள் அந்த பெரும் பாக்கியம்பெற்ற ஆச்ரம வாஸிகளாகிய உங்கள் அனுபவங்களேயும் அந்தரங்கமான அன்பையும் நீங்கள் கண்டு களித்த ஸ்ரீ சிவானந்த தேன் சுவையையும் பற்றி அடியேனுக்கு கூறவேண்டுமென்பதுதான் எனது அரிய பெரிய ஆவலாகும்.

ஸ்ரீ கண்ணபிரான் ஒருவனேதான். ஆனல் அவனேக்கண்டு ஆனந்தித்தவர்கள் கோபியர்கள், பக்தர்கள், முக்தர்கள், ஞானியர்கள், யோகியர்கள், சிநேகிதர்கள், ஆகியோர் பலர் பலவித வடிவில் கண்டு அனுபவித்தார்கள் அல்லவா. அப்படியே போல நமது சத்குருதேவர் மகிமை அளவிட ஒண்ணுதது. ஆழம் காணமுடியாதது. பார்க்க சலிக்காதது. அது பக்தர்களால் சூழப்பட்டு ஆனந்த குடீர் என்னும் கங்காநதிக் கரையில் மலர்ந்து அருள் பூத்து "திவ்விய ஜீவியம்" என்ற நறுமணத்தை உலகமெங்கும் பரவச்செய்துகொண்டு நித்தியோத்சவ காக்ஷியாக இதோ இன்று விளங்கி வருகிறது.

ஆனந்த குடீர் தெய்வம் வாழ்க! அருட்பெருஞ் ஜோதி வாழ்க! சிறியேன் நான் ஓர் ஏழை. கர்நாடகத்துப்பெண். எனது வாழ்க்கை ஓர் பாலே

வனம் போன்றது. உயர்தரக் கல்வியோ, அறிவோ, இதற்கொன்றுமே இல்லை. உணர்விலும் சிறியேன். உருவிலும் சிறியேன். மருவிய உலக வாழ்விலும் சிறியேன் என்றபடி இந்தச் சிட்டுக் குருவி 2-2-1938, புதன் கிழமை இதேயிடத்தில் நமது பரமஹம்ஸ ஸ்வாமி சிவானந்தஜீ அவர்கள் பாத கமலங்களில் பறந்துவந்து விழுந்தது. அது தான் இதற்குத் தெரியும். கொடுத்தார் அபயம். விடுத்தார் பவபயம். அருள் கொண்டு ரக்ஷித்தார் நம் ஸ்வாமிஜீ. அன்றுமுதல் இன்றுவரையில் அடியேன் கண்ட அதிசய சக்திகள் பற்பலவாகும். அப்பரும், அப்பூதியடிகளும், போல எமது இல்லத்தில் என் தமையனார் குழந்தை ஒன்றுக்கே "ஸ்வாமி" என்று பெயரிட்டு அழைத்துவருவதில் எங்களுக்கு ஓர் பிரும்மானந்தம். வீட்டில் குழந்தைகளும் கூடி தினசரி "நம் ஸ்வாமிஜீ, நம்ஸ்வாமிஜீ" என்று பேசி மகிழ்வார்கள். நமது குருமகராஜ் அவர்கள் புத்தகங்கள் மூலம் செய்யும் ஸாதனைகளும், போதனைகளும், அயல்நாடுகட்கும் பரவி அனைவர் மனத்தையும் பரவசப்படுத்தும் வைபவம் கண்கொள்ளாக் காட்சியாகி விளங்குகிறது. அன்று துவாபரயுகத்தில் ஸ்ரீ கண்ணபிரான் கையில் குழல் எடுத்தூதி, சமஸ்த்த ஜீவராசிகளையும் நாதத்வனியில் மயங்கவைத்து, மாயை நீக்கி எப்படி ரக்ஷித்தானோ அதேபோல் இக்கலியுகத்தில் இதோ நமது சிவானந்தஜீ அவர்கள் கையில்

பேனவென்னும் (PEN) குழல் எடுத்து நிற்கின்றார். பிரணவ கீதத்தை ஊட்டி, நாமம், ஜபம், சங்கீர்த்தனம், என்னும், ஸ்ருதியைக் கூட்டி, பக்தி, யோகம், ஞானம், வேதாந்தம், என்ற கவிதைகளை அளவிறந்த தூரதேசங்களுக்கும் அள்ளி, அள்ளி, வீசுகின்றார். அவர் பாபாத்மாக்களும், பாமரர்களுமாகி நவநாகரீகமென்னும் சேற்றில் அமிழ்ந்து உண்மைக்கண்களை இழந்தவர்களும், குழந்தைகளுமான, நம் அனைவர்க்கும் ஆனந்தக் கண்ணனாகி விளங்குகின்றார் சிவானந்தப்பிரபு. பிரணவம் என்ற சங்கை எடுத்தூதி, "ஓடிவாருங்கள்," ஓடிவாருங்கள்," என்று நம்மை அழைத்து, அழாதீர்கள் என்று அபயம் அளிக்கின்றார். மழலைமாறாச் சிறு குழந்தையாயினும் சரி, மனோநிக்ரகம் செய்த யோகியர்க்கும் சரி, மனதில்படும்படி நயம்பட உபதேசங்களை கட்டுரைகள் மூலம் அவர் எழுதும் சுவையே சுவை. அவை தனிச்சிறப்புற்றவை.

"கலியுகக்கண்ணனாகிவந்த கடவுளே போற்றி, போற்றி, உன்னையும் அறியாமாந்தர் உலகினில் விலங்கை யொப்பர்," அரிது ,அரிது, மானிடராய்ப் பிறப்பது அரிது என ஔவைப் பிராட்டி அருளினள். "மாதா நாஸ்தி, பிதா நாஸ்தி," "தஸ்மாத் ஜாக்ரதா, ஜாக்ரதா," என்று ஞானவெட்டியார் பறை சாற்றினர். "பஜகோவிந்தம், பஜகோவிந்தம்," என்று ஸ்ரீமத் சங்கர பகவத்பாதாள் சொல்லிப் போனர்கள். "கீதாகங்கர

கயத்ரீ கோவிந்தேதி சதுர்பதம்," என்று வியாசர் எழுதினர். "அனன்யாச் சிந்தயந்தோமாம்," என்று ஸ்ரீ கண்ணன் கீதையில் பாடினர். பசுக்கள் பறநிறம், பால் ஒரே நிறம் என்று உபநிஷத் கோஷித்தது. பாத்திரங்கள் பலவிதமாயிருப்பினும் அதனுள்ளிருக்கும் பாலுக்கு ஒரேவித சுவை தான் உண்டன்றோ! என பரமார்த்தம் புகன்றது. படர்ந்த வேதாந்தமென்னும் பாற்கடல் என்று கைவல்யம் கதறிச் சொல்லிற்று. இதோ இதைச் செய்யாமல் போனல் விழுவாய் நீ நரகில் என்று வேதங்கள் பயமுறுத்திக் கண்டித்தது. தேசங்களை எல்லாம் தனது அங்கமாய்க் கொண்ட "ஞானம்," என்னும் பசுவிற்கு (பால் கரக்கும்) சுரக்கும் மடி இந்த நமது பாரததேசமான இந்தியாவே, என்று நமது மகாத்மா காந்தியடிகள் சொல்லுவார். இருந்தும் என்ன! கண்டதே காட்சி, கொண்டதே கோலம் என நாஸ்திகம் மலிந்து வரும் இந்தவநாகரீக உலகத்தில் நால்வர் என்றால் யாருக்குத் தெரியும்? பக்தி என்றால் படி என்ன விலை? பணமே தெய்வம். போகமே மோக்ஷம், ஏழைக்கிவ்வுலகமில்லை. வாழ்க்கையே வைகுண்டம். சுகபோகங்களே பிறவிப்பயன் எனக்கருதும் இந்த இரும்புஉலகில் நெருக்கடியான இப்பஞ்சகாலத்தில் யுத்தம் பிடித்தலையும், கோலாஹலத்தில் மனிதர்கள் உணவை மனிதர்கள் பறிக்கும் வாழ்வு மலிந்திருக்கும் இச்சமயத்தில் நமது ஸ்வாமிஜி அவர்கள் தோன்றி நம்

மைக் காப்பாற்ற முன் வந்தார். அவர் அளித்து வரும் உபதேச மணிகளும், முத்துக்களும், கருணையும், கஜேந்திரனைக் காக்கவந்த ஆதிமூலத்தின் ரக்ஷிப்பையும் கடந் சிறப்புற்றது என்றேசொல்லலாம்.

அக்காலத்தில் கஜேந்திராழ்வானை ஒருமுதலை தான் பற்றி இழுத்தது. இக்காலத்திலோ ஆசா, பாசம், காலதேச வர்த்தமானம், என்ற பல முதலைகள் பற்றிக் கல்வி நம் மனித சமூகத்தையே விழுங்குகின்றன. நாம் ஆதிமூலமே என கூவியழைக்கவும், அறியவில்லையே. இப்படியான நெருக்கடி சமயத்தில் வாருங்கள் என்று கூவி வலிய அழைத்து உபதேசித்து வாயில்படி தேடி பத்திரிகைகள், கடிதங்கள் கொண்டளித்து, ஆனந்தம் அனைவர்க்கும் கொண்டளித்து, நீ சாகாய் பிறவாய், சஞ்சலப்படவேண்டாம் என்று கனிவுடன் உனக்கும் கண்ணன் இம்மண்ணில் திருநெல்வேலி ஜில்லாவில், பத்தமடை என்னும் க்ஷேத்திரத்தில் வந்துதித்தான். பாக்கியம் பெற்ற ஹிமாலய சிகரத்தில் ஏறிப் பிரகாசித்து நின்று பேனாவைக் குழலாகக் கொண்டு ஞானனந்த கீதமாரியைப் பொழிகின்றார், பிரபு சிவானந்த குருநாதர். எழுந்திருங்கள்! விழித்து எழுந்திருங்கள்!! என்று மொழிகின்றார். சுவாமி பரமானந்தமோ சிம்மகர்ஜனை கர்ஜிக்கிறது. சுவாமி சிதானந்தம் மூலபல சேனையை முடிக்க ஊன்றிய கால் ஊன்றியபடி நின்று

கோதண்டம் பிடித்து சரமாரி பெய்த ஸ்ரீ ராமச் சந்திரப்பிரபுவைப் போல் அஞ்சாமல் நின்று ஆஸ்திகத்தையும், தெய்வீகத்தையும், திக்கு எங்கும் பரவச் செய்து அதிசயச் செயல்களை ஆற்றி வருகின்றார். மற்றொரு குழந்தை வெங்கடேசானந்தம் ஸ்ரீ முருகனைப் போல் சிவாவின் சமீபம் வசித்து திவ்யத்திருவாகி விளங்கி வருகின்றது.

ஸ்ரீ வியாசரோ, சுகரோ என்னும்படி சதானந்தா ஜீயும் கிருஷ்ணனந்தக் கடலும் பொங்குகின்றனர். டாக்டர். K. C. ராய் அவர்களின் தன்னலமற்ற தொண்டு பத்து திசைக்கும் சென்று பரவிப் பிரகாசிக்கின்றது. கங்காதீரத்தில் மங்களமான ஆனந்த குடீரத்தில் தங்கி இளைப்பாற யாருக்குத்தான் ஆவல் இருக்காது. அன்பர்கள், தொண்டர்கள், யாவரும் வாருங்கள், வாருங்களென அன்பு கொண்டு அழைக்கும் வினயமும், செய்யும் உபசாரமும் ஒரு கல்யாண வீட்டில்கூட இக்காலத்தில் ஒரு நாளைக்குக்கூட காண முடியாது.

இந்த க்ஷேத்ரம் எம்பெருமான் ஸ்ரீ விஸ்வநாதரும் ஜெகன் மாதா அன்னபூர்ண தேவியாரும் கூடி வீற்றிருக்கும் நித்ய கல்யாண கூடமாகியும் விஸ்வக் குடும்பமாகவும், விளங்குகின்றது.

அங்கே குறைவற்று வயிற்றுக்கு உபசரித்து உணவளிப்பும், திரும்பினல் செவிக்கு உணவான திவ்ய நாமகீர்த்தனையும் மனதிற்கு சந்தோஷமும்,

ஆத்மாவிற்கு சாந்தியும், அளித்து உடலையும், உள்ளத்தையும், புனிதமாக்கும் சுத்த கங்கா தரிசனம். நிமிர்ந்து நோக்கின் நீலக்கடல் போன்ற வான் குன்றில் ஸ்ரீ முரளீ மோஹனன் திவ்யமங்கள சுப வடிவினன் நின்று கையில் குழலும் மெய்யில் வைஜயந்தி வனமாலையும், ஆடிஅசையா நிற்கின்ருன். மேலும் பொய்யையும், திருட்டையும், விட்டு விட்டு, என் ஐயன் சிவானந்தப் பிரபுவின் ஆணையை இதோ நிறைவேற்றுகிறேன் என்பது போல் ஸ்ரீ கண்ணபிரான் ஒரு காலூன்றி ஒய்யாரமாய் நிற்கும் உன்னதக்காட்சி அதிமனேரம்யமானது. ஓ! ஜகன்மோகனக் கண்ணா!! உன் அருளால் பொங்கும் மங்களம் எங்கும் தங்குக! எங்கள் சத்குருநாதர் வாழ்க!! திவ்ய ஞான செஞ்சுடர் வாழ்க!! ஆனந்தக் குடீரத்து ஆதவன் வாழ்க!! நீ கிருபை செய்வாயாக.

இன்று தினம் ஸ்வாமிஜி அவர்கள் பிறந்த தினம். ஸ்ரீஜயந்தி, சங்கரஜயந்தி, என்பதுபோல், சிவானந்த ஜயந்தி என்ற வைபவம் பக்தர்களால் கொண்டாடப்படுகிறது. ஆனந்தக் குடீரத்தில் அடியேனது புண்ணிய வசத்தினுல் இன்று இங்கு அன்பர்களோடு கூடியிருந்து அனுபவிக்கும் பாக்கியம் பெற்றேன். தன்யனுனேன். குருநாதரின் கிருபையினுல் குழந்தையான நானும், சில நிமிடங்கள் என்மனதில் தோன்றியதைக் கூற அவகாசமளித பெரியோர்களுக்கும், மற்றுமுள்ளோர்க்கும்

என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

நம் அனைவரது துக்க இருளைத் துரத்தியோட்டி ரக்ஷிக்க அவதரித்த நம் சத்குரு நாதர் பாதங்களில் நீங்கா பக்தியை என்றும் கடவுள் நமக்கு அளிப்பாராக.

ஜெய் ஸத்குரு சிவானந்த மகராஜீகி!!!

ஓம்

ஸ்ரீ ஸத்குரவே நம:

## குருவும் சிஷ்யனும்

முன்னுரை:—குரு மகராஜ் குரு ஜெய் ஜெய்
பரப்ரும்ம சத்குரு ஜெய் ஜெய்
குரு மகராஜ் குரு ஜெய் ஜெய் சிவானந்த ஸத் குரு ஜெய் ஜெய்

குரு என்றால் அஞ்ஞானத்தை மாற்றி, துன்பத்தை நீக்கி இன்பத்தை நமக்களிப்பவர் என்று பொருள். அரிதரிது மானிடராதல் அரிது என்பது நமது ஔவைப் பெருமாட்டியின் வாக்கன்றோ! மனிதர்களுக்குத்தான் விசாரித்து துக்க சுகத்தைப் பிரித்தறியும் அறிவும், விடுதலை பெற மார்க்கமும், குருவும், மோட்சமும் கிடைக்க ஏதுவும் இருக்கின்றது.

பெண் விழைவு, பசி, தாகம், நித்திரை இவை மூன்றும் எவ்வுயிர்க்கும் இயல்பான பொதுவான விஷயம். மானிடராய் விசேஷ அறிவுச் செல்வத்தைப் பெற்றுள்ள நாம் இவைகளையே சுகபோக வாழ்வாய்க் கருதலாமா? இதிலிருந்து விடுதலை பெற்றுய்ய வேண்டுமானால் ஓர் சத்குரு நமக்கு அவசியம் வேண்டும். குருவின் பெருமையை நாம் உணரவேண்டும். குருவின் தரிசனம் கிடைக்க கோடிஜன்மத்தின் புண்ணியம் இருக்கவேண்டும். குரு வேறு, தெய்வம் வேறு அல்ல. குருமுக

மாகவேதான் கடவுள் தோன்றி நம்மைக் கரை யேற்றிக் காப்பாற்றி விடுகின்றார்.

உலகில் உள்ள எல்லாவகை அன்பும், பிரியமும் நம்பிக்கையும், தெய்வபக்தியும் ஒருங்கேகூடிப் பழுத்த பக்குவநிலைதான் குருபக்தியாகின்றது. குருவின் ப்ரபாவம் எப்படிப்பட்டதென்றால் அது அதிசய சக்திவாய்ந்த திவ்ய அருள் ஒளியாகும். அது மூன்று விதம் என்பர். உத்தம குலத்தில் பிறந்து, உத்தம மார்க்கத்தில் நின்று உத்தம உபதேசம் செய்யும் ப்ரபுவான ஸத்குருவின் தரிசன மாத்திரமே பேரானந்தம் கிட்டும் என்பது(1) அவரது ஸ்பரிசம் மாத்திரம் என்பது (2) நினைத்தவுடன் குறைநீங்கல் என்பது (சிந்தனம்) (3) ஆக மூவகைப்படும்.

தரிசனம் ஆவது கோடை வெயிலில் அடிசுடு மணலில் அகப்பட்ட ஓர் சிறு புழுவைப்போல சம்சார சாகரத்தில் துடிதுடித்து மனம்வருந்தி உலக துன்பங்கள் எனும் வனத்தில் பலகாலம் காமாதி தாபத்ரயத்தில் சுற்றிச் சுற்றிச் சோர்ந்து இதிலிருந்து விடுதலை உண்டா? கிடைக்குமா? யார் கொடுப்பார்? கட்டாயம் விடுதலை தேடவேண்டும் என்னும் தீவிர வைராக்கியத்துடன் குருவைத்தேடுபவனும், நாடுபவனும் ஆகிய சிஷ்யன் முமுக்ஷு எனப்படுவான்.

இத்தகைய முமுக்ஷு நிலையை அடைந்த அடியான் ஒருவன், தனது குருவை எங்கு எப்பொழுது

தேடி அடைவோம் என்று ஏக்கத்துடன் பின்வருமாறு பாடிக்கொண்டு வருகிறான்.

காட்சி. 1

அடியான்: ராகம்: கரகரப்ரிய தாளம்-ஆதி

பல்லவி

குருநாதா அபயம்.......உனதருள்
புரிவாய் இதுசமயம் (குரு)

அனுபல்லவி

பலகாலும் ஜனனம்—ஒருகணம் பிரியா
வன் துயரம்—சிறியேன் அடைந்தனன்
பரிவாய் ஆதரி— (குரு)

சரணம்.

கொடிய சம்சாரம் நெடிய காந்தாரம்
மனக்குரங்கு செய்கோரம்—பவதாபம்
அதிகம் பவஹர அருணாசலம் உரையும்
ப்ரபுவே ஹரிஹரன் அறியா முதல்வனும் (குரு)

—0—

இவ்வாறாக இந்த அடியான் ஓர் நற்குருவைத் தேடிப் பாடிக்கொண்டு வருகையில் அவனது எதிர்த் திசையாக ஓர் வயதுமுதிர்ந்த பெரியார் ஒருவர் ஜகத்குரு சிவானந்த சரஸ்வதி அவர்களின் புகழைப்பாடிப் பஜித்துக்கொண்டே மகிழ்ச்சி முகத்துடன் வருகின்றார்.

காட்சி 2

பாடல் (பெரியாரது) —குருப்ரும்மா குரூர் விஷ்

ணோர் குருதேவோ மஹேஸ்வர: குருசாட்க்ஷாத் பரம்ப்ரும்ம தஸ்மை ஸ்ரீ குரவே நம:

1 காணமலிருக்கலாகாது—கங்கைகரைசென்று
சிவானந்த தனிப் பரஞ்சுடரைக் (காண)
காய கட்டை கடைதேற வேண்டியிருந்தால்
(காண)

2 கோணல் வழியில் செல்லும் மனமே—உந்தன்
குறைதீர்க்கத் தோன்றிய குருவான பரனை
(காண)

3 சென்று தரிசிக்கவேண்டும் – நீ சிவானந்தம்
தங்கும் ஆனந்த குடீரம் (காண)

4 பொங்கும் ப்ரும்மானந்த போதம் (எங்கும்)
அங்கு கங்கை தவழ்ந்தோடும் மங்களம் பாடும்

5 சங்கடங்கள் தானய் ஓடும்—உபசாந்த
மடுவினில் மனம் விளையாடும் தினம் (காண)

6 சித்த ஸுத்தி தரும்பாதம் ஜெகத்ஜோதிஎன
ஒளிர்
ஸத் குருபாதம்—முக்தி தரும் திருப்பாதம்
கண்டு
முக்காலும் ஸேவிக்க ஓடிநீர் வாரும்(காணமல்)

ஓம் குரு ஓம் குரு நாதா ஓம் குரு ஓம் குரு நாதா

(இப்படியாக இவர் பாடிக்கொண்டு வருகிறதைச் செவியுற்ற அடியான் அவரிடம் ஓடி வணங்குகிறன்.)

அடியான்: ஐயா! பெரியவரே நான் ஓர் குருவைத்தேடி ஏற்க நெடுவழியாக விழைந்து வரு

கின்றேன். தாங்கள் பாடிப்புகழ்ந்துவந்த அந்த சிவானந்த மகராஜ் அவர்களைப்பற்றி எனக்கும் எடுத்துக்கூறி என்னைப்புனிதனக ஆக்கவேண்டும் என்று அவரை வணங்கி வேண்டினன்.

(இதைக்கேட்ட பெரியார் அகமகிழ்ந்து) முகமலர்ச்சியோடு அப்பா! எழுந்திரு. உலககுரு வாக விளங்கிவருகின்ற ஸ்ரீ சிவானந்தர் அவர்களைப்பற்றி உனக்கும் தெளியக்கூறுகிறேன்.

(பாடுகிறர்)

அந்தணர் குலத்துதித்து ஆனந்த வடிவெடுத்து விந்தையாய் ஆத்மபோதம் வெளிப்படையாய் உரைத்து கந்தனைப்போல வெற்றிக்கடவுளாய் இருளழித்து

பந்த மதகற்றும் ஞானப்பழந்தனை எமக்களித்த சுதந்திர இமயம்தங்கும் ஜோதியே போற்றி போற்றி! சிவஜோதியே போற்றி!!

தில்லையம்பல—மெட்டு.

சத்குரு சிவானந்த ஜோதியாம்—அதைதான்
அடைந்தால் ஜனன மரணம் இல்லை உறுதியாம்
(சத்)

அனுபல்லவி

கருணைபுரியும் கனிந்த உள்ளமாம்—கலியுகமதில்
கைலைகிரியில் தங்கும் செல்வமாம்— (சத்)

சரணம்.

1 வாரும் வாரும் எனக்கூவி அழைக்குதாம்
—அதை

வந்தடைந்தால் யாரும் காண சுகமளிக்குதாம்
2 அப்பையனென்றோர் ஆதி திகழ்ந்ததாம்
அதன்வழி சிவானந்த சுடர்ஜோதி பிறந்ததாம்
3 துடரும் வினைவேர் தோண்டி எறிந்ததாம்
துரிதமாக ஆண்டியாகி—தவமும் புரிந்ததாம்
கைத்தலக்கனி என்று காட்டிற்றும்—கருணை
பொங்கி காரிருள் தன்னை எங்கும் விரட்டிற்றும்
பக்தரோடு சத்சங்கம் கூட்டிற்றும்—பத்திரி
கையால் பார் முழுவதும் இன்பம் புரட்டிற்றும்
அச்சமில்லை ஓடிவாருமே அதையடைந்து துச்ச
மான உலகைத் தீருமே
நிச்சயம் சுகம் உண்டு பாருமே—நீண்ட கால
நெஞ்சக் குறைகள் நோய்கள் தீருமே (சத்குரு)

சங்கராபரணம்

பஞ்சாட்சரப்-பெயராம் பரம குருநாதன்
பார் புகழும் கங்கைப் பனிவரைதான் நின்று
தினம்
காக்கின்ற நோக்கமுடன் கட்டி ஆனந்த குடீர்
(நம்மை)
பார்க்கின்ற பார்வைதனில் பதினாலு உலகமுடன்
பாதத்தடிப் பொடிக்கீழ் பலபுதுமை காணுதம்மா!

வீரசுதந்திரம் - மெட்டு

1 பரஸாகமெய்யும் படிக்குனக்கருள் செய்யும்
பரமார்த்தத்தைப் பெய்யும்....பாவனமூர்த்தி
பரவியகீர்த்தி—பரமகுரு மூர்த்தி

2 ஆகமவேத புராணங்களால் கண்டு
அறியாநிலை எய்த, பரிவாய், மாநில
குருவாய் தோன்றினர் பரிபூரண மூர்த்தி
3 சமதமமும் உயர் சாந்தமும் தந்திடும்
தன்மய மெய்நிலை நீயே....நீயே...தானென
ஓதிய சமரசனுகிய ஸ்வாமி சிவானந்தா
4 தஞ்சமென்ருல் துன்பம் கொஞ்சமும் அணுகா
சஞ்சலம் சற்றுமில்லை—அந்த கஞ்சனயனன் பக்தி
கைலையில் சோபிக்க காணும்ருதம் செழிக்க
5 தோன்றிய ஜோதி ஸுகநிலை ஓதி
துணைபுரியும் ஆதி—வேதியனுகியவரும்
பவஹாரி, வாஸுதேவஸ்வரூபி...... (பர)

இத்தகைய சிறப்புக்களைக் கொண்ட இந்த ஸத்குரு ஸ்ரீ சிவானந்த ஸரஸ்வதி மகராஜ் அவர்கள் ஹிமயமலை அடிவாரத்தில் கங்கை தவழ்ந் தோடுகின்ற இருடிகேசத்தில் ஆனந்த குடீரில் அற்புத ஜோதியாய்த் திகழ்கின்ருர். மைந்தா! நீ அவரை அடுத்து முக்தி பெற்றுய்வாயாக! என வாழ்த்தினர்.

(அவன் அவரைவணங்கி, ஜயனே! தங்களுக்கு மிகவும் நன்றி எனக்கூறி ஸ்ரீ சிவாவைப்பற்றிப் பாடிக்கொண்டே இருடிகேசத்திற்கு வருகின்ருன்.

கிளிக்கண்ணி—மெட்டு

என்னை அடிமை கொள்வாய் குருநாதா ஏழைக் கிரங்கும் ஜயா

கோழை மதி எளியேன் உலகினில் கோடிவிதம்
பயந்தேன்
எங்கும் நிறைபொருளே சிவானந்தம் தங்கும்
ஆனந்த சுடர்
மங்களம் உன்னடிக்கே எனக்கொரு மந்திரம்
சொல்லும் சிவா (என்னை)
தேடிமிக மெலிந்தேன் குருநாதா ஜன்மபவக்
கடலில்
கூடி உன்னையடைந்தேன் குருநாதா கும்பிட்டு
கை தொழுதேன்
காடுமலைதிரிந்தேன் சிவானந்தா காயாபுரியி
னுள்ளே
வேடிக்கை போதும்ஐயா அறிவிப்பாய் வேணு
கோபாலனிடம்
விண்ணில் ஒளிர் சுடரே சிவானந்த வேதாந்த
நாயகரே
நாதாந்தத்தின் முடிவே நடமாடும் நாகாபரண
சிவா
உன்னை மறக்கறியேன் அன்பர்க்கருள் கண்ணைத்
திறந்த-சிவா
நீ என்னை மறந்திடிலோ புகலிடம் எங்குமில்லை
சிவமே (என்னை)

மானிடப்பிறவி பெற்றும் மனம்போன போக்கில் ஓடி ஞானியாய் மௌனியாகி நடுநிலை அறியாராகி காமமும் கொலையும் சூதும் கர்வமும் மாந்தர் கருத்தழிந்துழலும் வேளை கரை சேர்க்கவந்

தாய் போற்றி போற்றி—போற்றி போற்றி.

மேற்கண்டவாறு ஓர் பக்தன் தனது குடீரத்தின் வெளியினின்றும் பாடுவதைச் செவியுற்ற குருதேவர் வெளியே வந்தார்.

ராகம்: முகாரி தாளம்: ஆதி

பல்லவி

தெரிசனம் தாரும் ஸ்வாமி—ஸமரஸ ஸன்மார்க்க (தரி)

அனுபல்லவி

அபலைக்கு புகல்இடம் அங்குமில்லை-இங்குமில்லை
ஆறுதல் புகல ஒரு அன்பர் இல்லைஐயா எங்கும் (தரி)

சரணம்.

ஸ்ரீ சிவா உன் தஞ்சம்—திவ்யஜீவனம்
செய் உந்தன்—ஐந்தெழுத்தாம்
பெயரில் அடங்கிய தெந்தன் நெஞ்சம்
ஆனந்த குடீரில் தங்கும் அற்புதமே கண்ணிரங்கும் (தரி)

—0—

சத்குருவின் தரிசனம் கிடைத்ததும் பக்தன் மனமகிழ்ந்து அவரைவணங்கிப் பாடுகிறான்.

ராகம்: தன்யாசி தாளம் ஆதி

பல்லவி

கருணை உருவெடுத்து கைலைகிரி வசிக்கும்

காருண்ய குருமூர்த்தி—— (கருணை)

அனுபல்லவி

போதுமையா இந்த பூவுலகின்பம்
ஓதுமையா உண்மையான பேரின்பம்— (கருணை)

சரணம்.

சாந்த மெய்ஞ்ஞான சமரஸமோன
தத்வம் பொழி முகிலே—அண்டியபேர்க்கு
அடைக்கலமாகியே
சிவானந்த நாட்டிற்கு ஆனதிரு ஒளியே—(கருணை)
பயங்கரமான பாதையில் இன்னாள்
உழன்றது தான் போதும்—(அதி)
பாக்கியவசத்தால் பார்த்துமை அடுத்தேன்
பரமானந்த ஸுக கதவைத் திறவுமையா—
(கருணை)

—0—

குருநாதர்: நீங்கள்யார்? எங்கிருந்து வருகிறீர்? தங்களுக்கு யாதுகுறை உள்ளது? என்று வினவினார்.

அடியன்: ஸ்வாமிஜி, இவ்வுலகின் பிறப் பிறப்புத் தன்மையைக் கடந்து முக்திநிலையை எங்ஙனம் பெறுவேன். அஞ்ஞானம் நிறைந்துள்ள இடத்தில் அதை ஒழித்து ஞானத்தை எனக்களிக்க வேண்டும் என இறைஞ்சினன்.

ராகம்: ஆரபி　　　　　　　　　　　　　　　தாளம்: ஆதி

பல்லவி

எதனாலே இந்தப் பிறவிப் பெருங்கடலில்
இருந்து கடைத்தேறவேண்டும்........　　　　　　(எத)

அனுபல்லவி.

அதுவென்றும் இதுவென்றும் அலைந்தநாள்போ
தும் போதும்
குருவும் தெய்வமும் ஆன கோபாலா நீரேபுகல்
(எத)

சரணம்.

வேதாகமங்களெல்லாம் விளம்பும் உண்மைதான்
என்ன
ஏகாந்தமாய் மனிதன் இருப்பதன் பலன் என்ன
மோகாந்தகனுன் பேரை ஜபிப்பதன் பொருள்
என்ன
முழுமுதற் பொருளே சொல் மோட்ச வழிகள்
என்ன (எத)
கர்ம உபாசனையின் கடுந்தவ ஸாதனையின்
உண்மைப் பிரயோஜனங்கள் ஒன்றன்றி இரண்
டாமோ
எப்படியும் வந்துன் தாள் பிடித்தும் வீணுமோ
(எதனாலே)

ராகம்: சங்கராபரணம்

பல்லவி

விழுங்கவருதே அஞ்ஞானம் அதைக்கண்டால்

மழுங்கிப் போகுதே மெய்ஞ்ஞானம்........ (விழு)

அநுபல்லவி

புழுங்கிப் புலன்களுடன் கலங்கி உண்மை மறந்தால்
விடங்கொண்ட பறந்தாள்வாய் விரித்துப்படம் எடுத்து (விழு)

சரணம்.

அகங்காரக் கருந்தேள்கள் அகத்தில் விடாது கொட்டி
அலறடிக்குதே ஐயா கேள் அதைக்கொல்லத்
தெரியவில்லையே மெய்யா கேள்
கரியின் மதம்பிடித்து கலியின் மாயையுள்பட்டு
புலியின் எதிரில் பசுங்கன்றுபோல் அகப்பட்டால் (விழு)

ஆசாபிசாசங்கள் ஆடித்தலைவிரித்து மோசம்
செய்யுதே முக்காலும்——உனையன்றி தாஸன் எனக்கார்
இக்காலம்———
பாசம் பந்தமறுத்துன் பரமபாதத்துள் சேர்த்து
மோசம் செய்யாது காப்பாய் கேசவ குருமூர்த்தே (விழுங்க)

—0—

குருநாதர் மகிழ்ந்து அவனுக்கு முதலில் தியான நிலையை எடுத்தோதுகிறார். பின்பு மகாவாக்ய உபதேசம் செய்கின்றார்.

## இங்கிலீஷ் நோட்

தியானித்துப்பார் அப்பா—தியானித்துப்பார்
சாந்த மனத்துடனே தியானித்துப்பார்— (தியா)
முக்திகூறும் வழியை முனைந்து செய்வாய்
அசுத்த மனதைப் பரிசோதியப்பா—நீ
ச்ரத்தை வைராக்கியக் கத்தி யெடுப்பாய்
தேகப் பற்றுதல்களை வேரோடறுப்பாய்— (தியா)
நித்யானந்தப் புனலில் நீ குளிப்பாயப்பா
அத்யாத்ம யோகத்தில் சதா ஸுகிப்பாய் நீ
மானிட வாழ்வது சூளையைப்போல்
மண்ணாய் மடிவதை உணர்ந்துற்றுப்பார்—நீ
(தியா)

எண்ணுமனமிறக்க மருந்திதோ பார்
இதைவிட ஸாதனம் ஏதுமில்லை பார்—நீ (தியா)
கண்ணால் ஹரிவடிவைக் கனிவுடன் பார் பார்
பெண்ணாசை பொன்னாசை விலக்கிடப் பார்—நீ
(தியா)

கண்ணாடி போலுன்னுள் காணுமப்பா அது
கலக்க இது அறியநெறி இதுஅப்பா (தியா)
சிறக்கப் பத்மாஸனத் திருப்பாயப்பா
திசையை நோக்காதே நாசித்திரு கூடத்தைப்
பார் (தியா)

கற்றறிந்தும் மறப்பதை நிறுத்திக்கொள்வாய்
கருணை குருவருளை நினைத்துக்கொள்வாய் நீ
ஸாதனத்துறுதியாய் பிடித்துக்கொள்வாய்
சதுர்விதப் பதவியை வெறுத்துக் கொள்வாய் நீ
(தியா)

தொடரும் வினைகொடிவேர் அறுத்துக் கொள்
வாய்
அந்த துரிய வெளியில் மனம் நிலைத்துக் கொள்
வாய்
அகண்ட ஸச்சிதானந்தத்தை அறிந்து கொள்
வாய்
அதுவே நீ ஆகிறாய் அதிசயம் பார்—அதிசயம்பார்
(தியானி)

—0—

ராகம்: மத்யமாவதி தாளம்: ஆதி

பல்லவி

ஸத்குருநாதன் வந்து நின்றார்—சகலமும் விண்
டார்
உலகம் பொய் என்றார்— (சத்குரு)

அநுபல்லவி

பக்குவமாய் உள்ளம் பழுத்தது கண்டார்
பரப்ருஹ்ம பாவனை பண்ணலாம் நீயே என்றார்
(சத்குரு)

சரணம்.

1 மெய்ப்பொருள் லட்சணங்கள் கண்டார்
மேலான துண்டார்—(அவர்)
காலம் மூன்றுக்கும் எட்டாதென்றார் (அது)
கைவல்யம் என்றார்
ஐயம் எடுப்பதில் பயனில்லை என்றார்

அக்ஞான மதமோஹம் கொல்லணும் என்ருர்
(ஸத்குரு)

2 மறைக்கும் மாயத்திரைதான் என்ருர்
மனதில் குணம்விடுத்தால்—அது நீ ஆனுய்
என்ருர்
அற்புதம் கண்டால்
உரைக்க முடியாதிதை மறக்காதே என்ருர்
உயர் சச்சிதானந்த பரம்பொருள் நீயே என்
ருர் (ஸத்குரு)

3 எல்லாம் ப்ரதிபிம்பங்கள் என்ருர் எதைப்
பார்த்தாலும்
ஈசன் வாசுதேவன்தான் என்ருர் (இது மெய்
என்ருர்)
அது இது எனச்சொல்லி அலையாதே என்ருர்
அன்புருவே ஜகம் இதை அறிந்து மகிழ்வாய்
என்ருர் (ஸத்குரு)

—0—

இவ்வாருக சத்குருநாதர் அவனுக்கு மகா வாக்ய உபதேசம் செய்து நிஷ்டை கூடச்செய்த பின்பு அவனைநோக்கி அவனது தற்போதைய அநுபவநிலை என்ன? என்று கேட்டார்.
சிஷ்யன் தன்னைத்தானறிந்து கீழ்க்கண்டவாறு பாடுகிருன்.

ராகம்: பைரவி தாளம்: ஆதி

பல்லவி

அதுவல்ல இதுவல்ல ஐம்பூதங்கள் நானல்ல

ஆத்மஸ்வரூபம் நாஞகும் (அதுவல்ல)

அநுபல்லவி

ஸப்தஸ்பரிஸ ரஸ ரூப கந்தங்கள் அல்ல
தானே தாஞகித் தோன்றும் தனிப்பொருள்
நாஞகும் (அதுவல்ல)

சரணம்.

1 வஞ்சமனம் நானல்ல வந்த சரீரமல்ல
பஞ்ச கோசங்களல்ல—பார்க்கப் படுவதல்ல
கஞ்சநயனன் அல்ல கலைமகள் நாதனல்ல
கயிலைகிரியில் வாழும் கடவுளும் நானல்ல—
(அதுவல்ல)

2 ஆண் அல்ல பெண் அல்ல அலியல்ல உருவல்ல
அங்கல்ல இங்கல்ல அறியப்படுவதல்ல
கொம்பல்ல குறியல்ல கூடிப்பிரிவதல்ல
கொல்லப் படுவதல்ல குறைவல்ல நிறைவல்ல
(அது)

3 பிறந்து மறிப்பதல்ல பேரல்ல ஊரல்ல
பெரியோர் சிறியோர் அல்ல புத்தியுந்தானல்ல
ஸத்தஸத்தும் தான் அல்ல ஸகலமும் நானல்ல
ஸத்து சித்தானந்த தனிச்சுடர் நாஞகும்
(அதுவல்ல)

—0—

என்று மனமகிழ்வுடன் பாடி ஆத்மஸ்வரூபத்தை அறிவித்ததும் அவனை குருநாதர் ஆசீர்வதித்து மந்த்ரதீட்சை அளித்தார். சிரத்தின்மேல்

தனது கரத்தை வைத்து ஜீவன்முக்தனுகநீ விளங்குவாயாக எனக்கூறினர். அவனும் அங்குள்ளவர்களுடன் கூடி தனக்கு குருவின் அருள் கிடைத்த பேற்றை நினைத்துப் பாடுகிறான்.

ராகம்: நாதநாமக்ரிய                                   தாளம்: ஆதி

பல்லவி

அதிசயம் கண்டேனே நிரதிசய சுகம் கொண்
டேனே

நான்-(சத்குரு) தரிசனம் கண்டேனே— சிவா
னந்தத் தெள்ளமுதுண்டேனே—— (அதி)

அனுபல்லவி

சதிசெய்யும் மாய்கையின் தளைகளைக் கொய்தேன்
களையின்றி ஆனந்தப் பொய்கையில் துளைந்
தேனே (அதி)

சரணம்.

1 மடமையை வென்றேனே மானிட மாய்கை
யைக் கொன்றேனே
சுடர்ப்பரஞ்ஜோதி ஸ்வரூபம் நான் ஆனேனே
திடமுடன் நின்று விவேக வைராக்யத்தால்
—(அதி)

2 ஒன்ருய் நின்றேனே ஸர்வமும் நன்ருய்க்
கொண்டேனே
புண்டரீகத்தயனும் விண்டுவும் வேறன்றி
எண்டிசையும் நிறைய ஏழைமனம் கரைய—
(அதி)

3 ஹிமகிரி சென்றேனே சிவன் புகழில் இன்
னமுதுண்டேனே
முன்னே கங்கை தவழும் என்னே ஆனந்த
குடீர்
பெண்ணே நமக்கு முக்தி சொன்னேன் விரை
வில் வாராய் (அதி)

—0—

இவ்விதமாக குருநாதரின் புகழ்பற்றிப்பாடி முடித்ததும் அங்கிருந்த அடியார்கள் ஒருவருக்கொருவர் பாடுகிறார்கள்.

ராகம்: பியாக்

சாந்தம் வந்ததோ மனதில் பந்தமகன்றதோ
(சாந்தம்)

சரணம்.

ஸாஸ்திரங்கள் தோறும்உள்ள தர்க்கமுற்றும்
தீர்ந்ததோ
பார்த்ததுப் தான் நேத்திரானந்தப் புனல்பொழிந்
ததோ (சா)
சத்ருவென்றும் மித்ருவென்றும் சந்தேகம் துலைந்
ததோ
சத்குரு சிவானந்தர் சொல் புத்தியில் நுழைந்
ததோ (சா)
கூப்பிட்டுக் குழந்தைபோல கூறுவார் ரகசியம்
கூடி அன்பனுகி நின்று பாடுவார் ஹரிஜபம் (சா)
ரிஷிகேச ஸ்வர்கநிவாஸ இன்பஜோதி கண்டதோ

அண்டபிண்ட முற்றும் மூடி ஆனந்தம் பொழிந்ததோ (சா)
ஸகஜ நிர்விகல்பமாம் ஸமாதி வந்தடைந்ததோ
ஸகல நாடும் போற்றும் திவ்ய ஜீவியம் புரிந்ததோ (சா)

—0—

பிறகு மற்ற எல்லாரும் கூடி ஆனந்த குடீரில் ஒவ்வொருவரும் அடையும் ஆனந்தக் களிப்பைப் பற்றி அங்கிருப்பவர் மட்டுமின்றி உலகின் பல திசைகளிலும் இருக்கும் ஸ்ரீ சிவாவின் பக்தர்கள் அனைவரும் கீழ்க்கண்டபடிப் பாடிப்பாடி இறும்பூது எய்துகின்றனர்.

ராகம்: சிம்மேந்திரமத்யமம் தாளம்: ஆதி

பல்லவி

என்ன ஆனந்தம் இமயமதில் தங்கும் சிவானந்தர்
பாதம் சிந்தைசெய்யச் செய்ய (நமக்கென்ன)

அனுபல்லவி

வாரும் வாரும் எனக்கூறும் உபசாரமும்
யாரும் காணஅரிதான விநயமொழி (என்ன)

சரணம்.

அங்கு பூஜைமணி சங்கநாதத்தொனி
இங்கு அகண்டஜபம் எங்கும் ராமரஸம்
வேதஸார உபதேச க்ளாஸும் ஹரிகீத நாம
சங்கீர்த்தனமும் தினமும் (என்ன)
ஸத்குரு சிவானந்தர் தரிசனமும்

உத்தம சிதானந்தர் பரிஜனமும்
காணக் காணச் சலிக்காது கங்கை தவழ்ந்து
ஓடும் வைபவமும் கூடும் தியானநிலை (என்ன)

மங்களம்

சித்கனானந்த ரூபாய தேஜோன்மய மூர்த்தயே
சிதானந்த சகிதாய ஸ்ரீ சிவானந்தாய மங்களம்....
கங்காதீர நிவாஸாய கருணாமய மூர்த்தயே
வருணாலய கம்பீராய ஸ்ரீ வாசுதேவாய மங்களம்...

—0—

THE TANJORE MAHARAJAH SERFOJI'S SARASWATHI MAHAL LIBRARY + TANJORE +

## AVAILABLE WORKS OF SWAMI SIVANANDA

| | | |
|---|---|---|
| Ananda Lahari | ... | Rs. 2-0 |
| Brahma Sutras—Part II | ... | 5-0 |
| Blood Pressure | ... | 2-0 |
| Constipation, Its Cause and Cure | ... | 2-0 |
| Guru and Disciple | ... | 4-0 |
| History of Indian Music (By Ramasaranananda) | | 2-0 |
| Sraddhanjali | ... | 2-0 |
| Philosophy and Teachings | ... | 3-0 |
| Sankirtan Yoga | ... | 1-8 |
| Sivananda Hridayam | ... | 1-0 |
| Tantra Yoga, Kriya Yoga and Nada Yoga | | 5-0 |
| Voice of Sivananda | ... | 3-0 |
| Yoga-Vedanta Sutras | ... | 1-8 |
| Yoga and Realization | ... | 3-0 |
| Yoga for the West | ... | 1-8 |
| Bhagavad Gita (Text and Translation) | ... | 1-0 |

**Biographies**

| | | |
|---|---|---|
| Jagadguru Sivananda | ... | 2-0 |
| Yogi Sivananda | ... | 5-0 |
| Sivananda, the Lord Incarnate | ... | 1-0 |
| —the World Saviour | ... | 2-0 |
| —the Prophet of Divine Life | ... | 2-8 |
| —the Modern World Prophet | ... | 6-0 |
| —Day-to-Day (Latest Part) | ... | 1-0 |
| —the Enlightened | ... | 2-0 |
| —and Divine Life | ... | 4-0 |
| —Psalms of | ... | 2-4 |
| —Simposium on the Palm of | ... | 2-0 |

*The Manager, The Sivananda Publication League,*
*P.O. Sivananda Nagar, Rishikesh ( Himalayas ).*

*The service Dearest to the Lord!*

# JNANA YAJNA

## DISSEMINATION OF SPIRITUAL KNOWLEDGE

*Sri Swami Sivanandaji has been rendering this Service for over quarter of a Century*

AND PROVIDED YOU WITH GLORIOUS OPPORTUNITIES TO SHARE THE GLORY, THE BLESSINGS AND THE GRACE

**You can have a book printed in YOUR NAME and out of YOUR DONATION. Millions will be benefited. OVER FORTY BOOKS AWAIT PUBLICATION**

Approximate cost of printing a book:

Rs. 500 to 1000.

THE NEED IS GREAT AND THE GLORY IS GREAT

# AYURVEDIC MEDICINES AND TONICS

| | *Price* |
|---|---|
| Shilajit | Two Tolas Rs. 3-0 |
| Chyavanaprash | Rs. 2-10, 5-4 and 10-8 |
| Chandra Prabha | Per Tola Rs. 2-2 |
| Brahmi-Amla Medicated Oil | Rs. 2-0 & 4-0 |
| Vasant Kusumakar | Per Masha Rs. 3-12 |
| Brahmi Vilas Choorna | As 0-8-0 & Re. 1-0 |
| Brahmacharya Sudha | Re. 1-0 & Rs. 2-0 |
| B.M.K. Trichoorna | As. 0-8-0 & Re. 1-0 |
| Brahmi Leaves | Re. 2-1 |
| Sivananda Tooth-Powder | As. 0-8-0 & Re. 1-0 |
| Pada Raksha Malam | As. 0-8-0 & Re. 1-0 |
| Chandrakanti Lepan | Re. 1-2 & Rs. 2-4 |
| Dashamoolarishta | Rs. 3-0 |
| Ashokarishta | Rs. 2-12 |
| Cureczema | Rs. 2-8 |
| Kshudha Vardhak Choorna | As. 0-8-0 & Re. 1-0 |
| Balajivanamrita | Re. 1-12 |
| Madhumeha Nivarak | Rs. 2-0 & 4-0 |
| Pure Himalayan Honey | Per lb. Rs. 3-0 |
| Arjunarishta | Rs. 2-12 |
| Brahmi Syrup | Rs. 3-4 |
| Netra Jyoti Surma | As. 0-12-0 & Re. 1-8 |
| Maha-Yogaraj Gugulu | Rs. 2-8 |
| Triphala Powder | Per lb. Rs. 3-0 |

**The Sivananda Ayurvedic Pharmaceutical Works,**

P. O. Sivananda Nagar, Rishikesh, U. P.

SERFOJI'S SARASWATHI MAHAL LIBRARY